பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

17-23 ஒக்ரோபர் 2018
வாரஇதழ்

Raja Bojun
Sri Lankan Buffet
Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk








# சிவராம் குடித்த கூழ்

● கருணாகரன்

"தராகி" என்ற தர்மரத்தினம் சிவராமைச் சிலருக்கு நினைவிருக்கலாம். பலர் மறந்து விட்டிருக்கக் கூடும். ஆனால், 1990 களின் முற்பகுதியில் தராகியின் இராணுவ ஆய்வுக் கட்டுரைகளுக்கு தனி மதிப்பிருந்தது. அப்பொழுது தராகி கொழும்பிலிருந்து கொண்டு "த ஐலண்ட்" பத்திரிகையில் எழுதினார்.

இலங்கை இராணுவத்துக்கும் புலிகளுக்கும் உச்ச மோதல்கள் நடந்து கொண்டிருந்த நாட்கள் அவை. யாருக்கு வெற்றி என்று மதிப்பிட முடியாத நிலையில் களநிலவரம் இருந்தது. சில இடங்களில் புலிகளின் கை ஓங்கும். சில இடங்களில் படைகளின் கை ஓங்கும். அநேகமாகப் புலிகளை எதிர்கொள்வதற்குப் படையினர் திணறிக் கொண்டிருந்தனர். புலிகளின் முதுகெலும்பை முறிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் அதை எப்படிச் செய்வது எனப் படைத்தலைமையும் அரசாங்கமும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தன.

இந்தச் சூடான களநிலவரத்தைப் பற்றி இக்பால் அத்தாஸ், தராகி சிவராம் போன்றவர்கள் போட்டிபோட்டு எழுதிக் கொண்டிருந்தனர். இருவருடைய கட்டுரைகளையும் புலிகளும் கூர்ந்து படித்து வந்தனர். படைத்தரப்பும் படித்தது. ஒரு கட்டத்தில் தராகி எழுதினார், "மன்னார் வழியாகப் படைத்தரப்பு யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்வதற்குத் திட்டமிடுகிறது. இந்த வழியாக நகர்ந்தால் படைகளுக்குப் பல அனுகூலங்கள் உண்டு. மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வழி என்பது பெரும்பாலும் பெரிய வெளிகளையும் சிறிய பற்றைக் காடுகளையும் சிற்றூர்களையும் கொண்டது. இது மரபு வழி இராணுவத்தாக்குதலுக்கு - படையினருக்கு - வாய்ப்பாக இருக்கும். இப்படி நகரும் படையினரைத் தடுப்பது புலிகளுக்குச் சவாலாக அமையும். புலிகளுக்கு பெரும் இழப்புகளையும் ஏற்படுத்தும்" - என்று இந்தக் கட்டுரை 1994 இல் வந்திருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் அரை நிர்வாகக் கட்டமைப்போடு புலிகளிருந்தனர்.

இதைப் படித்த புலிகளுக்கு, "இராணுவத்துக்குப் புத்தி சொல்கிறாரா தராகி?" என்று சிவராமின் மீது உச்சக் கோபம் ஏற்பட்டது. புலிகளுக்குப் பகையான புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற அடையாளத்தோடிருந்த தராகியை அவர்கள் உடனே அரசாங்கத்தோடும் இணைத்துப் பார்க்க முற்பட்டனர். தராகி எழுதியதைப்போலவோ எதிர்பார்த்ததைப் போலவோ படையினர் மன்னார் வழியாகத் தாக்குதலைச் செய்யவில்லை. பலாலி, ஆனையிறவு என்ற இருமுனைகளின் வழியாக யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டனர். (பிறகுதராகிசொன்னதைப்போலவே, 2007 இல் மன்னார் வழியாகவே இந்த நடவடிக்கையைப் படைத்தரப் மேற்கொண்டது. அதிலே வெற்றியும் படைத்தரப்புக்குக் கிட்டியது).

இதனால் 1995 ஒக்ரோபரில் புலிகள் யாழ்ப்பாணத்தை இழக்க வேண்டியிருந்தது. தொடர்ந்து புலிகள் கிளிநொச்சியையும் இழந்தனர். இதெல்லாம் புலிகளுக்குப் பின்னடைவாகவே இருந்தன. இதைத் தாக்குப்பிடிப்பதற்கு அவர்கள் முல்லைத் தீவுப் படைத்தளத்தைத் தாக்கிப் பெரிய வெற்றியைப் பெற்றிருந்தாலும் 1997 இல் தொடங்கிய "ஜெயசிக்குறு" படை நடவடிக்கை புலிகளுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்தது. அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு நிலை வளர்ந்து கொண்டிருந்தது. இந்த நாட்களில் அத்தாசும் சிவராமும் என்ன எழுதுகிறார்கள் என்று புலிகளின் தளபதிகளே அறிவதற்கு ஆவலாக இருந்தனர். (இந்த ஆவலுக்காக பிரபாகரனுக்கு இந்தக் கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டன) இருவருடைய இராணுவ ஆய்வுகளும் புலிகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் எரிச்சலையூட்டியதுமுண்டு. ஆனாலும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்தன. ஒரு கட்டத்தில் புலிகளின் எதிர்ப் பட்டியலில் தராகியும் இடம்பெற்றார்.

ஆனால், இது நீடிக்கவில்லை. அல்லது இதை மாற்றிப் போட்டார் தராகி.

"ஜெயசிக்குறு" படை நடவடிக்கையை "ஓயாத அலைகள்" நடவடிக்கை மூலம் முறியடித்து, ஆனையிறவுப் படைத்தளத்தையும் கைப்பற்றினர் புலிகள். இது புலிகளுக்குப் பெரிய வெற்றியாக - பெரும் இராணுவச் சாதனையாக - அமைந்தது. இதைப் பார்த்துப் பலரும்திகைத்துப்போனார்கள். தராகியும் திகைத்தார். அதற்கு முதல் வாரம்வரை - அதாவது ஆனையிறவுத் தளம் வீழ்ச்சியடைவதுவரை - "இராணுவத்தின் கை ஓங்குகிறது" - என்று எழுதி வந்தவர், இப்பொழுது "படையின் முதுகெலும்பு உடைந்து விட்டது. புலிகள் தேசிய இராணுவமாக - தமிழர்களின் மரபுப்படையணியாக-வளர்ச்சியடைந்து விட்டனர்" - என்று எழுதினார். என்றாலும் புலிகளைப் பற்றிய - அவர்களுடைய அரசியல் முறைமை பற்றிய - தராகியின் எண்ணங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. தராகியைப் பற்றிய புலிகளின் குறிப்பேட்டிலும் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை.

ஆனால், 2002 ஏப்ரல் 10 இல் பிரபாகரன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிற்கு சிவராம் சர்வதேச ஊடகவியலாளர்களுடன் இணைந்து கிளிநொச்சிக்கு வந்திருந்தார். அப்படி வந்தவர் கிளிநொச்சியைச் சுற்றிப் பார்த்தார். கிளிநொச்சியைச் சுற்றிப் பார்த்தவருக்கு சில அதிர்ச்சிகள் ஏற்பட்டன. முக்கியமாகப் புலிகளின் "அறிவு அமுது" புத்தகக் கடையில் அவர் பார்த்த புத்தகங்கள். பெரியார் தொடக்கம், மாக்சிஸ், இடதுசாரியப் புத்தகங்களின் பெருந்தொகை. போதாக்குறைக்குச் சோபாசக்தியின் புத்தகங்கள், கோவிந்தன் எழுதிய 'புதியதோர் உலகம்' உள்பட இன்னொரு வகை. அருகில் சரிநிகர், தினமுரசு என புலிகளுக்கு எதிர்நிலையில் நிற்கும் பத்திரிகைகள்.

இதையெல்லாம் எப்படிப் புலிகள் அனுமதித்தனர்? என்று திகைத்துப்போனார் தராகி. "புலிகளுக்கு எப்படி இந்த ஞானோதயம் ஏற்பட்டது?" - என்ற கேள்விகள் எழுந்தன. தான் நினைத்திருக்கும் புலிகள் வேறு. இங்கே நடைமுறையில் உள்ள புலிகள் வேறா? என்ற குழப்பம் ஏற்பட்டது.

இதைப்பற்றி அங்கே தனக்குத் தெரிந்தவர்களைத் தேடிச் சென்று விசாரித்தார். "கிளிநொச்சியில் மட்டுமல்ல, வன்னி முழுவதிலும் இதுபோல பத்துப் பன்னிரண்டு கடைகளைப் புலிகள் திறந்திருக்கிறார்கள். இதைவிட கிராமங்களில் உள்ள மாவீரர் படிப்பகங்களிலும் இந்த மாதிரிப் புத்தகங்கள் போடப்பட்டுள்ளன. இதைவிட இந்தப் புத்தகங்களைக் கூடுதலாக வாங்கிப் படிப்பது போராளிகளே" என்று சொல்லப்பட்டது அவருக்கு. "இந்தக் கடைக்கு யார் பொறுப்பு?" என்று விசாரித்த தராகி, அறிவு அமுது" வுக்குப் பொறுப்பான இளங்கோவை (ரமேஸ்) சந்தித்தார். ரமேஸ் பெரியாரியவாதி. தமிழ்ப்பற்றாளர். இதெல்லாம் தராகிக்கு மேலும் வியப்பையளித்தது. தராகிக்கும் பெரியாரில் பெரிய ஈடுபாடுண்டு. மேலும் தமிழ்மொழியிலும் இலக்கியத்திலும் ஆர்வமிருந்தது. இளங்கோவோடு பேசிய தராகிக்கு மேலும் ஆச்சரியங்கள்.

இதற்குப்பிறகு, கொழும்புக்கு போன தராகியின் கட்டுரைகளில் பெரிய மாறுதல்கள் ஏற்படத்தொடங்கின.

புலிகள் கருத்தியல் ரீதியிலும் புதிய - முற்போக்குப் பார்வையைக் கொண்டிருக்கிறார்கள். வெளியே கட்டமைக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயங்களுக்கு மாறாக நடைமுறையில் பல நல்ல விடயங்களைச் செய்கிறார்கள். பன்மைத்துவ வாசிப்புக்கு இடமளிக்கிறார்கள். இது எதிர்காலத்தில் நல்லதொரு ஜனநாயகச் சூழலைத்திறக்கும். தமிழ்த்தேசியம் என்பது இதன்வழியே கட்டமைக்கப்படும்போது சிறப்பாக இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

தொடர்ந்து தராகியின் கட்டுரைகள் புலிகளுக்கு ஆதரவான சாய்வு நிலையைக் கொள்ளத் தொடங்கின. ஒரு கட்டத்தில் தராகி "த ஐலண்ட்" பத்திரிகையில் எழுதுவதைக் கைவிட்டார். அல்லது குறைத்துக் கொண்டார். அல்லது தராகியின் கட்டுரைகளை "த ஐலண்ட்" பத்திரிகையில் பிரசுரிக்க முடியாத நிலை அவர்களுக்கே உருவானது. இந்த வளர்ச்சி அப்படியே "தமிழ் நெற்" வரை சென்றது. தமிழ் நெற்றில் தமிழர்களுடைய மெய் நிலையை வெளிப்படுத்தவேண்டும். இதன் மூலமாக சர்வதேச சமூகத்திற்கு தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் அரசின் ஒடுக்குமுறையையும் அறியப்படுத்தலாம் என்று முயன்றார். கூடவே தமிழ் ஊடகத்துறையை அறிவுபூர்வமாக சர்வதேசத்தரத்துக்கு வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் விரும்பினார்.

இதெல்லாம் மெல்ல மெல்லத் தராகியைப் பற்றிய புலிகளின் மதிப்பீட்டில் புதிய நிலையை உருவாக்கின. இந்த வளர்ச்சி தராகிக்கும் புலிகளுக்குமிடையிலான நெருக்கத்தை உண்டாக்கியது. ஒரு கட்டத்தில் புலிகளின் முக்கிய தளபதிகளும் தராகியும் கூடிக் கூழ் குடிக்கிற அளவுக்குச் சென்றது. தராகிக்கும் புலிகளுக்கும் இடையிலான நெருக்கம் கூடி நட்பாக வளர்ந்த போது, புலிகளில் ஒரு சாராருக்கு தராகியின் ஆலோசனைகள் சரியென்று படத் தொடங்கியது.

அது சமாதானப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்த காலம்.

"சமாதானப் பேச்சுகளின் வழியே அமெரிக்கா புலிகளைத் தோற்கடிக்க முயற்சிக்கிறது. இதற்காக அது நோர்வேயைப் பயன்படுத்துகிறது. இதையே அது பலஸ்தீனத்திலும் செய்தது. புறத்தோற்றத்துக்கு பலஸ்தீனத்தில் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகவும் யாஸீர் அரபாத் வெற்றியடைந்ததைப்போலவும் தெரியலாம். ஆனால், ஒஸ்லோ உடன்படிக்கையின் மூலம் பலஸ்தீன விடுதலைப்போராட்டம் பலவீனப்படுத்தப்பட்டதே நடந்தது. ஒஸ்லோவின் பொறியில் அரபாத் சிக்கினார். அதைப் போல ஈழப்போராட்டத்தையும் தோற்கடிப்பதற்கு நோர்வே மூலமாக அமெரிக்க - இந்தியக் கூட்டு முயற்சிக்கிறது" - என்றார் சிவராம். இது புலிகளின் தரப்பில் சமாதானப் பேச்சுகளில் தலைமை வகித்துக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கத்துக்கு நெருக்கடியை உண்டாக்கியது. புலிகளிடையே இரண்டு அபிப்பிராயங்கள் மேலெழுந்தன. ஒரு தரப்பு அன்ரன் பாலசிங்கத்தை ஆதரித்தது. மறு தரப்புத் தராகி சொல்வதையிட்டு யோசித்தது. இதனால் அவர்கள் மேலும் தராகியை நெருங்கினர். இதைப் பயன்படுத்தி தராகியும் புலிகளுக்குள் நுழையத்தொடங்கினார்.

இந்த வளர்ச்சியானது, ஒரு காலம் புலிகளின் எதிர்ப்பட்டியலில் இருந்த தராகியை இடம்மாற்றி நட்புச் சக்தியாக நெருக்கமாக்கியது. மறுவளத்தில் அரசு, தராகியின் பெயரை எதிர்ப்பட்டியலில் ஏற்றியது. வன்னியில் புதிய ஞானோதயம் பெற்று விட்டார் தராகி என்று சிங்கள விமர்சகர்கள் குறிபிடுமளவுக்கு நிலைமைகள் மாறின.

விளைவாக 28 ஏப்ரல் 2005 முன்னிரவில் கொழும்பிலே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் சிவராம். கொழும்பில் கொல்லப்பட்ட தராகியை வன்னியில் - கிளிநொச்சியில் புலிகள் "மாமனிதர்" என மதிப்பளித்தனர்.

ஆனால், இதெல்லாம் நீடிக்கவில்லை. அடுத்து வந்த நான்காண்டுகளுக்குள் புலிகளுமில்லை. ஒஸ்லோ உடன்படிக்கையும் இல்லை. அன்ரன் பாலசிங்கமும் இல்லை. இன்று தராகியுமில்லை என்றாகியது.

அதுவரையுமிருந்த அரசியல் - இராணுவ ஆய்வுகள் எல்லாம் நகைப்புக்கிடமாயின. வரலாறு இப்படி எத்தனை சுவாரசியங்களைத் தன்னுடைய மடியில் ஏந்தி வைத்திருக்கிறது! ■

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# விளங்க முடியாத சூத்திரமும் விலையேற்றமும்

ஒரு மாத இடைவெளியில் இன்னொருமுறை எரிபொருள்களின் விலையை அதிகரித்து மக்ளின் வெறுப்பை அதிகப்படுத்தியிருக்கிறது மைத்திரி – ரணில் கூட்டரசு. உலக சந்தையில் மசகு எண்ணெய் அதிகரிப்பு, டொலருக்கு எதிரான ரூபாவின் வீழ்ச்சி என்று எரிபொருள் விலை அதிகரிப்புக்கான 'முன்னோட்டத்தை' விட்டு, கடைசியாக 6 ரூபாவால் பெற்றோலின் விலையை அதிகரித்து தன் கைங்கரியத்தைக் காட்டியே விட்டது.

ஆனாலும் 2015 இல் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 157 ரூபாவாக இருந்து, மைத்திரி–ரணில் கூட்டரசின் புண்ணியத்தில் அது சடுதியாகக் குறைக்கப்பட்டது. இதனால் புதிய அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை பிறந்திருந்தது. ஆனால் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது போல, இந்த நல்லாட்சி அரசும், பழைய அரசின் பாதையில் பயணித்து மக்களின் நாளாந்த வாழ்தலின் சுமையை அதிகரிக்கத் தொடங்கியது. ஊழலும், சுரண்டலும் தலைவிரித்தாடுவதையும் இந்த அரசு கைகட்டி வேடிக்கை பார்த்தது. ஊழல் பெருச்சாளிகளை தன் சட்டைப் பொக்கற்றுக்குள் போட்டபடிதான் இன்னமும் நல்லாட்சி அரசு வலம் வந்து கொண்டிருக்கிறது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியாக மத்திய வங்கியிலேயே கை வைத்து அதனை வழித்துத் துடைக்குமளவுக்கு வல்லமை கொண்ட இந்த ஊழல் பெருச்சாளிகளுக்குத் துணை புரிந்தது மாத்திரமல்லாமல், அவர்கள் பத்திரமாக நாட்டை விட்டு வெளியேறவும் வழியமைத்து, இன்று வரை அவர்கள் எங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டிக் கொடுக்காமலும், தன் ஊழல் விசுவாத்தை மைத்திரி – ரணில் கூட்டணி பகிரங்கமாகக் காட்டி வருகின்றது. வாக்களித்த மக்களுக்குக் காட்ட வேண்டிய விசுவாசத்தை, நாட்டைக் கொள்ளையிட்ட கும்பலுக்கு ஓர் அரசு காட்டி வருவது உலகில் வேறெங்கும் நடக்காத ஒன்றுதான்.

இந்த நிலையில், காலியாகிக் கிடக்கும் மத்திய வங்கியின் கஜானாவை கொஞ்சமேனும் நிரப்ப, மீதமாக இருக்கும் மக்களின் குருதியையும் உறிஞ்ச வேண்டிய கட்டாயம் அரசுக்கு. இல்லாவிட்டால் நாட்டை சீனா போன்ற நாடுகளுக்கு மொத்தமாகக் குத்தகைக்கு விடவேண்டும். அதை விட, மக்களைக் கசக்கிப் பிழிவது நல்லாட்சி அரசுக்கு கைவந்த கலை என்பதால், அந்த வழியையே தேர்தெடுத்து, படிப்படியாக ஒவ்வொரு பொருட்களின் விலையையும் கூட்டிக்கொண்டே வருகிறது. குறிப்பாக எரிபொருளின் விலையை 'சர்வதேச எரிபொருள் சூத்திரத்துக்கு 'ஏற்பவே அதிகரிக்க வேண்டியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் நிதியமைச்சான மங்கள சமரவீரவோ, அப்படியான சூத்திரம் குறித்து தனக்கு எவ்விதத் தெளிவும் இல்லை என்று ஒப்புக் கொண்டுள்ளார். அப்படிச் சொன்ன இரவே இன்னொரு முறை எரிபொருள் விலையை ஏற்றவும் செய்துள்ளார். இதன் மூலம் இலங்கையில் எரிபொருள் விலையேற்றத்துக்கும், சர்வதேச எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று மங்கள சமரவீர உணர்த்தியுள்ளார். ஏனெனில் அவருக்கே விளங்காத ஒரு சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் விலையேற்றத்தைச் செய்திருக்க முடியாது. எனவே அவருக்கு விள்ங்கிய வேறு காரணிகளின் அடிப்படைகளிலேயே இந்த விலையேற்றம் நிகழ்ந்திருக்க முடியும்.

இதைவிட வேடிக்கை என்னவென்றால், கடந்த நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், மதுபானங்களின் விலை சடுதியாகக் குறைக்கப்பட்டிருந்தது. அவை இதுவரை ஒரு சதம் கூட உயர்த்தப்படவில்லை. எல்லோரும் மதுவில் மூழ்கி, தன்னிலையை மட்டுமல்லாது, இது போன்ற விலையேற்றங்களையும் உணராதிருக்கவே இப்படி மதுபான விலையில் அரசு கைவைக்கவில்லை போலும். நாட்டுக்குத் தீங்கானவற்றுக்கு விலையை உயர்த்தாமல், அத்தியாவசியமான பொருட்களின் விலைகளை மட்டும் உயர்த்திக் கொண்டே செல்லும் அரசு, எப்படி மக்களின் மனங்களை வெல்ல முடியும்?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

■ மு.மனோகர் (பஷீர் காக்கா)

# பிரபாகரனாக மாற உங்களால் முடியாது!

ஒவ்வொருவர் வாழ்விலும் மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறுவதுண்டு. அந்த மறக்க முடியாதவற்றில் விரும்பியவை மட்டுமல்லாமல் விரும்பத்தகாத சம்பவங்களும் நடைபெறுவதுண்டு. துக்கம் விசாரிப்பது போன்ற பாணியில் விபத்தாக அண்மையில் நடந்த சந்திப்பொன்று என்னைப் புரட்டிப்போட்டுவிட்டது. சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் அந்த முகத்தைச் சந்தித்தேன். 1981இல் மதுரை திருப்பரங்குன்றத்தில் ஒரு கல்யாணமண்டபத்தில் எனக்கு உடற்பயிற்சியை வழங்கிய ராகவன் என்பவரே அவரா்வார். அவர் அண்மையில் நான் தொண்டு செய்யும் கனகபுரம் சிவன் ஆலயத்தை நாடி ஒரு ஊடகவியலாளருடன் வந்தார்.

அவருக்கும், மு.நித்தியானந்தன், அவரது துணைவியராக இருந்த நிர்மலாவுக்கும் இயக்கத்தோடு (புலிகளோடு) உடன்பாடில்லாமல் போனதுக்குப் பின்னர் 30.09.2018 அன்றுதான் அவரைக்கண்டேன். இந்த இடைப்பட்ட காலத்தில் இந்தியச்சிறை, இந்திய இராணுவச்சிறை, 2009க்ளுப் பின்னரான சுமார் ஐந்து வருடகால தடுப்பு வாழ்வு முதலானவற்றில் நான் இருந்த போது, கடித மூலம் கூட இவர் எனது நிலையை அறிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. ஆனால் மு.நித்தியானந்தன் அப்படியல்ல. அவர் தேசத்தின்குரல் பாலசிங்கத்தை சந்திக்க வந்த போது என்னுடன் உரையாடியுள்ளார். சமாதான காலத்தில் இடம்பெற்ற கருணாவின் பிளவின் போது ஏற்பட்ட நிலை தொடர்பாக ஈழநாதம் பணிமனைக்குத் தொடர்பெடுத்து அந்தச் சோதனையான நிலை குறித்து மு.நித்தியானந்தன் வருத்தம் தெரிவித்தார். நான் தடுப்பிலிருந்தபோது பலரிடம் என்னைப்பற்றி விசாரித்துள்ளார். நான் விடுதலையானதை அறிந்தவுடன் "நீங்கள் வெளியில வந்ததெண்டு கேள்விப்பட்டன். உடன எனக்குச் சரியான சந்தோசம். நான் உடன நிம்மிக்கு கோல் எடுத்துச் சொன்னன்" என்று சொன்னார். எனக்கு ஆச்சரியம். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள முதலாவது ஆளாக நிம்மிதான் அவருக்குத்தெரிந்திருக்கிறதே என்று. (நிம்மி என்று அவர் சொன்ன நிர்மலா இப்போது அவருடன் இல்லை) அடிமனதில் அவருக்கு அந்தக் காதல் பசுமையாக (அவருக்கு மட்டுமே) உறைந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டேன்.

23.09.1983 மட்டக்களப்புச் சிறையிலிருந்து பல்வேறு இயக்கத்தவரும் கூட்டாகத் தப்பினர். இம்முயற்சியின் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. புலிகள் சார்பானோருக்கு சிறைக் காவலரைக் கட்டி வாயில் பிளாஸ்டர் ஒட்டும் பொறுப்பு. நிர்மலாவை மீட்கும் பொறுப்பு புளொட் மாணிக்க தாசனுக்கு. ஏனையோர் அனைவரும் (டக்ளஸ் உட்பட) தத்தமது பொறுப்புக்களை நிறைவேற்றினர். வெளியில் வந்த பின்னர்தான் நிர்மலாவை மீட்கவில்லை என்ற விடயம் நித்தியானந்தனுக்குத் தெரிந்தது.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியராக நித்தியானந்தன் பொறுப்பேற்ற சமயத்தில் பலமுறை அவரைச் சந்திக்கமுடிந்தது. அப்போதெல்லாம் நிர்மலா பற்றி பேச்செடுத்தாலே கண்ணீர் சொரிவார். சில நிமிடம் மௌனமாக இருப்பார். நிர்மலாவை உள்ளே விட்டு, தான் வெளியே வந்து விட்டேனே என்ற குற்றஉணர்வுடன் எம்முடன் உரையாடுவார். தலைவர் ஒரு சமயம் "நிர்மலா சிறையில் இருப்பது எங்களுக்கு (இயக்கத்துக்கு) கௌரவப் பிரச்சினை" என்று சொன்னார். இந்த இரு விடயங்களும் நினைவில் இருக்கவே ஏதோ ஒரு வழியில் நிர்மலாவின் விடுவிப்பு சாத்தியமாயிற்று. பலரது ஒத்துழைப்பும் இதற்குக் கிடைத்தது. நிர்மலா தமிழகம் சென்றார். அதற்குப் பிறகு நடந்த சம்பவங்கள் மகிழ்ச்சியளிப்பன அல்ல. குறிப்பாக நட்புக்குத் துரோகம், நித்தியானந்தனின் ஆழமான காதலைப் புரியாமை போன்றவை சங்கடப்படுத்தினாலும் யாரும் எதுவும் செய்யமுடியாத நிலை. அப்போதும் நித்தியானந்தன் மீதான எனது மதிப்புக்குறையவில்லை. மலையகத்தை பூர்வீகமாகக் கொண்ட அவர் தனக்கு ஆபத்து வரும் என்று தெரிந்திருந்தும் பல்வேறு சம்பவங்களில் போராட்டத்துக்கு உதவியுள்ளார். தவறுதலான துப்பாக்கிச் சூட்டில் எமதுமதிப்புக்குரிய சீலன்(சாள்ஸ் அன்ரனி) நெஞ்சில் காயமடைந்திருந்த போது வைத்திய சிகிச்சைக்காக தமிழகத்துக்கு அழைத்து வந்தவர் நித்தி என்பதும் ஒரு கூடுதல் காரணம்.

தொடர்ந்து விடுதலைப் போராட்ட வரலாற்றில் பாய்ச்சல் ஒரு தனிநாட்டுக்குரிய கட்டமைப்புடன் இயக்கம் காவல்துறை, பல்வேறு படையணிகள், கடற்படை, விமானப்படை, அனர்த்த முகாமைத்துவம், கலைஞர்கள், எழுத்தாளர்கள், பங்களிப்பு, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி,திரைப்படத்துறை உள்ளடங்கலாக இருந்த காலம் பற்றி ராகவனால் புரிந்துகொள்ள முடியாது என்பது யதார்த்தமே. ஒரு குழந்தையின் மழலையை நேரில் கேட்டால்தான் அந்த மகிழ்ச்சியை உணர முடியும். குழந்தை இப்படி பேசியது என்று பெரியவர்கள் விளக்கும்போது அதன் இனிமையை உணரமுடியாது.அதைப் போலத்தான். பிரபாகரன் எதிர்ப்பு என்ற கண்ணாடியை அணிந்திருக்கும் போது உண்மை காணாமற் போயிருக்கலாம் அவருக்கு.

சரணடைவு என்பதைப்பற்றி 2009க்கு முன் எவரும் கற்பனைசெய்து கூடப் பார்க்கவில்லை. ஏதோ ஒரு வகையில் நடைப்பிணமாகவே நாங்கள் எல்லையைத் தாண்டினோம். ஏற்கனவே கைதாகி பல ஆண்டுகளாக சிறையில் இருந்தோர் "நீங்கள் ஏன் சைனட் கடிக்கவில்லை?" என்று கேட்டபோதெல்லாம் கூனிக்குறுகினோம். சைனட் கடித்த ஒவ்வொருவரின் நினைவும் மற்றவர்களைப்போல என்னையும் சித்திரவதை செய்தன. எப்படியோ மூன்று உயர் நீதிமன்றங்கள் (யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு) நான்கு வழக்குகளைச் சந்தித்தபின் விடுதலையானேன். நடக்கும் சில விடயங்கள் தொடர்பாக ஒரு மாவீரரின் தந்தை என்ற வகையிலும் ஒரு மகனை எறிகணைத் தாக்குதலிலும் இழந்தவன் என்ற முறையிலும் சிலவற்றைத் தவிர்க்க முடியாமற் சொல்ல வேண்டி ஏற்பட்டது. அந்த வகையில் தான் ராகவன் என்னைச் சந்திக்க முயன்றிருக்கிறார் போலுள்ளது.

அன்று வழக்கம்போல துப்புரவு செய்தல், பூப்பிடுங்குதல் போன்ற பணிகளை முடித்து விட்டு பிதிர்க் கடன் செய்வதற்காக காத்திருந்தேன். புரட்டாதி மாதத்தில் நம் முன்னோர்களுக்காக மாசியம் (மாளையம் என்றும் சொல்வர்) கொடுப்பதற்காக அதிகாலை மூன்று மணிக்கே எழும்பி பணிகளில் ஈடுபட்டிருந்தேன்.

> **சரணடைவு என்பதைப்பற்றி 2009க்கு முன் எவரும் கற்பனை செய்து கூடப் பார்க்கவில்லை. ஏதோ ஒரு வகையில் நடைப்பிணமாகவே நாங்கள் எல்லையைத் தாண்டினோம். ஏற்கனவே கைதாகி பல ஆண்டுகளாக சிறையில் இருந்தோர் "நீங்கள் ஏன் சைனட் கடிக்கவில்லை?" என்று கேட்டபோதெல்லாம் கூனிக்குறுகினோம். சைனட் கடித்த ஒவ்வொருவரின் நினைவும் மற்றவர்களைப்போல என்னையும் சித்திரவதை செய்தன.**

(13 பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
17 - 23 ஒக்ரோபர் - 2018



# இப்படி இருந்தால் எப்படி?

■மலர்மகன்

22 ஜூலை 2018

யாழ்.இந்துக் கல்லூரியின் சபாநாதன் மண்டபத்திலே தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பரபரப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. அன்றைய விழாவின் முக்கியஸ்தர்களாக இருவர். இருவருமே நேரெதிர்க் கொள்கைகள் கொண்டவர்கள்.

ஒருவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றையவர் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

அன்றைய நிகழ்வில் நம் கல்வி சம்மந்தமாக இருவரும் முன்வைத்த கருத்துக்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. அவசியம் செய்யப்பட வேண்டியவை. அந்தக் கருத்துக்கள் இவைதான்.

"மத்திய அரசு, கல்வித்துறையில் வேறுபாடு க்காட்டுகிறது. நம் நாட்டுக்கு ஒரே கல்விக் கொள்கை என்றால் தேசியப் பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள் என ஏன் வேறுபாடு காட்டுகிறது? ஆசிரிய வளம் உள்ளிட்ட அத்தனை வளங்களையும் அங்கே குவித்து வைத்துக்கொண்டு, அதனை தனதுநேரடிக் கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொண்டு "அருகில் இருக்கும் பாடசாலை சிறந்த பாடசாலை" என்னும் திட்டத்தை/ கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது ஏன்? மாகாணப் பாடசாலைகளுக்கு வேறு பாடப் பரப்புகளா? தேசிய பாடசாலைகளுக்கு வேறு பாடப்பரப்புகளா? இல்லையே! எல்லாப் பாடப் பரப்புகளும் திட்டங்களும் ஒன்றாக இருக்க, தேசியப் பாடசாலைகள் என வரையறை செய்வது ஏன்? இப்படியான வேறுநிலைப்பாடுகள் வேண்டாம். தேசியப் பாடசாலைகளையும் மாகாணப் பாடசாலைகளுக்குள் கொண்டுவர வேண்டும். ஆசிரிய வளங்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் "அயற்பாடசாலைகள் சிறந்த பாடசாலை" என்னும் திட்டம் வெற்றி பெறும். இதற்கு மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு முழங்கினார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். அவரின் பேச்சு முடிந்து மேடையேறிய பிரதமர், முதலமைச்சரின் கேள்விகள் குறித்து எந்தப் பதில்களையும் தனது உரையில் கூறவில்லை. மாறாக வடக்கின் கல்வித் தரம் குறித்தே கூறினார்.

"அன்று ஆறுமுகநாவலர் வித்திட்ட கல்விப் பாரம்பரியம் கொண்ட வடக்கு மாகாணம் கல்விப் பேரறிஞர்களை ஆண்டாண்டு காலமாக தந்தது. பரீட்சை முடிவுகள் வெளிவரும் போது நாங்கள் யாழ்ப்பாணத்தின் பரீட்சை முடிவுகளையே வியப்போடு பார்த்து நிற்போம். சேர் .பொன் இராமநாதன், சேர்.பொன். அருணாச்சலம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இவைதான் அன்று பெயர் பெற்றிருந்த வார்த்தைகள். ஆனால், இன்று அப்படியான செய்திகள் எவற்றையும் கேட்க முடிவதில்லை. அதற்கு காரணம் போர். அதிலிருந்து மீண்டு பழைய நிலையை அடையுங்கள்" என்று 'அட்வைஸ்' மழையை மட்டுமே ரணிலால் பொழிய முடிந்தது.

நேரெதிர்க் கொள்கைகள் கொண்ட இருவரும் கூறிய கருத்துக்களும் வடக்கின் கல்வித்தரம் உயர வேண்டும் என்ற ஒரே நேர் கோட்டில் இருப்பதனை அவதானிக்க முடியும். அப்படியானால் வடக்கின் கல்வித்தரத்தை உயர்த்த செய்ய வேண்டியது என்ன? அதற்கான திட்டமில்கள் என்ன? என்றால் எந்தப் பதிலும் எவரிடமும் இல்லை என்பதே கசப்பான உண்மை.

### பின்லாந்தின் கல்வித் தரம்

இன்று இலங்கையின் கல்விப் புலத்தைச் சேர்ந்த அனைவரிடமும் இருந்து வெளிவருகின்ற ஒரு சொல், பின்லாந்து என்ற நாட்டின் பெயரே ஆகும். காரணம், உலகில் கல்வியில் முன்னணியில், ஏன் முதலாம் இடத்தில் நிற்கின்ற நாடு பின்லாந்து தான். கல்வியில் அந்த நாடு மகுடம் சூடியபின், அனைத்து நாடுகளினதும் பேச்சு பின்லாந்து என்றாகி விட்டது. அனைத்து நாடுகளையும் சேர்ந்த கல்விப்புலம் சார்ந்த அனைவரும் அந்த நாட்டினைச் சென்று தரிசிக்கவும் தொடங்கி விட்டார்கள். நம் நாடும் இதற்கு விதிவிலக்காகுமா? கல்வியமைச்சர் தலைமையில் ஒரு குழுவும், கல்விப்புலம் சார்ந்த பல குழுக்களும் சென்று தரிசித்து வந்து கூறுகின்ற கதைகள், கருத்துக்கள் வியப்பையே தருகின்றன.

அங்கு ஒரு மாணவன் பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் வயது ஏழு. பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் காலை 10.30 மணி. அங்கு கல்வி கற்கும் மாணவன், படிப்பில் கவனம் செலுத்த முடியாத உடல்நிலை/ மனநிலை இருந்தால் உடனடியாக வகுப்பைவிட்டு வெளியேறி வேறு எவற்றிலேனும் (விளையாட்டு/ பொழுதுபோக்கு) கவனம் செலுத்தலாம். அதற்கென பாடசாலைகளிலே அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருக்கும். உடல்நிலை சரியில்லை எனில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அறைகளில் தங்கி இருப்பர். ஆனால், உடனடியாக மருத்துவர் அவ்விடம் வந்து விடுவார். மருத்துவச் சிகிச்சையோ/உளநல சிகிச்சையோ உடனடியாகவோ தொடங்கப்பட்டு விடும். கேட்கவே வியப்பு ஏற்படுகிறதல்லவா. இவ்வளவற்றையும் அந்த நாட்டினர் கூறவில்லை. அங்கு சென்று வந்த நம்மவர்களே கூறுகிறார்கள்.

இப்பொழுது எம்மிடம் எழுவது ஒரே ஒரு வினா மட்டுமே. பின்லாந்தின் கல்வித் தரத்தையும், அணுகு முறையையும் பேச்சளவில் வியக்கும் நாம் அதனை செயற்படுத்த இன்னும் தாமதிப்பது ஏன்? "ஊருக்குத் தான் உபதேசமே, உனக்கில்லையடி" இந்தப் பழமொழிதான் பதில் போலும்.

உண்மையில் கல்வித் தரத்தில், மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் எனில் உடனடித் திட்டமிடல்களும் முடிவுகளும் அவசியம். எமது கல்வியின் வீழ்ச்சிக்குப் போரை ஒரு காரணமாகப் பிரதமர் கூறினார். ஆனால், அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் போர்க்காலங்களில் குப்பி விளக்கிலும், ரயர் எரிந்த வெளிச்சத்திலும் படித்து அதி உச்சப் பெறுபேறுகளை நம் மாணவர் பெற்றனர் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அன்று, புலிகள் இயக்கம் தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில்கல்வித்தரம்உயர எடுத்த நடவடிக்கைகள் பற்றி அனைவருக்கும் தெரியும். அதுவும் கல்விக் கழகம் ஒன்றை அமைத்து, அதற்கு பொறுப்பாக ஒருவரை நியமித்தமை முதலான நடவடிக்கைகள் நிறைய மாற்றத்தைக் கல்விப் புலத்தில் உண்டு பண்ணியது. அது போலவே கல்வித்தரத்தை முன்னேற்றும் நடவடிக்கைகள் பேச்சளவில் நின்று விடாது, செயலில் உடன் இறங்க வேண்டும் .

> கல்வித் தரத்தில், மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் எனில் உடனடித் திட்டமிடல்களும் முடிவுகளும் அவசியம். எமது கல்வியின் வீழ்ச்சிக்குப் போரை ஒரு காரணமாகப் பிரதமர் கூறினார். ஆனால், அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் போர்க் காலங்களில் குப்பி விளக்கிலும், ரயர் எரிந்த வெளிச்சத்திலும் படித்து அதி உச்சப் பெறுபேறுகளை நம் மாணவர் பெற்றனர் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

### முதற்கோணல் முன்பள்ளிக்கோணல்

எமது கல்வி உலகில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

மாணவர்களைக் கல்வியின் மீது வெறுப்படைய வைக்கும் முதல் நிறுவனம் முன்பள்ளி தான். ஒரு காலத்தில் குருகுலக் கல்வி. அதன் பின்னர் முன்பள்ளிகள். முன்பள்ளிகளில் மாணவர் அனுமதிக்கான வயதெல்லை ஐந்து தான். ஆனால், இன்று இரண்டு வயதிலே கூட முன்பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை நிகழ்கின்றது. ஒரு குழந்தை ஐந்து வயது வரை பெற்றோருடன் தான் வாழ வேண்டும். ஐந்து வயதின் பின்னர் தான் அதனது மூளை விருத்திபெறும். பின்லாந்து அதனை உணர்ந்துதான் பிள்ளைகளை ஏழுவயதில் கல்விக்குள் பிரவேசிக்க அனுமதிக்கிறது. ஆனால் நாம், இன்று அவசர யுகத்தில் வாழ்ந்து கொண்டு எதிர்கால நாட்டின் தலைவர்களையே, மூளையில் கருக்கி விடுகிறோம். கல்வியின் மீது வெறுப்பை ஏற்படுத்த முயல்கிறோம். "சிறுவர் உரிமை" என்று வாய் கிழிய கத்துகிறோம். ஓடுகின்றோம். செயலில் இல்லை எதுவும். முன்பள்ளிகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். பின்லாந்தின் கொள்கைகள் உண்மையில் சரி எனின், மாணவர்களுக்கான முன்பள்ளிகளின் வயதெல்லையை சரியான வகையில் வரையறுக்க வேண்டும். குறிப்பாக பெற்றோரின் அரவணைப்புத் தேவைப்படும் 1- 5 வரையான வயதில் பிள்ளைகளிடம் கல்வியைத் திணிக்க விடவே கூடாது. (08ஆம் பக்கம் பார்க்க)

சுற்றுதே சுற்றுதே பூமி

தொகுப்பு- ஏ.கே.சங்கீதா



## விபத்துக்களின் பரிதாபம்




வாகனங்களை வேகமாக செலுத்துவதை ஒரு கலாசாரமாகக் கொண்டுள்ள இன்றைய சமூகம், விபத்துக்களின் பின்னர் தன்னை சார்ந்தவர்களின் நிலைமையை எண்ணினாலே விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடைந்துவிடும்.

பிரேசில் நாட்டில் ஆள் நடமாட்டம் இல்லாத அதிவேக சாலையில் இரு கார்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் அதில் பயணித்த ஒரு குடும்பம் எமனுக்கு இரையாகியுள்ளது. இதன் போது உயிர் பிழைத்த 6 வயது சிறுவன் பெஞ்சமின் அங்கிருந்து செல்லத் தெரியாமல் தவித்த நிலையில் வழிப்போக்கர் ஒருவரின் உதவியுடன் காப்பாற்றப்பட்டார்.

## 19 கோடியா?

Macallan Valerio எனும் பிரித்தானிய நபர் தன்னிடம் உள்ள பழைமையான விஸ்கி போத்தல் ஒன்றினை ஏலம் விடுத்துள்ளார். இந்த விஸ்கி போத்தலானது இலங்கை மதிப்பில் 19 கோடி ரூபாவுக்கு மேல் ஏலம் போயுள்ளது.



## 65 க்கும் 21 க்கும் திருமணம்

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ள போதிலும் இன்றைய சூழ்நிலையில் அது வெறும் வேடிக்கை நிகழ்வாக மாறிக்கொண்ட வருகிறது. வயது, பால் என்ற வித்தியாசங்கள் பொருட்படுத்தப்படாமை திருமண கலாசாரத்தையே மாற்றி விட்டது எனலாம். இந்தியா – பீகார் மாநிலத்தில் 65 க்கும் 21 க்கும் இடையில் நடைபெற்ற திருமணம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தந்தையால் கட்டாயப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட திருமணத்தின் போது மணமகன் தனது காதலியுடன் ஓட்டம் பிடித்தமையால், மணமகனின் தந்தை குறித்த மணப்பெண்ணைத் திருமணம் முடித்துள்ளார்.

ஒரு பெண் பிள்ளையின் வாழ்க்கை கெட்டுவிடக் கூடாது என்பதற்காக மணமகனின் தந்தையும், குடும்ப கௌரவம் கெட்டுவிடக்கூடாது என்பதற்காக பெண் வீட்டாரும் குறித்த திருமணத்துக்கு சம்மதித்துள்ளனராம்.





## பள்ளத்தாக்கு பூங்கா

88 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் விரிந்துள்ள நியோரா பள்ளத்தாக்கு தேசிய பூங்காவானது (Neora Valley National Park) 1986 ஆம் ஆண்டு இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தொந்தரவுகள் எதுவுமற்ற அமைதியான, சிவப்பு பண்டாக்கள் வாழும் இம்மாநிலமானது பல்வேறு வகையான தாவரங்களையும் விலங்கினங்களையும் தன்னகத்தே கொண்டு விலங்கியல் மண்டலம் எனும் விஷேட பெயருடன் சிறப்புப்பெற்று விளங்குகின்றது.




## அதிசய பாலம்

உறவுப் பாலங்களின் பெறுமதி அதி கரித்துக்கொண்டே செல்லும் இந்தக் காலத்தில், நாடுகளுக்கிடையிலான பாலங்கள் பற்றி தெரிந்து கொண்டால் மெய் சிலிர்க்கும் என்பது நிஜம் தான். பசிபிக் பெருங்கடலில் உள்ள சான் பிரான்சிஸ்கோ விரிகுடா திறக்கும் இடத்தில் உள்ள கோல்டன் கேட் சந்தியின் மீது கட்டப்பட்டுள்ள தொங்கு பாலமான கோல்டன் கேட் பாலமானது மொத்தம் 8,981 அடி (2,737 மீற்றர் ) நீளமும் 90 அடி (27 மீற்றர்) அகலமும் 746 அடி (227 மீற்றர்) உயரமும் கொண்டது.

தொழிநுட்ப வளர்ச்சி இன்று போல் இல்லாத காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்டடங்களும் பாலங்களும் அதிசயம் தான்.

# பூட்டு திறப்பு எங்கே?




தேக்கு மரக்காட்டில் முயல் குடும்பம் ஒன்று வசித்து வந்தது. அந்தக் குடும்பத்தின் கடைக்குட்டி முயலின் பெயர் நேகா. மிக அழகான நேகாவைப் பார்க்கத் தினமும் யாராவது விருந்தினர்கள் வந்துகொண்டே இருப்பார்கள். ஒருநாள் நரியும் பார்க்க வந்தது. முயல் குடும்பத்தினருக்குப் பயமாக இருந்தது.

“அடடே! இப்படி ஒரு அழகான முயல் குட்டியை நான் பார்த்ததே இல்லை!” என்றது நரி.

இந்தப் பொல்லாத நரியால் நேகாவுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று எல்லோரும் அஞ்சினர். உடனே வளைக்கு ஒரு கதவை ஏற்பாடு செய்தனர்.

“நேகா, நீ எளிதில் எல்லோரையும் நம்பி விடுகிறாய். எதிரி யார், நண்பன் யார் என்றெல்லாம் உனக்குத் தெரியவில்லை. நாங்கள் எல்லோரும் உணவு தேடிச் செல்லும்போது, நீ மட்டும் தனியாக வளையில் இருப்பாய். அதனால் ஒரு கதவு போட்டிருக்கிறோம், பூட்டிக் கொள். ” என்றது அம்மா முயல்.

“சரி அம்மா, வீட்டைப் பூட்டிக்கொண்டால் பாதுகாப்பாக இருக்க முடியுமா?” என்றது நேகா.

“ஆமாம் நேகா. வெளியே செல்லும்போது, வீட்டைப் பூட்டிச் சென்றால் யாரும் நம் வீட்டுக்குள் நுழைய முடியாது. நாம் எதிரி பயம் இன்றி நிம்மதியாக இருக்கலாம்.” என்றது அம்மா முயல்.

“ஓ! அப்படியா சரி. நம் காட்டுக்கு மனிதர்களால் ஆபத்து என்று ஒருமுறை சொன்னீர்களே... அப்படியென்றால் நம் காட்டைப் பூட்டி விட்டால் ஆபத்து இருக்காதுதானே.?” என்றது நேகா.

நேகாவின் கேள்வியைக் கேட்டு அம்மாவுக்குச் சிரிப்பு வந்தது. “காட்டைப் பூட்டி வைப்பதற்கு ஒரு பிரம்மாண்டமான பூட்டும் திறப்பும் தயார் செய்து வைத்திருந்தோம். ஆனால் அது எங்கோ தொலைந்து விட்டது. அதைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறோம்” என்று விளையாட்டாகச் சொன்னது அம்மா முயல்.

அம்மா சொன்னதை உண்மை என்று நம்பிய நேகா, யோசிக்க ஆரம்பித்தது. ‘இந்தக் காட்டின் பூட்டையும் திறப்பும் தேடிக் கண்டுபிடித்துவிட்டால் மனிதர்களால் ஆபத்து வராது. அதைத் தேடுவதுதான் இனி என் வேலை’ என்று முடிவெடுத்தது. இரவு முழுவதும் தூங்காமல் பூட்டும் திறப்பும் எங்கே இருக்கும் என்று யோசித்தது.

விடிந்ததும் அம்மா முயலும் அப்பா முயலும் உணவு தேடிக் கிளம்பின.

அம்மா சென்ற சிறிது நேரத்தில் பூட்டும் திறப்பும் நினைவுக்கு வந்துவிட்டது. அம்மா வருவதற்குள், பூட்டையும் திறப்பையும் கண்டுபிடித்துக் கொண்டு வந்துவிடலாம் என்று நினைத்தது நேகா. தன் வீட்டைப் பூட்டித் திறப்பைச் செம்பருத்திச் செடிக்கு அருகே குழி தோண்டிப் புதைத்தது. தன் தேடலைத் தொடர்ந்தது. வழியில் நேகாவின் நண்பர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

தன் அம்மா சொன்னதை நண்பர்களிடம் சென்னது நேகா.

“காட்டைக் காப்பாற்றுவது எங்களுடைய கடமையும்கூட! அதனால நாங்களும் உன்னோடு சேர்ந்து தேடுறோம்” என்றார்கள் நண்பர்கள்..

ஒவ்வோர் இடமாகத் தேடிக்கொண்டே சென்றனர். வழியில் வந்த வயதான ஆமை, “குழந்தைகளே, எதைத் தொலைத்துவிட்டு தேடுகின்றீர்கள்?” என்று கேட்டது.

“தாத்தா, இந்தக் காட்டின் பூட்டையும் திறப்பையும் தேடிப் போறோம்” என்று எல்லாம் சேர்ந்து கத்தின.

“சரி தேடுங்கள். உங்கள் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள். கிடைத்த உடனே செய்தி சொல்லுங்கள்” என வாழ்த்தி அனுப்பியது ஆமை.

நண்பர்களோடு காடு முழுவதும் மாலைவரைத் தேடிக் கொண்டே இருந்தது நேகா.

ஆனால், பூட்டும் திறப்பும் கிடைக்கவில்லை. வீட்டுக்கு வந்தது நேகா. நாளை காலை நேகா மீண்டும் தேடப் புறப்பட்டுவிடும்.

அதற்குள் அவளிடம் ‘அம்மா சொன்னது சும்மா’ என்று சொல்ல வேண்டும். யார் சொல்லப் போகிறீர்கள்!



## அந்த 5 வெற்றியாளர்களுக்கும் எப்போது, எங்கே பரிசு?

ஆவலை அடுத்தவாரம் வரை அடக்கிக் கொள்ளுங்கள்!!

## வெற்றியாளர் விபரம்

**பானுஜா அருள்ராசன்**
யாழ்ப்பாணக் கல்லூரி,
இரத்தின இல்லம், சித்தங்கேணி.

**எம். பிரித்தியா**
புத்தளம் / ஒற்றைப்பனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்,
ஆண்டிமுனை, உடப்பு.

**தர்மினி அருள்ராசன்**
ஸ்ரீ கணேச வித்தியாலயம்
இரத்தின இல்லம், சித்தங்கேணி.

**சிவகுகன் பிருத்வி**
யாழ் / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

**ஏ.தர்சினி**
ஸ்ரீகணேச வித்தியாலயம்.

5 வெற்றியாளர்களையும் வாழ்த்துகிறது ‘எதிரொலி’

## தங்க மகன் ஜெர்மி!

அக்கினிக் குஞ்சு



சாதனைக்கு வயது ஒரு தடை இல்லை என்பதை மீண்டும் நிரூபனம் ஆக்கியிருக்கின்றார் தங்க மகன் ஜெர்மி.

“யூத் ஒலிம்பிக்கில் இந்தியா பெறும் முதல் தங்கப்பதக்கம் என்ற வரலாற்றுச் சாதனையைப் புரிந்திருக்கின்றார் 16 வயதான ஜெர்மி. 62 கிலோ எடைப் பிரிவில் 247 கிலோ எடையை வெற்றிகரமாக தூக்கிஜெர்மி முதல்இடம்பிடித்திருக்கிறார்.

ஜெர்மி இதற்கு முன்னர் ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளில் பளு தூக்குதலில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் ஆகியவற்றை வென்றிருக்கிறார்.




## கழுகுகளின் பறக்கும் ரகசியம்


கழுகுகளுக்குப் பார்வை சக்தி அதிகம். அவற்றின் கால்கள் வலிமையானவை. நகங்கள் மிகவும் கூர்மையானவை. கழுகுகளுக்கு வேகமாகவும் உயரமாகவும் பறக்கும் ஆற்றல் உண்டு. அதனால் உயரத்தில் பறக்கும்போதே நிலத்தில் ஊர்ந்து செல்லும் விலங்குகளைத் துல்லியமாக அறிந்துகொள்ள முடியும். இரையைக் கண்டதும் பார்வையை ஒருமுகப்படுத்தி வேகமாக வந்து, கால்களால் பிடித்துத் தூக்கிச் சென்றுவிடும். கூர்மையான அலகால் இரையைக் கொத்திச் சாப்பிட்டுவிடும். உயரப் பறப்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருப்பதால் கழுகால் உயரமாகப் பறக்க முடிகிறது.

## சவாலே சமாளி

கீழே உள்ள குறிப்புகள் ஒரு நாட்டைக் குறிக்கின்றன.

அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்ட தென்கிழக்கு ஆசிய நாடு.
2. இந்த நாடு 1949 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்றது.
3. இந்த நாட்டின் தேசிய சின்னம் யானை. தேசிய மலர் மர சம்பங்கி.
4. விவசாயம் முக்கியமான தொழில்.
5 வியன்டியேன் இதன் தலைநகரம்.
6. புத்தர் ஆலயங்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன.
7. அதிக விஷத்தன்மை கொண்ட 14 அடி நீளப் பாம்புகள் இங்கே இருக்கின்றன.
8. காடுகளை அழித்து வருவதால் ஆசிய யானை, புலி போன்ற விலங்குகளின் எண்ணிக்கை இங்கே குறைந்து வருகிறது.



9. உலகின் மிகப் பெரிய 11 ஆவது நதியான மேகாங் இந்த நாட்டில் பாய்கிறது.

# காசு பணம் துட்டு மணி Money

● தேவீஸ்வர்

(கடந்த வார தொடர்ச்சி)

சேது மன்னர்கள், ராணி மங்கம்மா, ஆற்காடு நவாபுகள், தஞ்சை நாயக்கர்கள், தமிழகத்தை ஆண்ட மராட்டியர்கள் அடங்கலான காலத்தால் மிகவும் பிந்திய அரசவம்சத்தினர் மட்டுமல்லாமல் சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், சங்க காலத்தின் குறுநில மன்னர்களும் வெளியிட்ட காசுக ளும் பெருமளவில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவற் றின் எண்ணிக்கை, ஏறத்தாள பதினைந்து இலட்சம் என் கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

இவற்றுள் ஏறத்தாள முக்கால்வாசிப் பங்கு ராஜ ராஜ சோழன், ராஜேந்திர சோழன் ஆகியோரால் வெளி யிடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு சோழப் பேரரசர்க ளும் பிற இராச்சியங்களையும், தேசங்களையும் போரிட்டு வென்று, அந்தப் பிரதேசத்தின் மக்களைக் கொன்று குவித்து, அவர்களது செல்வங்களைச் சூறையாடி, மிகப்பெரும் செல்வந்தச் சோழப் பேரரசை நிறுவினார்கள். அரசியல் தளத்தில், கொடுங்கோன்மையாக இவை கொள்ளப்பட வேண்டியவை என்றாலும் கலாசார, பண்பாட்டுத் தளங் களில் அவர்கள் ஏற்படுத்திய பாய்ச்சல்களும், சாதனை களும் இன்றைய நவீன அறிவுலகத்துக்கும் சவாலாக அமைபவை.

கட்டடக்கலையில் அவர்கள் ஈட்டிய சாதனைகளின் தொழில்நுட்ப ரகசியங்களை இன்றும்கூடச் சரியாகக் க்ணிப்பிட இயலாமல் இருக்கின்றது. அதேபோல நாணயங் களை அவர்கள் வெளியிட்ட முறைமையும், அவற்றைப் பரிவர்த்தனை செய்வதற்காக அவர்கள் கையாண்ட வழிமுறைகளும் மலைக்க வைக்கின்றன.

ஆயிரத்து நூறு ஆண்டுகளக்கும் முன்னராகவே அவர் கள் செப்புக் காசுகளுக்குத் தங்கத்திலும், வெள்ளியிலும் முலாம் பூசும் விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்ற தொழில் வினைஞர்கள் பிற்காலச் சோழ சக்கரவரத்திகளின் காலத் தில் இருந்தார்கள். இந்த மாமன்னர்களும் தூய தங்கக் காசு களைப் புழக்கத்தில் விட்ட அதே நேரத்தில், முலாம் பூசிய காசுகளையும் மக்களிடம் புழக்கத்தில் விட்டார்கள். அந்த முலாம்கள் இன்றளவும் மங்காமல் இருப்பதுதான் மகா ஆச்சரியம். அவர்களது காலத்தில் நிலவிய மூலிகை மருத்துவம், இரசாயனம் ஆகியவற்றையே அவர்கள் முலாம் பூசுவதற்காக உபயோகித்தார்கள் என்று நம்பப்படு கின்றது.

அதன் தொடர்ச்சியாகவே, இன்றைய மூட உலகம் மூலிகைகளின் மூலமாக இரும்பைப் பொன்னாக்கலாம் என்ற ரசவாதத்தில் நம்பிக்கை கொண்டு அலைகிறது! சில இலை தளைகளையும் இரும்பையும் சேர்த்துக் கொதிக்க வைத்தால் தங்கம் கிடைக்கும் என்று நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு அங்கலாய்க்கிறது!!



இரு சோழ சக்கரவர்த்திகளும் தமிழர்களிடையே புழங்கு வதற்காக தமிழ் எழுத்துக்கள் பொறித்த காசுகளை யும் ஏனைய பிரதேச மக்களிடையே பரிவர்த்தனை செய் வதற்காக தேவநாகரி எழுத்துக்கள் பொறித்த காசுகளை யும் வார்த்தார்கள். அது மட்டுமல்ல, ஈழத்திலிருந்து தாம் கப்பமாகப் பெற்ற பொற்காசுகளையும் தமிழகத்தில் புழங்க அனுமதித்தார்கள்! அந்நியச் செலாவணி என்ற விஷயத்திலும் மிகவும் முன்னோடிகள், இந்தக் கில்லாடிச் சோழர்களே! மிக வியப்பு!!

ஈழத்திலிருந்து சோழர்கள் கப்பமாகப் பெற்ற காசு 'ஈழக்காசு' என அழைக்கப்பட்டது. ஆறு ஈழ மன்னர்கள் இந்த இரண்டு கொள்ளையர்களுக்கும் கப்பமாகப் பொற்காசு களை ஏராளமாக தாரை வார்த்தார்கள். ஏனைய காசு களை விட ஈழக்காசுகள் தரமானவையாகவும், வடிவச் செம்மையுடனும் இருந்தன என புழகாங்கிதம் கொள்கி றார்கள் தமிழக வரலாற்றாசிரியர்கள்.

இந்த இரண்டு சோழர்களுக்கும் முந்தைய அரசர் கள் வெளியிட்ட காசுகள் உலோகத் தகடுகளில் உரு வங்களும் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டு வெட்டியெடுக் கப்பட்டவையாக இருந்தன. சதுரமாகவும், செவ்வகமாக வும், திருத்தமற்ற வட்ட வடிவத்திலும் அவை இருந்தன. ராஜராஜனும், ராஜேந்திரனும் அச்சுக்களை உருவாக்கி, உலோகங்களை உருக்கி வார்க்கும் முறைமையை அறிமுகம் செய்தார்கள். அவர்களது காலத்துக்குப் பின்னரே நாணயங்கள் படிப்படியாக உருவச் செம்மை அடைந்தன.

அது மட்டுமல்ல, அவர்களது காசுகள் ஒன்றைப்போல மற்றொன்று இருக்கவில்லை என்று வரலாற்றாசிரியர்கள் வியப்படைகிறார்கள். ஒவ்வொரு காசுக்கும் மிகச் சிறிய வேறுபாட்டை மட்டும் காட்டும் ஒவ்வொரு அச்சை அவர் கள் உருவாக்கப் பணித்திருக்கிறார்கள். ஒரே மாதிரியான இரண்டு காசுகள் இருந்தால் அவை போலியானவை எனச் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம்! தங்க மூளை என்.எம். பெரேராவும், ஒரே இரவுக்குள் காசை செல்லாமல் ஆக்கிய மோடியும் இவர்களிடம் பிச்சை புகுந்தாவது கற்றிருப்பார்களோ!



ஆரம்பத்தில் சாதாரண மக்களிடையே காசு புழக் கத்தில் இருக்கவில்லை. வர்த்தக மையங்களில் மாத்திரமே அவை புழங்கின. தொல்லியல் ஆய்வுகளில் காசுகள் கிடைக்கும் இடங்கள் அவற்றை உறுதி செய்கின்றன. ஏழை எளிய மக்கள் பண்டமாற்று முறையைத்தான் பின்பற்றினார்கள். உடல் களைக்க உழைத்தார்கள். அவற் றைக் கொடுத்து மாறினார்கள். உண்டார்கள். களித்தார் கள். ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் முழுமையாகத் தேவையாக இருந்தான். அவர்களிடையே ஆழ்ந்த ஆத் மார்த்தமான பிணைப்பு நிலவியது.

இடையே புகுந்தது காசு - நாணயம்!

ஓடாக உழைத்தும் காசைக் கண்ணாரக் காண முடி யாத ஒரு பெரும் மக்கள் திரள் உருவானது. அதன் பின் னர், மனிதன் இதயத்தில் நாணயம் இல்லாதவனாகிப் போனான். கை நிறைய நாணயம் உள்ளவனே உலகாயுத நோக்கில் உயர்ந்தவன் ஆனான்.

ஆமாம்! இதயம் என்ற ஒன்று எல்லோருக்கும் இருக் கிறதா, என்ன?

"ஊசிமுனைக் காதுக்குள்ளே ஒட்டகங்கள் போனா லும்

காசாசை போகாதடி, கண்ணம்மா கட்டையிலும் வேகாதடி...."

- என்று தமிழ்ப்படப்பாட்டுக்காரன் தத்துவப்பாடல் பாடினான்.

காசில்லாத சமயம் ஒன்றில் வயிறு புகைந்த பாட்டுக் காரன் யோசியாமல் இப்படிப் பாடினாலும், ஊசி முனைக் குள்ளே ஏன் ஒட்டகம் போக நினைத்தது என்று நீங்களா வது யோசித்தீர்களா மக்களே!

முன்னொரு காலத்திலே துணிகளை மிருகங்களின் உரோமங்களினால் இணைத்து மூட்டித் தைத்தார்கள். தைத்த ஆடைகளை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திய அரேபியர்கள் (அதாவது யவனர்கள் அல்லது சோனகர் கள்) ஒட்டகங்களின் உதவியுடன் வாழ்ந்தவர்கள். ஒட் டகத்தின் வால் உரோமங்களை தையல் நூலாக அவர்கள் பயன்படுத்தினார்கள். ஒட்டகத்தின் இந்த உரோாமம்தான் ஊசிமுனைக்குள்ளே புகுந்ததேயல்லாமல் அந்தப் பெண் ணாம் பெரிய ஒட்டகம் அல்ல!

காசு ஆளை யோசிக்க விடாது என்பது எவ்வளவு பெரிய உண்மை!

அது, இருந்தாலும் இல்லாவிட்டாலும்!!

தொல்குடிச் சமூக அமைப்பு, நிலமானிய சமூக அமைப் பாக மாற்றமடையும்போது வலிமையான அரசுகள் தோன்றின. தொல்குடிச் சமூக அமைப்பில் காண்பதற்கு அரிதான உழைப்புச் சுரண்டல் நிலமானிய சமூகத்தில் தோன்றுகின்றது. உழைப்புச் சுரண்டலின் விளைவாக அடிமை குடிமை முறை, சாதியம் முதலியன தோன்றிய அந்தச் சமூக அமைப்பை அரசு பாதுகாக்கின்றது. அரசு காசின்மீது கட்டியெழுப்பப்படுகின்றது. அதிக அளவில் காசு உள்ளவனே அதிகம் வலிமை வாய்ந்த அரசனாகிறான். எனவே அதிக செல்வத்தைத் திரட்டும் நோக்குடன் போர்கள் ஏற்படுகின்றன.



போரில் வெற்றி பெற்ற அரசனது படைகளும், ஏவலர் களும், அலுவலர்களும் முதற்காரியமாக தோல்வியடைந்த அரசனது நாணயச்சாலைக்குச் சென்று அனைத்தையும் கையகப்படுத்துவார்கள். கொள்ளையாகக் கிடைத்த நாண யங்களை உருக்கி அழித்து, தமது சின்னத்தைப் பொறித்து மக்களிடம் மீண்டும் புழக்கத்தில் விடுவார்கள்.

எனவே போரின் பின்னர் கண்டிப்பாக புதிய காசுகள் வெளியிடப்படும். அதிக அளவில் பிற அரசுகளை அழித்த சோழ சக்கரவர்த்திகள் அதிக அளவில் நேர்த்தியான வடி வத்தில் காசுகளை வெளியிட்டதன் பின்னணி இதுதான். கப்பம் கட்டுவதாக ஏற்பட்ட ஒப்பந்தங்களின் பிரகார மும், இரு அரசுகளிடையே ஏற்பட்ட திருமணம், தோழமை முதலிய நல்லுறவுகளின் அடையாளமாகவும் காசுகள் வெளியிடப்பட்ட வரலாறும் உண்டு.

நாணயச்சாலை, பண்டாரகம் எனவும் பரவலாக அழைக் கப்பட்டது. பண்டாரகத்தைப் பரிபாலித்தவர்கள் பண்டா ரங்கள் என அழைக்கப்பட்டார்கள். பண்டாரகங்கள் பெரும் பாலும் கோயில்களை அண்டி அல்லது கோயில்களில் உருவாக்கப்பட்டன. பண்டாரங்களும் கோயில் அதிகாரிகள் போல ஆனார்கள். பண்டாரகங்கள் கோயில்களில் இருந்த காரணத்தினால், படையெடுப்புக்களின்போது பண்டாரங்க ளைச் சூறையாடியதன் உப விளைவாக கோயில்களும் பெருமளவில் அழிக்கப்பட்டன.

மன்னராட்சிக் காலத்தில் பண்டாரம் என்பது மிக மிகப் பெரும் பதவி! இன்றைய வங்கி ஆளுநரைப் போல என்று நாம் வைத்துக் கொள்ளலாம்!!

கால ஓட்டத்தில் மன்னராட்சி ஒழிந்து, பற்பல சமூக அமைப்புக்கள் தோன்றி மறைந்ததன் பயனாக எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக இன்று ஆனோம். காசும் பல்வேறு வடிவங்களை எடுத்து ATM Card ஆகவும் Bitcoin ஆகவும் இன்று மாறிவிட்டது!



மன்னராட்சிக் கால்த்தின் அதிகாரம் மிக்க பண்டாரங் கள், இன்று கோயில்களில் தளிசை வடித்து சில காசுக ளைப் பார்க்கும் சமையல்காரர்களாக நலிவடைந்து விட்டார்கள்.

காசா... லேசா!

காசாலே...சா!!



வேதநாயகம் தபேந்திரன்

# வெளிநாட்டுக் காசு

“பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்டு வர வேண்டும்”

மூதறிஞர், தமிழ் பண்டிதர், கவிஞர் மாவிட்டபுரம் சச்சிதானந்தன் ஐயா இயற்றிய கவிதையின் வரிகளில் ஒன்று.

பூநகரி பிரதேசத்தில் மிக அண்மையில் சென்ற போது இறந்தவர் ஒருவரின் சடலத்தைப் பாடையில் வைத்து எடுத்துச் சென்றதைக் கண்டேன்.

அப்போது இந்தப் பாடல் வரிகள் நினைவுக்கு வந்தன.

மரண வீடுகள் எளிமை குடியிருக்கும் சடங்குகளாக இருந்த காலம் ஒன்று இருந்தது. அவசர முகாமைத்துவத்துக்கு சிறப்பான ஒரு எடுத்துக் காட்டாக மரணச் சடங்குகளைக் கூறலாம்.ஆனால் இன்று மரண வீடு ஒன்று நடந்தால் ஊர் கூடி ஒற்றுமையாகச் செய்வதை அரிதாகவே காண முடிகிறது.

ஒரு காலத்தில் புகழ்பெற்ற வில்லன் நடிகராக இருந்தவர் எஸ்.ஏ.அசோகன். அவரது குரலில் ஒலித்த அந்தக் காலத்து பிரபல பாடல், “இறந்தவனைச் சுமந்தவனும் இறந்திட்டான். அதை இருப்பவனும் எண்ணிப்பார்க்க மறந்திட்டான்.

பறந்து பறந்து பணம் தேடி பாவச் சுனையில் நீராடி அப்படி இறந்தவனைச் சுமந்தவனும் இறந்திட்டான். அதை இருப்பவனும் எண்ணிப் பார்க்க மறந்திட்டான்.” அது போலத் தான் எமது நாட்டில் சில மரண வீடுகள் நடக்கின்றன.

பணப் பகட்டுக் காட்டுவதற்கு ஒரு காலத்தில் கோயில்களின் திருவிழாக்கள் இருந்தன.

வீடுகளைக் கட்டிப் பண விலாசம் காட்டினார்கள். பிற்காலத்தில் வீடுகளில் மங்கல நிகழ்வுகளைப் பிரமாண்டமாக நடத்தி வசதிகளின் வீக்கம் காட்டினார்கள்.

அதற்குப் பின் திருமண மண்டபங்களில் தடல்புடலாக மங்கல நிகழ்வுகளைக் களியாட்டங்களாக நடத்தி வெளிநாட்டுப் பணப் பகட்டு காட்டினார்கள்.

இவை ஆடம்பரங்களாயினும் ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் பாருங்கள் இந்தச் செத்த வீடுகளை இப்படி நடத்திக் காட்டத்தான் வேண்டுமா ?

பத்திரிகைகளில் கால் பக்கம் முதல் அரைப்பக்கம் ஏன் முழுப்பக்கமென மரண அறிவித்தல்கள் வரும்.

வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் உறவுகள் வரவேண்டுமாயின் 3 நாளுக்கு மரண அறிவித்தல் தொடராக வரும். வீட்டுக்கு வருவோருக்கு வழங்கவென கேஸ் கேசாக சோடா எடுத்து வைக்க வேண்டும்.

வீட்டில் பான்ட் கோஸ்டியை வைத்து அதிர அதிர அடிக்க வேண்டும். பறைமேளம் அடிப்பது தான் சரியான பண்பாடு என்பது கூட பலருக்கு மறந்து விட்டது.

அது மட்டுமல்ல வீதி வீதியாக கால் முதல் அரை மணி நேரம் வரை யாவரையும் வழிமறித்து பான்ட் அடிக்க வேண்டும். அடுத்தவர் வயித்தெரிச்சலைப் பற்றி நமக்கேன் கவலை.

இறுதிக் ஊர்வலம் செல்லும் பாதையை அதிர வைக்க பல ஆயிரம் ரூபாவுக்கு பட்டாசு வாங்க வேண்டும். வீதியால் போகிறவனை மாரடைப்பு வந்து (காட் அற்றாக்) மரணிக்கும் வரை அதிர வைக்க வேண்டும்.

கால் மணி நேரமாவது வீதியைக் கைப்பற்றி கட்டுப்பாட்டுப் பிரதேசமாக வைத்திருக்க வேண்டும்.

நல்ல காரியங்களுக்குச் செல்பவரை விலகிச் செல்லுமாறு அடையாளம் காட்ட 500 மீற்றருக்கு முன்பாக பட்டாசு கொளுத்தும் மரபைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். அறிவதற்கு ஒரு சிலரைத் தவிர யாருக்கும் ஆர்வமில்லை. இறுதிக் கிரியை நடக்கும் இந்து மயானத்துக் ஆள்கள் வருவது குறைவு என்று கால் போத்தல் சாராயம் கொடுப்பது கூட ஆங்காங்கே பொறின் கறன்சியின் (Foreign currency) பாசனாகி விட்டது.

ஆனால் இன்றும் ஒரு சில இடங்களில் தமிழ் மரபு காத்து மரண வீடுகள் மரண யாத்திரைகள் நிகழ்கின்றன. பூநகரிப் பிரதேச மக்களை இந்த விடயத்தில் முன்னுதாரணமாகக் கூறலாம்.

அவர்கள் பூவரசம் கட்டை தறித்து அதில் பாடை கட்டி இறந்தவரின் உடலை வைத்து மனிதர்கள் தூக்கி வருவார்கள்.

எளிமையாகவும் தமிழ்ப் பண்பாடாகவும் இருக்கிறது. வாழ்க்கைச் செலவு எகிறிப் பாய்கிறது. வாழ்வதற்கு என்ன செய்வது என ஒரு கூட்டம் ஏக்கம் கொள்கிறது.

யோசித்து யோசித்து மூளையை விட்டு உடலையும் உளத்தையும் கெடுக்கிறது.

அதே நேரம் இன்னுமொரு கூட்டம் இருக்கின்ற பணத்தை வைத்து எப்படி பகட்டுக் காட்டலாமென நாளுக்கு நாள் மண்டையைப் போட்டுக் கசக்குகிறது.

1970 களின் இறுதியில் உனக்காக நான் எனும் ஒரு தமிழ் சினிமாப்படம் வந்தது. அதில் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் ஆகியோர் நடித்திருந்தனர்.

அதில் ஓர் பாடல் .

ஏழ்மையின் உச்சத்தில் பட்டினி கிடந்து ஒருவன் நோயினால் இறக்கும் தருணப் பாடல் அது.

“இறைவன் உலகத்தைப் படைத்தானா ஏழ்மையை அவன் தான் படைத்தானா.

ஏழ்மையைப் படைத்தது அவன் என்றால் இறைவன் என்பவன் எதற்காக... பொன்னகை அணிந்த மாளிகைகள் ... புன்னகை மறந்த மண் குடிசை பசிவர அங்கே மாத்தரைகள்... பட்டினியால் இங்கே யாத்திரைகள்... என அந்தப் பாடல் தொடர்கிறது.

வறுமையின் உச்சங்களைக் காணும் போது முந்திய தலைமுறையினருக்கு இப் பாடல் ஞாபகத்துக்கு வரும்.

“கஞ்சிக்கு உப்பில்லையென ஒரு கூட்டம் அலைகிறது. பாயாசத்துக்கு சீனி காணாது என இன்னுமொரு கூட்டம் கவலை கொள்கிறது”

மால்தூஸ் என்றொரு அறிஞர் சொன்னார்” தற்போதைய சனத்தொகையைப் போல பலமடங்கு சனத்தொகைக்கு உணவு கொடுக்கக் கூடிய அளவுக்கு உலகில் உணவு வளங்கள் இருக்கிறது. ஆனால் உணவுப் பங்கீடு சமமாக இல்லை.

வீண் விரயங்களும் உணவு உற்பத்தியைச் செய்யாம லிருக்க மானியம் வழங்கும் அரசாங்கங்க ளும் இருப்பது தான் பிரதான பிரச்சினை என்றார்.

எம்மவருக்கு வரும் வெளிநாட்டுக் காசு எப்படி வருகிறது. குளிர் குத்தக் குத்த விறைச்சு விறைச்சு எப்படி உழைத்து அனுப்புகின்றார்கள் என்ற உண்மையைப் பலரும் உணர்வதில்லை.

தமது வசதிக்காக உணர மறுக்கிறார்கள். வெளிநாடுகளில் இருந்து வருவது பொறின் கறன்சி அல்ல பிளட் கறன்சி (blood currency) என்பதை நிறையப் பேர் உணர மறுப்பது தான் எமது மண்ணின் பொருளாதார வள விரயங்களுக்கெல்லாம் மூலகாரணம்.

இன்னுமொரு 20, 30 வருடங்களில் இந்த நிதி வருகை நின்று போகப் போகிறது.

முதலாம் தலைமுறையின் ஆயுள் காலங்கள் முடிய பண வருகையும் நின்று விடும்.

அங்கு பிறந்து வளர்ந்த இரண்டாம் தலைமுறை கேஎவ்சி, மக்டொனால்ட்ஸ், கிங்ஸ்பேகர்களுடனும், ரெஸ்ரோறன்றுகளுடனும் தமது வாழ்வைப் பிணைத்து இருக்கும்.

உழைப்புக்கும்,சேமிப்புக்கும் சிக்கனத்துக்கும் பேர் போன எமது மண்ணில் ஆடம்பர நுகர்வுக் கலாசாரங்கள் அதல பாதாளத்தில் கொண்டு போய் விடும் காலத்தைத் தவிர்க்க மாற்றுச் சிந்தனைகள் வளர வேண்டும். ■

# இப்படி இருந்தால் எப்படி?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோரைப் பிள்ளைகள் பிரிந்திருப்பதையும் அனுமதிக்கக் கூடாது. ஆரம்பக் கல்வியை மகிழ்ச்சியான சூழலில் ஏற்படுத்திக் கொடுத்தால் தான் கல்வியில் மாணவர் தம் விருப்பத்தைச் செலுத்துவர். எதிர்கால வன்முறைக் கலாசாரத்திலும் தம்மை ஈடுபடுத்த மாட்டார்கள். அத்திபாரத்தில் குறையை வைத்துக்கொண்டு, கட்டத்தை எப்படி பலமாகக் கட்டியெழுப்ப முடியும்? எனவே, முன்பள்ளிகளின் செயற்பாடுகளுக்கு கடிவாள மிடுவது கல்விப் புலம் சாாந்தோரின் முதல் கடமையாகும்.

முன்பள்ளிகளையடுத்து, மாணவர்கள் செல்வது பாடசாலைகளின் ஆரம்பக் கல்விப் பிரிவுக்குத்தான். பிள்ளைகளை பிள்ளைகளாகப் பார்க்காமல், ஏதோ விச ஜந்து போல பார்க்கும் ஒரு நிலையே பெரும்பாலான ஆரம்பப் பிரிவுகளில் காணப்படுகிறது. என்னதான் செயலமர்வுகளில், அதிபர், ஆசிரியர்களுக்கு பெறுமதியான மாணவர் சார்ந்த கருத்துக்கள் கூறப்பட்டாலும், மாணவனின் மனநிலையை மழுங்கடிக்கும் செயல்களில் தான் கற்பிப்பவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

தாய, தந்தைகளால் பூவைப் போல மென்மையாக வளர்க்கப்பட்ட மாணவர்கள் கொடுங்கோல் கொண்டே அடக்கப்படுகிறார்கள்.

அன்று ஒரு நாள் காலைப் பிரார்த்தனை நேரம். ஒரு மாணவன் கதைத்து விட்டான் என ஒரு அதிபர், ஆவேசமாக முதுகில் தாக்குகிறார். அந்த மாணவனின் விழிகள் நீரால் நிறைகின்றன. அதன்பிறகு அவன் வகுப்பறையில் எதையோ பறிக்கொடுத்த நிலையிலேயே காணப்பட்டான். கேள்விகளுக்கும் விடை இல்லை. எதுவுமே எழுதவில்லை. கல்வியில் ஈடுபாடும் காட்டவில்லை. இப்படிப்பட்ட மாணவன், எதிர்காலத் தலைவனாக எப்படி வரமுடியும்? இவன் வாள் தூக்குவானே ஒழிய, ஆசிரியர்களுக்கு வாழ்த்துப்பாட ஒரு போதும் வரவேமாட்டான். இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், இது கொண்டு நம் ஆரம்பக் கல்வியின் குறைபாடுகளையும் களைய வேண்டும்.

### ஆசிரிய வளங்கள் பகிரப்படல்

மாணவர்களுக்கு கல்வியைப் போதிப்பவர்கள் ஆசிரியர்கள். அந்த ஆசிரியர்கள் விருப்போடு தான் தம் கடமைகளை செய்கிறார்களா என்றால் இல்லை என்பதே முடிவான கருத்தாகும். இதற்கு காரணங்கள் பல கூறலாம். அவற்றுள் ஒன்று, பொருத்தமற்ற நியமனங்கள். ஆசிரியத் தொழிலுக்கு ஆர்வமில்லாதவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கல், ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டாலும் விருப்பமான, ஆர்வமுள்ள பாடங்களுக்கு நியமனம் வழங்காமல் கல்வியதிகாரிகள் தாமாக ஒரு பாடத்தை தெரிவு செய்து அதனைக் கற்பிக்கும்படி நியமனத்தை வழங்குகிறார்கள்.இது அந்த ஆசிரியரின் கற்பித்தல் மனோபாவத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, அதன் விளைவாகப் பிள்ளைகள் பலிக்கடாவாக்கப்படுகிறார்கள்.

கல்வியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களை தேசியப் பாடசாலைகளுக்கு மட்டும் வழங்குதல், ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குப் பதிலாக உடனடி மாற்றீடான ஆசிரியர்களை வழங்காமை, அதற்குப் பதிலீடாக அதிபர்கள், தொண்டராசிரியர்களை வைத்துக் கொண்டால் அவர்களைப் பணியிலிருந்து நீங்கச்செய்வது, சலுகைகள், வருமானங்களை அதிகரிக்காமை என்று கல்விப் புலத்தில் பட்டியலிடப் படவேண்டிய மாற்றங்கள் நிறையவே உள்ளன. தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை அப்பருவ மாணவரின் ஏழரைச்சனி. இவை அனைத்திலும் உடனடி மாற்றங்கள் ஏற்படுத்தாதவிடத்து வடக்கு மாகாணம் தொடர்ந்தும் பின்தங்குவதை தவிர்த்து விட முடியாது. ■




● சொலமன் யோகநாதன்

ஹியூம் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து செல்லும் பார்ட்டன் நெடுஞ்சாலையில், யாஸ் நகரிலிருந்து ஒரு இருபது கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள மறம்பேறமன் பிரதேசம் திராட்சைப் பழங்களுக்குப் பெயர் போனது. பிரகாசமான வெயிலெறிக்கும் அதேநேரம் அளவான வெப்பநிலை கொண்ட இச்சமதரை நிலத்தில் திராட்சைப்பழ ரசம் தயாரிக்கும் பல வைனரிகள் உள்ளன.

அங்கே எழுபது ஆண்டுகளாகப் பரம்பரை பரம்பரையாக மாக்கினஸ் குடும்பத்துக்கு சொந்தமான ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. இக்கதையின் முக்கிய பாத்திரமான பொப் மாக்கினஸின் தாத்தா ஜேம்ஸ் மாக்கினேஸ்"க்கு வயதாகி விட, தோட்டம் அவரது ஒரே பிள்ளையான பொப்பின் தகப்பன் டேவிட் மாக்கினஸ் கைக்கு வந்தது. தோட்டத்தில் வேலை செய்ய விரும்பாத சோம்பேறியான டேவிட், தோட்டத்தை குத்தகைக்கு விட்டு விட்டு, பழ ரசம் தயாரிக்கும் வைனரியை மட்டும் நடத்திக்கொண்டிருந்தார். இது தாத்தாவுக்குப் பெருங் கோபம். பொப் அப்போது சிறுவன்.

'சின்னப் பயலே, நீ டாடி செய்த பிழையை விட்டு விடாதே. நீயே தோட்டத்தை முழுவதுமாய் எடுத்துக் கொள். அதை கண்ட பின்னரே நான் கண்களை மூடுவேன்" - என்று தாத்தா சொன்னதை நிறைவேற்றினான் பொப். டேவிட் மாக்கினஸ் அறுபதாவது வயதில் புற்று நோயால் இறந்தார்.

பொப்பின் சகோதரி ஆன் இங்கிலாந்து சென்று குடியேறி விட்டதால் அவளது பங்கையும் விலைக்கு வாங்கி முழு தோட்டத்துக்கும் சொந்தக்காரனாகிய பொப் ரைசலிங், சிராஸ் மற்றும் சவிக்னோன் பழ மரங்களால் அவனது 25 ஏக்கர் காணியையும் நிறைத்தான். பல்லாயிரம் பச்சைக்குடைகளை நிலத்தில் நட்டு வைத்திருந்தாற் போல அவை நீண்டு பரந்து பார்வையின் எல்லை வரை தெரிந்தன.

சிறு வயது முதல் தோட்ட வேலைகளிலேயே அவன் முழுப்பகலும் கழியும். கோடையில் வேர்வை தராத, அனல் காற்றூதும் வெயிலிலும், பனியின் இதமான கம்பளிப் போர்வை போன்ற பிரகாசமான வெயிலிலும் பழக்கப்பட்ட அவன் தோல் மஞ்சளும், சிவப்பும் கலந்து தெரியும் ஒரு பீச் பழத்தைப் போலிருக்கும்.

பொப் முதலாம் திருமணத்தில் மனைவி ஜெனியுடன் ஏற்பட்ட விரிசலினால் விவாகரத்துப் பெற்று அவளைப் பிரிந்து விட்டான். அதற்குப் பிறகு லாராவைச் சந்தித்தது பன்னிரண்டு வருடங்கள் கழித்து. இந்த இடைவெளியில் ஒரு சில பெண்களுடன் தற்காலிகப் பழக்கங்கள் இருந்தது என்றாலும் அவை நிலைக்கவில்லை.

லாராவின் தகப்பன் ஆதர், ஹன்டர் பள்ளத்தாக்கு வைனரியொன்றின் சொந்தக்காரர்.

தேசிய ரீதியில் சிறந்த வைன் தெரிவு செய்யும் நிகழ்வொன்றுக்காக அடிலெய்ட் சென்றிருந்தபோதே தந்தையின் வைனரியின் பிரதிநிதியாக வந்திருந்த லாராவை முதன் முதலாக பொப் சந்தித்தான். அந்தக் கடற்கரை விடுதியில் அவர்களின் முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

விபத்தொன்றில் கணவனைப் பிரிந்து மகளுடன் ஹன்டர் பள்ளத்தாக்கில் தந்தையின் வீட்டில் வசித்து வரும் லாராவின் கதையைக் கேட்டுக்கொண்டே அவளின் ஸிராஸ் திராட்சை போன்ற சாம்பலும், கரு நீலமுமான விழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். பொப். அன்று அவர்களின் நெருக்கம் தீயாய் கனன்றது.

பொப்பின் அழைப்பை ஏற்று ஒரு ஏப்ரல் மாதத்தில் மகள் செல்சியையும் கூட்டிக் கொண்டு மாக்கினஸ் குடும்பத்தின் திராட்சைத் தோட்டத்தைப் பார்க்க வந்தாள் லாரா. பாதாள அறைகளில் சேமிக்கப்பட்டிருக்கும் வைன் சாம்பிள்களை ருசி பார்க்க வருடாந்தம் வரும் ஆட்கள் கூட்டத்துடன் லாராவும், செல்சியும் இணைந்து கொண்டனர். செல்லர் என்றழைக்கப்படும் நிலவறைகளில் ஓக் மரத்தாலான பீப்பாக்களில் வைன் நிரப்பி சரித்து அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையில் அடிக்கடி கையைப் பற்றியிருந்த தாயிடமிருந்து விடுவித்துக்கொண்டு முன்னே ஓடினாள் செல்சி.

செல்சி எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு கணத்தில் வைன் பீப்பாக்களின் மறைவிடமொன்றை நோக்கி லாராவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் குளிர் நிறைந்த செல்லரில் விறைத்துப் போயிருந்த அவள் உதடுகளை தன் முத்தத்தினால் சூடாக்கினான் பொப்.

'மம்மீ" என்று கத்தியபடி லாராவைத் தேடி ஓடி வந்த செல்சி அணைத்தபடி முத்தமிட்டுக் கொண்டிருந்த தாயையும், பொப்பையும் கண்டு வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டு ஓடினாள்.

'பாஸ்ரட்"

அபோது அவளுக்கு வயது எட்டு.

மாசி மாத முற்பகுதியில் பழ மரங்கள் பயிரிடப்படாமல் பசும் புல் வளர்ந்து கிடந்த அவனது தோட்டத்திலுள்ள புற்தரையிலேயே காலை பதினொரு மணிக்கு அவர்களின் திருமணம் நடந்தது. அந்தப் பச்சைப் புல் மணம் வீசிய புற்தரையில் நீண்ட வெள்ளைச் சீலை விரித்த மேசையொன்றும் பிளாஸ்டிக் கதிரைகளும் அடுக்கப்பட்டிருந்தன.

தை, மாசி மாதங்களில் பழங்கள் பழுக்க, காற்றில் அவற்றின் வாசனை பிடித்து வரும் பறவைகள் அவற்றை உண்ணாமல் தடுக்க, பெரிய வெள்ளை வலைகளைப் போட்டு திராட்சை மரங்களை மூடி வைத்திருந்தார்கள்.

முகத்தை மூடியிருந்த வெண்ணிற வலையுடன் பக்கத்தில் மணப்பெண் கோலத்தில் அமர்ந்திருந்த லாராவிடம்,

"அங்கே பார், உன்னைப் போலவே, அங்கே திராட்சை மரங்களும் தம் தலையை மூடி வெள்ளை நெற் அணிந்திருக்கின்றன" - என்று கிண்டலாகச் சொன்னான் பொப்.

"நானே மெய்யான திராட்சைச்செடி நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்." - என்ற இயேசு நாதரின் அவ்விடத்துக்குப் பொருத்தமான உவமை ஒன்றை சொல்லி மணவாழ்வில் ஒருவரையொருவர் புரிந்து கொள்வ தன் தேவையை அவர்களின் விவாகத்தை ஜெபித்து ஆசீர்வதிக்க வந்திருந்த அங்கிலிக்கன் குருவானவர் தனது திருமண செய்தியில் சொல்லிக் கொண்டிருந்தார்.

லாராவுக்குப் பக்கத்திலேயே அவளுடன் ஒட்டிக் கொண்டு அமர்ந்திருந்த செல்சிக்கு அப்போது வயது ஒன்பது. எவருக்கும் தெரியாமல் கொயின் பேர்சில் வைத்திருக்கும் இறந்து போன தனது தகப்பனின் புகைப்படத்தை எடுத்து பார்ப்பதும் வைப்பதுமாக இருந்த அவளுக்கு அங்கு நடப்பவை எல்லாமே வெறுப்பைத் தந்தன.

லாராவுக்கும், பொப்புக்கும் இடையில் நடைபெற்றது இரண்டாம் திருமணம் என்றாலும் நிறையப் பேர் திருமணத்துக்கு வந்திருந்திருந்தனர். பாப் திராட்சை ரச வியாபாரத்தில் அதிகம் அறியப்பட்ட ஒருவன் என்பதால் வர்த்தகத் தொடர்பால் அறிந்தவர்கள் அநேகம்.

றிசெப்சன் முடித்துக் காரில் மூவரும் வீட்டுக்கு வந்த இறங்கியவுடனேயே -

'இவர்தான் இனி உன் டாடி"

'நோ இவர் இல்லை, இல்லை" - வெறுப்பை உமிழ்ந்து கத்திக் கொண்டே ஓடிய செல்சியைப் பார்த்து திகைத்து நின்றனர் பொப்பும் லாராவும்.

காலம் எந்தக் காயத்தையும் ஆற்றிவிடும் என்று நம்பினாள் லாரா. ஆனால் அது நடக்கவேயில்லை.

வேலையாட்கள் இருந்தபோதும் தோட்டத்தையும், வைனரியையும் ஒரே நேரத்தில் நிர்வகிப்பது மிகக்கடினமான வேலை. வருடம் முழுவதும் கண்ணில் எண்ணெயை ஊற்றிக்கொண்டு கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். லாரா வந்த பிறகு அவன் வேலைகளில் கொஞ்சம் அவளும் எடுத்துக் கொண்டாள். லாரா செல்லரையும், வைன் விற்பனையையும் பார்த்துக் கொள்ள திராட்சைத் தோட்டத்தையும் அதன் பராமரிப்பு வேலைகளின் பொப் பார்த்துக் கொண்டான்.

பொப்புக்கு யார் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடும் தாராள மனம். திராட்சை அறுவடையின்போது மரங்களை உலுப்பி பழங்களை விழுத்த பயன்படுத்தும் பெலெங்க் இயந்திரங்களைக்கூட யாரும் கேட்டால் லாராவுக்குப் பிடிக்காது என்று தெரிந்தும்கூட இரவல் கொடுத்து விடுவான்.

ஓடும்போதே உயரமான அதன் இரு பக்க சில்லுகளுக்கிடையே உள்ள இடைவெளியினூடு மரங்களை உள்ளே வர விட்டு உலுப்பி பழங்களை உதிர்த்து செல்லும் இந்த இயந்திரம், ஒரு பெட்டைக் கோழியை மிதித்து விட்டு அடுத்த கோழியை நோக்கிச் செல்லும் சேவலைப் போலிருக்கும். ஒரு பெல்ட்டினூடாக பெரிய தொட்டியொன்றினுள் பழங்களை சேர்க்கும் இந்த பெலென்ங்கை பிறகு பழச்சாறு பிழிவதற்காக வைனரிக்குக் ஓட்டிக் கொண்டு போவான் பொப்.

பழங்களின் வெப்பநிலை தாழ்வாக இருப்பதற்கு வசதியாக வெயில் தணிந்த மாலையில் அல்லது இரவில் அறுவடை நடக்கும். வைனரியிலேயே பழங்களுடன் கலந்து கிடக்கும் இலை, கிளைகள் ம்றறும் பூச்சி, பல்லிகளை அகற்றி வைட்டு பழ ரசம் பிழிந்தெடுக்கும் இயந்திரங்கள் ஓடும். பழங்கள் அங்கு போவது முதல் பழ ரசத்தை போத்தலில் அடைப்பது வரையான வேலைகளுக்கென பலர் வைனரியில் வேலை செய்தார்கள்.

பொப்புக்கு பதினான்கு வயதிலிருந்தே புகை பிடிக்கும் பழக்கம் இருந்தது. நாற்பத்தைந்து வயதில் அவனுக்கு இரத்தக் குழாயில் ஏற்பட்ட வீக்கம் ஒன்றை அடுத்து புகைப்பதை நிறுத்தும்படி குடும்ப வைத்தியர் கண்டிப்பாகச் சொன்னார். கொஞ்ச நாள் நிறுத்திப் பார்த்து விட்டு பிறகு மெதுவாக திருட்டுத்தனமாக லாராவுக்குத் தெரியாமல் மீண்டும் புகைக்க ஆரம்பித்தான். லாராவை விடவும் சிகரட் எப்போதும் அவனுக்கு ஒரு நீண்டகால நெருக்கமான உறவாக இருந்தது.

வின்டர் வந்தால் பகலில் குளிர்ந்து விறைத்திருக்கும் வீட்டை மாலையில் சூடாக்கி வைத்திருக்கும் 'சென்ட்ரல் ஹீட்டிங்' வீட்டில் இருந்தது. அது இருந்து என்ன? அதைப் போடுவதுதான் பிரச்சினை. லாராக்கு ஹீட்டர் போட்டால் அலர்ஜி.

உடனே அதை நிறுத்தி விட்டுத்தான் மறு வேலை பார்ப்பாள். பகலிலும் குளிராக இருக்கும். செல்லர்களில் நின்று அவள் குளிருக்குப் பழகி விட்டிருந்தாள்.

பொப் அவளுக்கு எதிர் மாறு. அவன் வேலை செய்வது அனல் தகிக்கும் வெயிலில். வீட்டுக்கு வந்தால் குளிர் தாங்க முடியாது. பொப் சென்ட்ரல் ஹீட்டரை போடுவதும் பிறகு லாரா நிறுத்துவதுமாக இருவருக்கும் பிறகு குளிர் யுத்தம் ஆரம்பிக்கும்.

அன்று இரவு இருவரும் குடும்ப அறையிலிருந்து டிவியை கண் வெட்டாது பார்த்துக் கொண்டிருந்த போதுதான் அது ஆரம்பித்தது.

"என்ன குளிர்? தலையெல்லாம் விறைத்துவிட்டது."

"குளிர்த் தொப்பி ஒன்றைப் போட்டுக் கொண்டால் என்ன. மொட்டைத்தலைக்கு குளிர் வலு சுகமாகப் பிடிக்கும்தானே"

மொட்டைத் தலை என்று சொன்னாலே பொப்புக்குப் பிரசர் ஏறிவிடும். இப்படி வேறு எவரும் அவனைப் பகிடி பண்ணியது கிடையாது. இள வயதில் அவனுக்கு நல்ல பொன்னிறத் தலைமயிர் இருந்தது. முப்பத்தைந்து வயது வர, அவன் தலை நடுவில் கிறவல் ரோட்டு போட்டது மாதிரி இரு புறமும் மட்டும் கொஞ்ச மயிர் மரங்கள் நிற்பது போலாகிவிட்டது.

"தலையாலை மட்டுமா குளிர் பிடிக்குது? கண், காது, மூக்கு, வாய் என்று எல்லாத்தையும் மூடிக் கட்ட முடியுமா என்ன"

"மூடிக் கட்டு பொப். இல்லாவிட்டால் பில்லைக் கட்டு. சென்ட்ரல் ஹீட்டரை போட்டால் தொகையாக காஸ் பில் வரும்"

"யாருக்கு காசைச் சேர்த்து வைக்கிறாய்.? உள்ளது உனக்குப் போதாதா"

லாராவின் பதில் தாக்குதல் வர முன்னமே பொப் குடும்ப அறையை விட்டு வெளியேறினான். லாரா தொடர்ந்து டிவி பார்த்துக்கொண்டிருந்தாள்.


கராஜ்"க்குள் சென்று ஒயில் ஹீட்டரை எடுத்துக்கொண்டு வந்து படிக்கும் அறைக்குள் போட்டான். ஒயில் மெல்ல சூடாகி வந்தது. அறைக்குள் எவ்வளவு நேரம் சும்மா இருப்பது?

மேலே சீலிங்கின் மேல் ஏதோ ஓடும் சத்தம். அது எலிகள் அல்லது மூஞ்சூறுகள் என்றே நினைத்தான். ஆனால் அது ஒரு 'பொஸம்' என்று அடுத்த வாரமே தெரிந்து விட்டது.

அன்று நிலவறையிலிருந்து ட்ரக்கில் பழைய பீப்பாக்களை ஏற்றும் வேலை பகல் முழுதும் இருந்தது. தன் யூட்டை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வர இருட்டி விட்டது. மரப்படலையினூடு உள்ளே நுழைய, வழமையாக மின் விளக்கு வெளிச்சம் தெரியும் வீடு அன்று இருட்டாகவிருந்தது. படலையிலிருந்து வீடு அரை கிலோமீற்றர் போகுமளவுக்கு ஐந்து ஏக்கர் காணியின் நடுவில் அவன் வீடு இருந்ததால் மனம் பதைக்க வேகமாக யூட்டை செலுத்தி உள்ளே செல்ல, லாராவும் செல்சியும் மெழுகுதிரியை கொளுத்தி வைத்துக் கொண்டிருந்தனர்.

'சுடு தண்ணீர்கூட வரவில்லை. குளிர் தண்ணீரில் நடுங்கி நடுங்கிக் குளித்து தும்மிக் கொண்டிருக்கிறாள் செல்சி"

(16ஆம் பக்கம் பார்க்க)



# ‘சி.வி.வி
# கசா
# கசப்பது

● செந்தூரி

ஒக்ரோபர் 09 - தேசங்களைக் கடந்த புரட்சியின் புயல் எர்னஸ்டோ சே குவேராவின் ஐம்பத்தியோராவது நினைவு தினம். ஒருமுறை சேவின் பிறந்தநாள் விழாவொன்றில், அவரது முகமும் - படங்களும் - அடையாளங்களும், அவரால் எதிர்க்கப்பட்ட முதலாளித்துவ நாடுகளினாலேயே வணிகக்குறியீடுகளாகப் பயன்படுத்துவது பற்றி அவரது மூத்த மகள் அலெய்டா அறிக்கையொன்றை வெளிப்படுத்தியிருந்தார் .

- “எனது தந்தையின் பெயரையும், படத்தையும் வணிக முத்திரையாக்காதீர்கள். வோட்காவுக்கும், பிஸ்ஸி பானத்துக்கும், சுவிஸ் கைப்பேசிக்கும் எனது தந்தையின் படத்தை விளம்பரச் சின்னமாகப் பயன்படுத்துவது அவரை அவமதிக்கும் செயலாகும். முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராடியவரை அதே முதலாளியம் பணத்துக்காகப் பயன்படுத்துவது முரண்பாடானது. எங்களுக்குப் பணம் தேவையில்லை. மரியாதை தான் தேவை.”

- சேகுவேராவின் புகழ் வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுவதை அருவருத்தார் அவரது மகள்.

காமத்துக்கு கண் இல்லை என்பது போல முதலாளியப் பணமோகத்துக்கும் முறை கிடையாது. ‘சே’வை முதலாளியமே வேட்டையாடியது. அவரது தியாகம், புகழ், பெயர் உலகெங்குமுள்ள இளைஞர்களின் உணர்வுகளில் ஒன்றே கலந்துள்ளது. இதைத் தெரிந்துகொண்ட பின் அவரைவிளம்பரச்சின்னமாகப்பயன்படுத்துகிறது அதே முதலாளியம்.

போராடி வீழ்ந்த அருவருப்பான முதலாளியத்துக்கு மீண்டும் பலியாகுவது, வாழ்நாள் புரட்சியாளன் சே குவேராவுக்கு மட்டும் நிகழவில்லை. இன்றைக்குத் தமிழ்த்தேசிய அரசியல் போர்க்களத்திலும் - உரிமைக் குரலை நசுக்கி வீழ்த்தி குரல்வளையில் பணப்பிடியின் வலிமையால் உயிர்துடிக்க வைத்திருப்பதும், அதே பெருமுதலாளித்துவமும் - முதலாளித்துவ சிந்தனைகளுமே.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்கு எதிராக முதலாளித்துவத்தின் நகர்வுகள் ஏன் வலிமையாகின எனவும் தெரிந்துகொள்ள முயல்வோம்.

**பேரினவாதம் உருவாக்கிய,
புதிய தமிழ் முதலாளிகளிடம்
தாரை வார்க்கப்பட்டதா, தமிழ்த் தேசியம்?**



1997 - 2000 காலப்பகுதியில் யாழ்ப்பாண நகரில் குளிர்களி எனப்படும், “கிறீம் ஹவுஸ்” கடைகள் கஸ்தூரியார் வீதியிலே பிரபலம். நினைவாற்றல் சரியென்றால், அக்காலப்பகுதியில் குறித்த நகரப்பகுதியில் சுமார் ஐந்து கடைகளின் பெருத்த வியாபாரமாகக் குளிர்களி விற்பனையிருந்தது.

நகரில் குவியும் மக்களைக் குறிவைத்து எப்போதும் நிரம்பியிருக்கும் இந்தக் கடைகளுக்கு எதிர்க்கடை ஒன்று, கொஞ்சம் வித்தியாசமான பெயரோடு நகரிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் நல்லூரில் உருவானது.

பிரதான வீதியில் கூட நுழைவாயில் இல்லாத இந்தக் குளிர்களி விற்பனை நிலையம், இன்றைய திகதியில் யாழ்ப்பாணத்தின் அடையாளம்.

யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாப் பயணிகளாக வருபவர்கள் எவராயினும், இங்கே வந்துபோகாமல் முழுமைகாணாதநிலைக்குகுறித்ததயாரிப்பாளர்களின் தரம் - சுவை - சேவை அல்லது ஏதோவொன்று அபரிமிதமானது.

யாழ். நகருக்கு தேவைகளுக்காக வந்துபோகும் மக்களை, தாகம் தணிக்க நல்லூருக்கு வந்து போகச் செய்யுமளவுக்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்நிறுவனம் பெருவளர்ச்சி கண்டிருந்தது.

திடீரென, மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்நிறுவனத்தின் உற்பத்திகள் மீது சுகாதார சீர்கேட்டு புகார்கள் சுமத்தப்பட்டு அடுக்கடுக்கான பரிசோதனைகள் நடாத்தப்பட்டு - மத்திய, மாகாண சுகாதார நிர்வாகப் பிரிவுகளின் கடுமையான கண்காணிப்புடன் வழக்குகள் போடப்பட்டன. உற்பத்திக்குத் தற்காலிக தடை - உபகரணங்கள் - பரிமாறிகள் மீது சோதனை போன்ற பல்வேறு நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டன.

ஊடகங்கள் முன்பக்கத் தலைப்பின் எழுத்தின் அளவை அதீதப்படுத்தும் அளவுக்கு பொதுமக்களிடம் அதிர்ச்சியும் - அதிருப்தியும் விதைக்கப்பட்டன. தேசிய நாளிதழ்கள் கூட இதைப்பேசின!

முதலில், திடீர்த்தடைக்கும் சரிந்துவிழும் செல்வாக்குக்கு காரணம் தெரியாமல் தடுமாறிய குறிப்பிட்ட நிறுவனத்தின் நிர்வாகம், ரிஷிமூலத்தை தெரிந்து கொண்டு அதேவழியில் சென்று மீண்டது.

புகார்களிலிருந்தும் - குற்றச்சாட்டிலிருந்தும் - வழக்கிலிருந்து வெளிவந்து மீண்டும், அதே உற்சாகத்துடன் குறிப்பிட்ட குளிர்களி நிலையம் விற்பனையில் கொடி கட்டிப் பறக்கின்றது.

குற்றச்சாட்டுகளுக்கு ஒருவருடங்களுக்கு முன்னர், கொழும்பைத் தலைமை உற்பத்தி நிலையமாகக் கொண்ட ஐ.தே.க கட்சியின் தேர்தல் சின்னத்தை - வர்த்தக நாமமாகக் கொண்ட பதப்படுத்தப்பட்டு - கொள்கலனில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வரும் குளிர்களி தயாரிப்புக்களின் வடபிராந்தியத்துக்கான விற்பனை உரிமத்தை கோடிகள் கொடுத்து கைமாற்றிப் பெற்றுக்கொண்டார், ஒரு தொழிலதிபர்.

இந்த விற்பனையுரிமை கைமாற்றலின் முகவரகம், நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது அவரது பினாமி ஒருவருடையது. “நடந்தது என்ன?” என்பதற்கு இதற்கு மேலும் விளக்கம் தேவைப்படாது.

வடக்கின் தமிழ்த் தேசிய அரசியலில், பெருமுதலாளித்துவமும் - அவர்களிடமிருந்து சீறிப்பாயும் கணக்கற்ற காசுக் கத்தைகளும் நிகழ்த்தும் அசிங்கங்கள், தமிழர் உரிமைக்கு எதிரான அப்பட்டமான கோழைக்கத்திகள்.

பேரினவாத சிங்கள அரசு இவ்விடரை, தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சியாகவும் ஒன்றுபட்ட இலங்கைக்கான அத்திவாரமாகவும் பார்க்கின்றது - எதிர்ப்புறத்தில் இவ்விடரின் தமிழ்பேசும் முகவர்கள், தமது சுய சொத்துக்குவிப்பின்பேரதிஷ்டத்துக்கானபிழைப்புவாதமாகக் காண்கின்றனர். அவ்வளவுதான்!

‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள்’ - ‘தேசியக்கட்சிகளின் வடக்குக்கான மக்கள் பிரதிநிதிகள்’ - ‘தமிழ்த் தேசிய அரசியல் செய்வதாக கூறும் மாற்றுத் தமிழ் முன்னணிகளின் உள்ளூர் அதிகாரசபைக்கான மக்கள் பிரதிநிதிகள்’ - ‘முதலமைச்சர் சி.வி.வி’, வடக்குக்கான தமிழ் அரசியல்வாதிகளின் வகைப்பாடுகள் இப்போதைக்கு இதுவேதான்.

கட்சி சார்ந்திராது - பின்புலமொன்றில்லாது - அரசியல் எதிர்காலம் ஒன்றுக்கான சுய லாபம் எப்போதுமில்லாது, தமிழ்த் தேசியத்துக்கான அரசியல்வாதியாக பெயர் சுட்டுவதற்கு மேற்சொன்ன நால்வகைக்குள், பொருத்தமிருப்பது முதலமைச்சர் சி.வி.வி மட்டுமே.

முதல்வரின் தமிழ்த் தேசியத்துக்கான நெருக்கத்துக்கும் - ஏனைய சகல தமிழர் தரப்புகளினதும் தமிழ்த் தேசியத்திலிருந்தான விலகலுக்கும் நெருக்கமான நீள் தொடர்புகளுண்டே!

பகடை : தமிழர் பிரதிநிதிகளுக்குள் உறங்கிக்கொண்டிருந்த பெருமுதலாளித்துவம்.

பணம் சார்ந்து உரிமைகளை விலை பேசுவதற்கு ஏகாதிபத்தியங்களுக்கு எக்காலத்திலும் சலிப்பதில்லை.

சொந்த தேசத்தினுள், இந்தத் தீவின் ஆதிக்குடிகளுக்கான நியாயமான உரிமைகளை மறுதலிப்பதற்கும், தமிழின ஒடுக்கல்களுக்கும் சர்வதேசிய ஏகாதிபத்தியங்களுக்கு விலைபோன சிங்களம் அதே வழியில் விலைபேசி முடிக்கவேண்டிய சரக்குகளில் ஒன்றாக, தமிழினத்தின் உரிமைப்போராட்டத்தையும் கணிப்பதற்கு பிரபாகரனுக்கு பிறகான வெற்றிடம் பெரிதும் உதவியிருக்கின்றது.


இவ்வெற்றிடத்தின் தூசிப் பங்குக்கும் நிரம்பல் பெறாத தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளின் அடிமைப்புத்தி - சிங்களத் தலைமைகளின் கண்களுக்கு ஆகப்பிந்திய அதிகாரச்சந்தைக்கான வாய்ப்புக்களை அகலத்திறந்துவிட்டிருக்கின்றது.

மத்திய அரசு, மாவட்ட ஒதுக்கீடுகள் படியான அபிவிருத்தி செயலணியில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு - பிரதேச ஒருங்கிணைப்புக்குழு ஆகியவை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பிராந்திய ரீதியிலான அபிவிருத்திப்பணிகளை குறிப்பிட்ட பிராந்தியத்துக்குரிய மக்களின் பங்களிப்புடன் முன்னுரிமைப்படுத்தவும் - தேவைகளோடு பொருந்திப் போகவும் நோக்குடையவையாக உருவாக்கியது.

ஆரம்பத்தில் பெயரளவிலிருந்த இக்குழுக்களின் பங்களிப்பை பிரதேச மட்ட அரசியல் செய்யும் தொழுவமாக மாற்றிய பெருமை மகிந்தவையே சேரும்.

ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத்தலைமையை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், அரச சார்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கொடுத்து கூடவே மாவட்ட செயலர் அல்லது பிரதேச செயலரையும் பதவிவழியில் அமர்த்தி - குறிப்பிட்ட ஒதுக்கீடுகளின் பேறான அபிவிருத்திப்பணிகளை அரசசார்பு இருந்தால் மட்டுமே செயலாக்கம் செய்யமுடியும் என்ற எண்ணத்தை மக்களிடம் தோற்றுவித்தது முன்னைய அரசு.

ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைமையில் மாகாண முதலமைச்சரோடு - மத்திய அமைச்சர்களின் பங்களிப்பும் - பதவி வழியாக அரச நிர்வாக அதிகாரி



# .வி'யின்
# ாயம் 02
# து ஏன்?

களின் பங்களிப்பும் அபிவிருத்திக்குப் போதுமானதாக இருந்த போதிலும், நிகழும் நல்லாட்சி மேலதிகமாக கேட்டுப்பெற்றுக்கொண்ட குறித்த மாவட்டத்துக்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து இணைத்தலைமை என்ற பிரயோகத்தை ஒரு கும்பல் அளவுக்கு பெருப்பித்து - முடிவெடுக்கும் திறனை காரண காரியத்துடன் வலுக்குன்றச்செய்தது.

தனித்தேசியத்துக்கான உரிமைப்போராட்டத்தை, தேர்தல் கால பிரசாரத்துக்காக - வாக்கிறைஞ்சலுக்காக பயன்படுத்திய த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற / மாகாணசபை / உள்ளூர்அதிகாரசபைகளுக்குரிய மக்கள் பிரதிநிதிகளை - டக்ளஸ் காலத்து அபிவிருத்தி அரசியலை நோக்கித் திருப்பி, தங்களையும் ஒருங்கிணைப்புக்குழுக்களின் இணைத்தலைவர்களாக்குமாறு கெஞ்ச வைக்குமளவுக்கு ஒதுக்கீடுகளின் மீதான முறையற்ற மோகத்தை வலிந்து உருவாக்கியது, நல்லாட்சியின் புரோக்கரிஸம்.

இலங்கையின், இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களை - கால காலமாக அபிவிருத்தி அரசியலுக்கான பிரயோகத்தின் கீழ் வழிநடத்தி அவ்வினத்தின் ஒவ்வொரு குடிகளிடமும், உரிமைக்கான புரட்சியின் ஒற்றைச் சிந்தனையையும் முற்றிலும் இல்லாதொழித்த முஸ்லிம் தலைமைகளின் "பண்டமாற்று இன விற்பனை" முறைக்கு சற்றும் சளைக்காத கெடுகாரியத்தை தமிழ்தேசியக்கூட்டமைப்பின் எம்.பிக்களும் - மாகாணசபை உறுப்பினர்களும், ஆகப்பிந்திய உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களும் நிகழ்த்த துணிந்தனர் - நிகழ்த்திக்கொண்டிருக்கின்றனர்.

நல்லாட்சியின் இறுதி மூன்று வருடங்களுக்குமான மக்கள் அபிமானம் இல்லாத வருடாந்த பாதீட்டுக்கு, த.தே.கூட்டமைப்பின் ஆதரவும் அமோகமாக கிடைத்தது.

கடன் வாங்கிய சர்வதேசங்களின் எல்லைக் காலங்கள் கடந்துவிட்ட பிறகு மேலதிகமான பெறுமதிசேர் வரியை மக்களின் தலையில் சுமத்தி நிறைவேற்றப்பட்ட பாதீடுகளுக்கு கூட்டமைப்பின் ஆதரவை பெற்றுக்கொள்ள, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான அபிவிருத்தி செயலணிக்கான ஒதுக்கீடு எனும் பெயரில் இவ்விரண்டு கோடி ரூபாக்களை அனுமதிக்கப்பட்ட இலஞ்சமாக கையூட்டியது, நல்லாட்சி.

இந்த முறையான கையூட்டுக்கு த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தயார் செய்யவும் - அவர்களிடமிருந்து வேறெந்த தெரிவுமற்ற சம்மதத்தை வாங்கவும், கூவத்தூர் முறையிலான விளக்கச் சந்திப்புக்களை த.தே.கூட்டமைப்பின் நிழலுலகத் தலைமைப்பீடம் ஒழுங்குசெய்திருந்தது.

அடுத்தடுத்த தேர்தல்களின் செலவீனத்துக்கான ஈடுகட்டுதலுக்கும் - உடனடியாக வரப்போகின்ற மாகாணசபை தேர்தலுக்கு மக்கள் அபிமானத்தை ஈட்டவும் - வேகமாக நிறைவேற்றப்படுகின்ற பிராந்திய அபிவிருத்தி பணிகளை காட்டி மக்களிடம் வாக்குத்திருவோடு ஏந்தவும் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் சம்மதித்தனர்.

ஏற்கனவே அரச ஆதரவோடு, தங்களதும் - தங்களை சார்ந்தவர்களினதும் - தங்களது பினாமிகளானவர்களினதும் இணைத்தொழில்களை விஸ்தரிக்கவும் அரச அடிவருடலின் அவசியத்தை தெரிந்துகொண்டிருந்த பலருக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டிருக்கவில்லை.

இனமும் - குடிகளும் எக்கேடடையினும், பணமே - பகலில்லாத தொழிலே பெரிதென்று சரணாகதி அடைந்தோரே அதிகம். அந்த இரண்டு கோடி ரூபாக்கள் பிரதேச சபைகள் ஊடாகவும், பிரதேச செயலகம் ஊடாகவும், மத்திய திணைக்களங்கள் ஊடாகவும், மாகாணத்திணைக்களங்கள்ஊடாகவும்செலவழித்தவைகள் போக எஞ்சியவை இப்போதும் எங்கள் முற்றத்திலும் - முன்வீதியிலும் - பள்ளிக்கூட மைதானத்திலும், மதிலிலும் - கோயில் வீதியிலும் - விளையாட்டுக் கழகத்தின் எல்லையிலும் - கிராம அபிவிருத்தி சபையின் பின்னாலும் - ஏன் சுடலையிலும் கூட பல்லிளித்துக்கொண்டு கொட்டியிறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வேகமாக திருந்திய வீதிகள், மின்னொளியில் மலரும் கிராமங்களின் வீதிகள், திறக்க முதலே தண்ணீர் வரும் குழாயிணைப்புக்கள், மண்போட்டு நிரவப்படும் மைதானங்கள், பளிங்குக் கல் வைத்த கழிப்பறைகள் உட்பட அண்மைக் காலத்து இன்னபிற வரவுகள் யாவையும், தமிழினத்தின் உரிமைக் கோரிக்கையை நிரந்தரமாக குழியிட்டுப்புதைத்து - கைகட்டி வாய் பொத்தி நின்று வாங்கிய பிச்சைகள்.

வடக்கு கிழக்குக்கான விசேட அபிவிருத்தி செயலணி என்ற பதாகையின் கீழும் நிகழ்த்தப்படுகின்ற சமவாய்ப்புள்ள கண்துடைப்பு நிகழ்ச்சிகளை - செயலணியில் பங்குபற்ற முடியாது என்ற நறுக்கான பதிலினால் புறக்கணித்த வடக்கு முதலமைச்சர் மீது மத்திய அரசுக்கு ஆத்திரம் வருவது நியாயமானதும் ஏற்புடையதுமாகும்.

மாறாக, நல்லாட்சியின் ஏகபோக தமிழர் முகவர்களான த.தே.கூட்டமைப்பினருக்கும் தாங்கொணாத கவலையும் - திட்டித் தீர்க்கும் எரிச்சலும் வருகின்றதென்றால், அவை மக்கள் மீதான அக்கறையினாலல்ல, அவர் கொண்ட தமிழ்த்தேசிய கொள்கை மீது காட்டும் உறுதிப் பிடிப்பின் மீதான பொறாமையினால் மட்டுமே!

- அரசிடம் அபிவிருத்திக்கான ஒதுக்கீட்டை இலஞ்சமாக பெற்றோம்.

- அந்தப்பணத்தை வாக்குத் தேடும் வாய்ப்புள்ள இடங்களென்று அனுமானமுள்ள பிரதேசங்களுக்கு அபிவிருத்தியாக பிரித்துக்கொடுத்தோம்.

- அந்தப் பணிகளையே எங்களது வேலைத் திறமாக சொல்லி இன்னொருமுறை வாக்கு கேட்போம்.

- குறிப்பிட்ட ஒதுக்கீட்டில் வந்த வேலைத்திட்டங்களுக்கான ஒப்பந்தக்காரர்களையும் நாங்களே நியமித்தோம்.

- ஒப்பந்தத்துக்கான வாய்ப்புக்களை காட்டி எங்களது பினாமிகளை ஒப்பந்தக்காரர்களாக சேர்த்து விடுவோம்.

- அவர்களிடமிருந்தும் ஒருதொகை பணத்தைக் கட்சி நிதியாகவோ, சொந்த நிதியாகவோ நன்கொடையாகவோ உறிஞ்சிக்கொள்வோம்.

- ஏற்க மறுத்த மாகாண அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களை தலைப்புச்செய்தியில் போட்டு அசிங்கப்படுத்துவோம்.

- மாகாண நிர்வாகத்தின் அசண்டையினால் நிதி திரும்பிச்செல்கின்றது என்றதொரு மாயையை மக்களிடம் உருவாக்குவோம்.

- போகின்ற விழாக்களிலெல்லாம் அரசு போட்ட பிச்சையில் செய்த வேலைகளை நாங்களே செய்ததாக திரும்பத்திரும்ப சொல்லி மக்களை உசாராக்குவோம்.

ஆனால் இவை எவற்றையுமே செய்யாமல், தமிழ்த் தேசியமும் - தன்மக்களும் - அவர்களின் தனிநிர்ணயமும் பற்றி பேசிக்கொண்டிருக்கும் முதலமைச்சரின் வெகுசன அபிமானம் கொஞ்சமும் குறையாமல் இருப்பதை எப்படிப் பொறுப்போம் எம்.பிக்களே?

தமிழீழ விடுதலைப்புலிகள், கம்யூனிஸ்டுகள் அல்லர். வர்க்க பேதத்தையோ பொருளாதார சமத்துவத்தையோ கேட்டு நடைபெற்றதல்ல தமிழர்களின் உரிமைப்போர்?

"சொந்த நிலத்தை எம்மிடம் தா?" என்ற தமிழ்த் தேசியக் கோரிக்கைக்குள் மார்க்சின் கம்யூனிசம் - சேவின் மாற்றத்துக்கான புரட்சி - லீ குவான்யூவின் தேசக் கட்டமைப்பு - மாஓ சேதுங்கின் செம்புரட்சி - பெரியாரின் சுயமரியாதை உள்ளிட்ட எண்ணற்ற எடுத்தாளுகைகள் இணைந்து தமிழனுக்கான பிரபாகரனிசத்தை வடிவமைத்தன.

பிரபாகரனுக்கு பிறகான தமிழ்த் தலைமை வெற்றிடத்தில் - முற்றிலும் மாறுபாடான சிந்தனையுடைய பெருமுதலாளித்துவத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களூடாக வளர்த்தெடுத்து தமிழ்த் தேசிய ஆன்மாவை சாகடிப்பதே, நல்லாட்சியின் பேரவா - சிங்களத்தின் பெருங்கனாவும் இதுவே.

பணமும் - பணம் சார்ந்த முதலீடுகளும் - முதலீடுகளுக்கான சுழற்சியும் - லாபத்துக்கான குறிக்கோள்களும் - லாபத்தை பெருக்குவதற்கான உத்திகளும் - பெருஞ்சொத்துக்களில்அரசமுதலீடுகளும் - தேவையேற்படின் அரச உதவிக்கடன்களும், போன்ற பற்களையுடைய முதலாளித்துவ சக்கரத்துக்குள் சிக்கிக்கொண்டவர்களுக்கு, மக்களுக்கான சமவுரிமை அரசியலிலும் - தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் என்ற சுயதம்பட்டத்திலும் பொய்கள் சாதாரணமானவையாகும்.

சிங்களப் பேரினவாதிகளால், திடீர் தொழிலதிபர்களாக வளர்த்தெடுக்கப்படுகின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தம் சொந்த மக்களிடம் சொல்லுகின்ற பொய்களுக்கு பின்னால் அரை நூற்றாண்டு வயதுடைய இலட்சியப்பெருங்கனவு சிதறி நொறுங்கிய இரத்தப் பசையின் ஈரம் இன்னமும் காயாமலுள்ளது.

2009 ற்குப் பின்னான தமிழீழ பிராந்தியத்துக்கான தமிழ் அரசியல் நிலவரங்களில் - த.தே.கூட்டமைப்பின் பெயருடைய தலைவராகவிருக்கிற கூடவே எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கின்ற இரா.சம்பந்தனின், குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய தமிழ்த்தேசியத்துக்கான நற்பணியாக : வடக்கு முதலமைச்சராக நீதியரசர் சி.வி.வியை ஈழத்தமிழருக்கு அறிமுகம் செய்து வைத்தமையை மட்டுமே சொல்லக்கூடியதாயிருக்கும்.

அவரும் - அவர்சார்ந்த கூட்டமைப்பின் எவரும் புடுங்கிய ஏனைய யாவையுமே தேவையில்லாத ஆணிகளே!

கூட்டமைப்பு நிகழ்த்தப்போவதாக பெரும்பான்மையான நிகழ்தகவுகள் ஆரூடம் கூறுகின்ற "சி.வி.வி விலக்கல்", அடுத்தடுத்த தமிழர் அரசியல் சூழமைவில் ஏற்படுத்தப்போகின்ற பாதக விளைவுகள் எவை?

**(அடுத்த வாரமும் 'கசாயம்' கசக்கும்...)**





# ஈழத்து அரங்க வெளியின் வரலாற்றுப் பாய்ச்சலில் யாழ். பல்கலைக்கழகம்

களம் 8

■ செல்வி

ஈழத்து அரங்க வெளியில் அரங்க விழா 2018

## ஓர் அரங்க சாட்சியம்

அரங்கினைக் கொண்டாடுதல் என்பது மொழிநிலைகளைக்கடந்துபண்பாட்டு ஊடாட்டங்களுக்கும் பண்பாட்டுப் பரிமாற்றங்களுக்குமான பாலமாகவும் இருக்கின்றது. அந்தவகையில் இலங்கைப் பல்க்லைக்கழகமொன்றில் சிங்கள மொழியின் ஆற்றுகையொன்றினை உள்ளீர்த்தது மிகவும் சிறப்பான விடயமாகும். வெறுமனே மகிழ்வளித்தல் என்ற நிலையையும் தாண்டி, சமூக அசைவியக்கமொன்றின் வரலாற்றைப் பேசுகின்ற குழந்தை. ம. சண்முகலிங்கத்தின் “எந்தையும் தாயும்” பனுவலின் சிங்கள மொழிபெயர்ப்பான (ஜன கரலிய குழு) “ஹிரு நோனகே” அரங்க விழாவுக்கு சிறப்பூட்டியது. கலைகள் மட்டுமே சமூகங்களுக்கிடையிலான கருத்தியல்களையும் கருத்து முரண்களையும் பரப்பக்கூடியன என்பதற்கப்பால், போர் தந்த விளைவுகளின் எச்சங்களிலொன்றான “புலப்பெயர்வும்” அது மண்ணில் உண்டாக்கிய உளவடுக்களையும் பற்றியதான “எந்தையும் தாயும்” யாழ்ப்பாணத்தின் போர்க்காலப் பதிவுகளின் சாட்சியங்களிலொன்றாக இருக்கின்றது. பதினொரு பிள்ளைகளைப் பெற்று அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு தனிமையில் வாழும் முதியவர், தனது இறப்புக்கு முன்னர் பிள்ளைகளது கடிதத்தையும் மூத்த மகனையும் காண வேண்டும் என்ற காத்திருப்பினை தனது இறப்பில் முடித்துக்கொள்வது பற்றிப் பேசுகிறது. 1990 களின் யாழ்ப்பாணமும், அதன் மீதான இராணுவக் கெடுபிடிகளும் அதன் விளைவான புலப்பெயர்வுகளும் பேசுபொருளாகும் இந்நாடகத்தின் உள்ளடக்கத்தையும் சூழமைவையும் போரின் சாட்சியங்களான தமிழினத்தவர் விளங்கிக்கொள்வதற்கும், ஆக்கிரமிப்பின் வடிவமாக தமிழர்களால் நோக்கப்படும் சிங்கள இனத்தவர்கள் விளங்கிக்கொள்வதற்கும் வேறுபாடுகள் இருக்குமென நினைப்பது சாத்தியமான கருதுகோளே ஆகும். ஆனால், பராக்கிரம நெரியல்ல அந்த நாடகத்தை நெறியாள்கை செய்திருந்த நேர்த்தியும் உள்ளார்ந்த ஆழமும் கலைக்கு மனித உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கு மொழிகயோ இனமோ ஒரு தடையல்ல எனப் புரிய வைத்திருந்தது. சங்கரப்பிள்ளைகளும் ஐயாத்துரைகளும் கண்ணன்களும் செல்வரட்ணங்களும் மகேசுவரிகளும் தசாப்தங்கள் தாண்டியும் இன்றும் எம்மிடையே உலவுகின்ற பாத்திரங்கள். பராக்கிரம நெரியல்ல யாழ்ப்பாண மாந்தர்களை அதே உள்ளடக்கத்துடன் அரங்கில் காட்டியிருந்த விதம் மிகச் சிறப்பாக இருந்தது. “எந்தையும் தாயும்” நாடகத்தை பார்த்திருந்த பார்வையாளர்களிற் பலர் “ஹிரு நோனகே” யின் லோகநாதனும் சுமுதுவும், லீலாவதியும் ஐயாத்துரையாகவும் சங்கரப்பிள்ளையாகவும் மகேசுவரியாகவும் வாழ்ந்திருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி” எனும் பாடலுடன் 1990 களின் குண்டுவீச்சுக்களுக்கும் ஹெலிகொப்ரர்களின் இரைச்சல்களுக்கும் காண்பிய வன்மை கொடுத்து, அந்தக் காலத்தினை பார்வையாளரின் மனங்களுக்குள் மீள்பார்வை செய்ய வைத்ததுடன் நாடகம் ஆரம்பமாகியது. போரின் வடுக்களைப் புதைகுழிகளும் மனிதர்களும் மட்டுமல்லாது, எமது சுவர்களும் இன்றுவரை தாங்கியிருக்கின்றன. மொத்த வடுக்களின் குறியீடாக காட்டப்படும் குண்டுதுளைத்த சுவரானது, போராட்ட வரலாற்றினையும் அதன் நினைவுகளையும் ஒருங்கே தந்தது. அதன் பின்னணியில் எந்தையும் தாயும் இசை குழைந்து வர, புலத்துக்கு பிள்ளைகளை அனுப்பிவிட்டு, சீவன் போகக் காத்திருக்கும் பெற்றோர்களை கண் முன்னே கொண்டுவந்தனர் நடிகர்கள். தொழிண்முறைக் கலைஞர்களின் தேர்ந்த பாத்திர உருவாக்கம் மொழியைக் கூட மறக்க வைத்தது. நாடகவோட்டத்தில் சிங்கள மொழிபெயர்ப்பு என்ற நினைவுகூட வரவில்லை. நாடகம் ஆரம்பித்த சில நொடிகளிலேயே வலி சுமந்த எங்கள் வாழ்க்கையில் அரங்குடன் பயணம் செய்யக்கூடியவாறு இருந்தது. வேடவுடை, ஒப்பனைகள் கூட மிகவும் கச்சிதமாக பண்பாட்டின் அடிப்படையில் காணப்பட்டன. பொதுவாக சிங்கள வடிவமைப்பாளர்கள், தமிழ் சார்ந்த வேடவுடைகளைப் புனையும்போது, சிறிதளவேனும் சிங்களச் சாயல் எட்டிப்பார்க்கும். ஆனால் இங்கு இன, மொழி கடந்து, எம்மைப் பேசியது ஆற்றுகை. மொழிபெயர்ப்பு என்ற வகையில் எங்கள் வலிகளை சகோதர மொழியில் பேசிய பராக்கிரம நெரியல்லவும் மக்கள் களரி கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள். “எந்தையும் தாயும்” நாடகத்தை வாசித்திராத பார்வையாளருக்கு அதன் பேசு பொருளை கொண்டு செய்வதில் இசையும், இசையின் மௌனிப்பும், நடிகர்களின் உடல்மொழியும் கொண்டு சென்றன. ஆற்றுகையின் நகர்விலே நடிகர்களின் மொழியை விடவும், அந்த மொழியின் உணர்வுகளே ஒவ்வொரு கணங்களும் பார்வையாளர்களுடன் பேசின. தமிழ், சிங்கள கலைஞர்கள் இணைந்து நடித்திருந்தாலும், தமிழ் மொழியின் யாழ்ப்பாணப் பிரயோகத்தின் இழையின் தொனி, அவர்களின் சிங்கள பேச்சிலும் இருந்ததை உணர முடிந்தது.

சிங்கள நாடகம் தனக்கென ஒரு இடத்தை உலக அரங்கில் பிடித்திருக்கின்றது. அதன் வடிவமும் உள்ளடக்கமும் தனித்துவமாக வளர்க்கப்பட்டுள்ளது. அரங்கவிழாவைப் பொறுத்தவரையில் “ஹிரு நோனகே” உள்ளீர்க்கப்பட்டது, மிகவும் சிறந்த முடிவாக இருப்பினும், அதன் ஆற்றுகை முறைமையில் ஒரு தமிழ் நாடக அழகியலையே பார்க்க முடிந்தது. நிகழ்ச்சி நிரலில் சிங்கள ஆற்றுகைகள் இன்னமும் இணைக்கப்பட்டிருந்திருக்கலாம்.

அரங்க விழா 2018 ஆனது, அதன் உள்ளடக்கத்திலும் ஆற்றுகை வெளிப்பாடுகளிலும் ஈழத்து அரங்கின் இன்னொரு பரிமாணத்தின் தொகுப்பாக நிகழ்த்தப்பட்டிருந்தமை மிகச் சிறந்த விடயமாகும். இன்றையதமிழ்ப்படைப்புத்தளத்தைப் பொறுத்தவரையில் குழு அரசியலைச் செய்கின்ற ஒரு மோசமான குழுவாத மனநிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது. சமூகத்தின் இயங்கியலும் கலையின் அழகியலும் தெரிந்தவர்கள் மட்டுமே படைப்புத் தளத்தை ஆண்ட காலம் போய், இன்று ஊடக வெளிச்சத்தை மட்டும் பிடியாகக் கொண்டு, அறிவிலிகளின் கூடமாக அரங்கத்தளத்தை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பது போல, அரங்கில் ஏறி கையையும் காலையும் ஆட்டிவிட்டால் தாங்களும் அரங்கவியலாளர்கள் என்ற தோரணையில் பல போலிகள் ஈழத்து அரங்க வெளியை வெற்றுக் காற்றினால் நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள். குழப்பிரித்தலும் குழப்பிரித்து குதியன் குத்துவதும் எமது அரங்கின் மரபு அல்ல.

மின்சாரம் இல்லாத காலத்தில் கூட, வீதி விளக்குகளின் அடியில் கூட தன்னைத் தற்காத்துக்கொண்ட அரங்குக்கு, இந்த குழுவாத மனநிலையை உடைக்கவேண்டிய தேவை இருக்கிறது. ஈழத்து அரங்கு என்பது யாருடையதும் சொத்து அல்ல. அது ஈழத்து மக்களுக்கானது. அரங்கவியலாளர்கள் அதை மனதில் நிறுத்துவார்களேயானால், ஈழத்து அரங்கு இன்னொரு தளத்துக்கு செல்லும். காத்திரமான படைப்புவெளியாக அரங்கினைப் பேணுவதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு பாரிய பங்கு இருக்கின்றது. பல்கலை என்ற சமூக நிறுவனமும் அதன் வழிவந்த புலமைசார் இயங்குதளமும் அவரவர் காழ்ப்புணர்வுகளுக்கும் வன்மத்துக்கும் சொந்த புகழ் வெளிச்சங்களுக்கும் இரையாகக் கூடாது. அத்தோடு, சமூகப் பெறுதியுடன் அரங்கை அதன் தரத்திலே பேண வேண்டிய சமூகக் கடப்பாடும் இருக்கின்றது. கற்றலாக அரங்கு என்பது வெறுமனே அரங்கக் கோட்பாடுகளைக் கற்பதும் நாடகங்களைப் பயிலுவதும் என்பதற்கு அப்பால், தமிழரங்கினை மாசுபடுத்தும் அரங்கப்போலிகளை இனங்கண்டு அவற்றைத் துடைத்தழித்து, செழுமையான ஈழத்து அரங்க வரலாறொன்றினைக் கட்டியமைக்க வேண்டிய பொறுப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இருக்கிறது. ஈழத்து அரங்கு வீழ்ந்துகொண்டிருக்கிறது என்று பரப்பப்படும் அபத்தக் கருத்தியல்களுக்கு பதில்கூறத்தக்க காத்திரமான அரங்கச் செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். இதன் பின்னணியில் இந்த அரங்க விழா தனது சமூகக் கடப்பாட்டினை நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறது என்று கூறலாம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு தொடர்ந்துவரும் ஆண்டுகளில் இன்னமும் சிறப்பாக அரங்க விழாக்கள் தொடரும் என்ற எதிர்பார்ப்புடன்.



# துலைக்கே? நானும் வரட்டே?



பஸ்ஸிலை வவுனியாவுக்குப் போட்டுத் திரும்பி வரேக்கை ஒரு பிரச்சினை. சீ.ரி.பி. எண்டபடியாலை ஏறின உடனை ரிக்கற்றை எடுத்துப் போட்டன். பஸ் மாங்குளத்தடியிலை வரேக்கை கொண்டக்டர் எனக்குக் கிட்ட வந்து இன்னும் ஒராளுக்கு ரிக்கற்றைக் குடுத்தவர். அப்ப எனக்குப் பக்கத்திலை இருந்த பெடி மெல்ல அவரைக் கூப்பிட்டுப் பிறர் கேக்காத மாதிரி அவற்றை காதுக்கை கேட்டான் "அண்ணை இந்த பஸ் எத்தினை மணிக்கு யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டடிக்குப் போய்ச் சேரும்" எண்டு. உடனை கொண்டக்டர் பல்லை நெருமினார். கோபச் சீனிலை சிவாஜியின்ரை சொண்டு நடுங்கிற மாதிரி அவற்றை சொண்டு நடுங்கிச்சிது. "எங்கை உந்த அழுகல் பழக்கம் பழகின்னீர்? முறை தலை இல்லாத பழக்க வழக்கம். பாத்தால் படிச்ச ஆள் மாதிரிக் கிடக்கு. ஆனால் கதைக்கப் பேசத் தெரியாது. கேக்கிற கேள்வியைப் பார்?." இதைக் கேட்ட உடனை அந்தப் பெடிக்கு அஞ்சுங் கெட்டு அறிவும் கெட்ட மாதிரித் தலையைக் குனிஞ்சு கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்திலை என்ன நினைச்சானோ தெரியாது கொண்டக்டரைக் கூப்பிட்டு "இப்ப நான் என்ன பிழை விட்டனான் எண்டு கத்திறீர். மனுசர் மாதிரிக் கதைக்கத் தெரியாத ஆளைக் கொண்டு வந்து பஸ்ஸை நடத்த விட்டிருக்கினம்." எண்டு கத்தினான்.

உடனை பக்கத்திலை இருந்து ஒரு ஆள் "உது தம்பி இது ஒரு செண்ரிமென்ரல் இசு" எண்டு தமிழும் இங்கிலீசும் கலந்து அவனுக்குச் சொன்னார். "ஐயா விளங்கேல்லை" எண்டான் அவன்.

தம்பி! பண்டு தொட்டு எங்களுக்குள்ளை ஒரு பழக்க வழக்கம் இருந்தது தெரியாதே! ஆர் எங்கை வெளிக்கிட்டாலும் "துலைக்கே" எண்டு கேப்பினமே யொழிய. "எங்கை போறியள்" எண்டு கேக்காயினம். கேட்டால் இப்ப நீர் வேண்டிக் கட்டின மாதிரித்தான் வேண்ட வேண்டி வரும். அப்ப ஆரேன் பயணம் வெளிக்கிடேக்கை உப்பிடிக் கேட்டால் பெரும்பாலும் அவை வேட்டியை உரிஞ்சு வைச்சிட்டு நிண்டுடுவினம். போகமாட்டினம். அது மாதிரி வாகனத்தைப் பற்றியும் எப்ப வெளிக்கிடும்? எப்ப போய்ச் சேரும்? எண்ட விபரத்தையும் கேக்கப்பிடாதாம். கேட்டால் பிரச்சினை வரும் எண்டது அவையின்ரை நம்பிக்கை.

முந்தின காலத்திலை மாட்டு வண்டி உபயோகத்திலை இருந்த நேரம் இப்பிடிக் கேட்டால் ஒண்டில் மாடு குழப்படி விடுமாம். இல்லை அச்சாணி சறுகும். இல்லை வழி தெரிவிலை ஏதேனும் நடக்கும் எண்டது ஒரு நம்பிக்கை. பிறகு இப்ப பெற்றோல், டீசல் வாகனம் வந்தாப் பிறகு வாகனம் ஒண்டில் காத்துப் போயிடும்.இல்லாட்டி அடிகிடி பட்டுப்போம்.இல்லாட்டிப் போற ஆளுக்கு ஏதாகிலும் ஒண்டு நடக்கும் எண்டது இன்னுமொரு நம்பிக்கை. அப்ப இது நேற்றைக்கு இண்டைக்கு வந்த விசியம் இல்லை. கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய....ஹி...ஹி... எண்டு அவர் சொன்னாப் பிறகுதான் பெடிக்கு விசியம் விளங்கிச்சுது தான் எங்கை பிழை விட்டிருக்கிறன் எண்டு.. அப்ப அவன் சொன்னான் தான் கொழும்புக்குப் போய் வரேக்கை பல தடவை சிங்கள றைவர் மாரிட்டைக் உப்பிடிக் கேட்டவனாம். அவை சரியான நேரத்தைச் சொன்னவை. அந்த நேரத்துக்கு பஸ்ஸும் போய் சேந்ததுதானே? எண்டு அவன் கேட்டவன்.

தம்பி உதொண்டும் எனக்குத் தெரியாது. சம்பந்தர், மாவை, சுமந்திரனிட்டைச் சனம் கேட்டவையாம் "ஏன் ஜெனீவா விசியம் சரி வராமல் போச்சுது" எண்டு. அதுக்கு அவை மூண்டு பேரும் சேந்து சொன்ன பதில் "நாங்கள் ஒவ்வொரு முறை போக வெளிக்கிடேக்கை ஒண்டில் அங்கை நிக்கிற மூதேவியளிலை ஒ்ண்டு கேக்குமாம். "எங்கை போறியள்? எப்ப வருவியள்?" எண்டு. இல்லாட்டி ஆரேன் ரெலிபோன் எடுத்துக் கேப்பினமாம் "எங்கை போறியள்? எப்ப வருவியள்?" எண்டு. அப்ப போற காரியம் உருப்படுமோ?

■

# பிரபாகரனாக மாற உங்களால் முடியாது!

**(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பூசை தொடங்குவதற்கு கொஞ்சம் முன்னதாகவே ராகவனும் குறித்த அந்த ஊடகவியலாளரும் வந்தனர்.

35 வருடங்களுக்குப் பிந்திய சந்திப்பு என்ற வகையில் மனதில் இருந்த சந்தேகங்கள் உடனே எழாதுதானே. பிள்ளைகளின் இழப்புப்பற்றி விசாரித்தார்.ஏனைய பிள்ளைகள் பற்றியும் கேட்டறிந்தார். அதுபோலவே நான் அவரது பிள்ளைகள் பற்றி கேட்டேன். "சொந்தப் பிள்ளைகள் இரண்டு, அதேயளவு வளர்ப்புப் பிள்ளைகளும் உள்ளன" என்றார். தொடர்ந்து ரெலோ மோதல் பற்றி விசாரித்தார். "அதைச் சிறியண்ணா தவிர்த்திருக்கலாம். பசீரைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். என்று அவரது உறுப்பினர்கள் மூலம் தகவல் அனுப்பினேன்.ஒன்றாகச் சாப்பிட்டு ஒரே வீட்டில் நாங்கள் வாழ்ந்ததை அவர் மறந்திருக்க மாட்டார் எனக்கருதினேன். போராட்டத்தில் புதியவர்கள் தவறிழைத்தாலும் அவர் என்னைக் காப்பாற்றுவார் எனக் கருதினேன். அவர் அதைச் செய்யத் தவறிவிட்டார். (இவ்வளவுக்கும் ஆறு நாட்களுக்கு முன்னர் நடந்த எனது திருமணத்துக்கு வருகை தருமாறு அவருடைய ஒன்று விட்ட சகோதரருடன் இவர் இருந்த முகாமுக்கு நான் போய் அழைப்பு விடுத்திருந்தேன்) இரவு எங்கள் இருவரின் கையையும் கண்ணையும் கட்டி வைத்திருந்த இடத்திலிருந்து தப்பினோம். அதற்குப் பிறகு எதையும் தடுக்க முடியாது" என்று சொன்னேன்.

"என்ன இருந்தாலும் இயக்க மோதல்...." என்று ராகவன் இழுத்தார்.

இந்தச் சந்தப்பத்தில் அந்த ஆலயத்தை நடத்துபவர் வந்தார்.அவர் சில விடயங்களை கதைத்தார். அவர் போனதும் அவரைப்பற்றிச் சொல்லவேண்டுமென நினைத்தேன். புலிகளிடம் ஜனநாயகம் இல்லை் எதிர்த்துக் கதைக்க முடியாது போன்ற கருத்துக்களை சொல்பவர்களுடன் இவர் கூட்டாக இருந்தவர் என்ற வகையில் ராகவனுக்கு இதைப்பற்றி விளக்கவேண்டுமென்பதற்காக அந்த ஆலயத்தை நடத்துபவரைப்பற்றி விளக்கமளித்தேன். இயக்கத்தைப் பாடாய்ப் படுத்தியவர் அவர் அவரைப்பற்றி விடுதலைப் புலிகளும் ஜனநாயகமும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன் என்று குறிப்பிட்டேன். அந்த ஊடகவியலாளரும் நான் குறிப்பிடாத சில விடயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார். இந்தத் தகவல் இவருக்கு புதிது. இவற்றை யாரும் இவரிடம் சொல்லியிருக்கமாட்டார்கள்.

இந்தச் சமயத்தில் கோயில் பூசைக்கான மணி ஒலித்தது. நான் புறப்படும் சமயத்தில்" இங்கு வந்ததை எப்போதும் நினைவில் வைத்திருக்க படம் எடுக்க வேண்டும்" என்றனர். நான் விரும்பவில்லை. ஐந்து நாட்களுக்கு முன்னர் தான் என்னுடன் படமெடுக்க முனைந்த இரு முன்னாள் போராளிகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டு முன்னால் நின்று செல்பி எடுத்தார் முன்னாள் போராளியான அரசியல்வாதி ஒருவர்.

ஒன்றரை மணித்தியாலயத்துக்குள் முகப் புத்தகத்தில் அந்தப் படத்தைப் போட்டு "காக்காண்ணை திலீபனின் நினைவிடத்துக்கு வந்தார். அவருக்கு திலீபனின் தியாகம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. புரிந்தால் சரி" என்று அவர் பதிவிட்டிருந்தார். இப்படி இவர்களும் ஏதும் செய்யலாம் என்பதே நான் தயங்கியதற்கு காரணம். "எப்போதுமே இதனை முகப்புத்தகத்தில் பதிய மாட்டோம்" எனத் திரும்பத் திரும்ப (மூன்று முறை) தெரிவித்த பின்னரே படமெடுக்கச் சம்மதித்தேன். அப்போது கூட அற்புதமான மனிதர் நித்தியானந்தனின் நட்புக்கு இவர் என்ன செய்தார் என்பது எனக்கு உறைக்காமல்தான் போயிற்று. அவர்கள் எதிர்பார்த்த காரியம் முடிந்ததும் பயணமாகினர். திலீபன் நினைவிடத்தில் படமெடுத்த அந்த முன்னாள் போராளியான அரசியல்வாதி செய்ததையே இவர்களும் செய்தனர். முகப்புத்தகத்தில் அந்தப் புகைப்படத்தை இவர்களும் பதிவேற்றினர்.

அந்த அரசியல்வாதியாவது திலீபன் நினைவு நாளன்று இரு மாவீரர்களின் பெற்றோராகிய மூன்று குடும்பத்தவரை (வெவ்வேறு) கூட்டி வந்து ஏதேதோ செய்யமுயன்றார். திலீபன் நினைவிடத்தில் எந்த அசிங்கமும் நடந்துவிடக்கூடாது மாவீரரின் பெற்றோரின் மனம் புண்பட்டுவிடக்கூடாது என்பதற்காக சில முடிவுகளை உடனே எடுக்க நேர்ந்தது. எமக்குத் திலீபனே பெரிதாகத் தெரிந்தான். நினைவேந்தலின் ஆரம்ப நாளன்று முறுக்கிக்கொண்ட இரு தரப்பினரிடமும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவெடுக்கப்படும். தயவு செய்து ஒத்துழையுங்கள் என வேண்டிக்கொண்டிருந்தேன். இருதரப்பும் பூரணமாக ஒத்துழைத்திருந்தன. "எப்படியோ உனது நினைவிடத்தின் புனிதம் கெடக்கூடாத வகையில் செயற்படக்கூடிய மன வலிமையைத் தா" என திலீபனிடம் மனமுருகி வேண்டியிருந்தேன். ஆனால் கனகபுரத்தில்படமெடுத்தவர்களிடமிருந்துகாப்பாற்றுமாறு சிவனிடம் வேண்டத் தவறிவிட்டேன். பூசை முடிந்து விரதச் சாப்பாடு சாப்பிடும்போது "இயக்க மோதல்...." என்று ராகவன் குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது. அதை அவருக்குச் சுட்டிக்காட்டத் தவறிவிட்டேன் என எண்ணினேன்.தமிழரின் விடுதலைப் போராட்டவரலாற்றில் இயக்க மோதலின் முதலாவது வேட்டுராகவனாலேயே தீர்க்கப்பட்டது. நினைவுக்கு வந்தது.

மயிலாப்பூரிலிருந்து தலைவர், ராகவன்,நேசன் ஆகியோருடன் நானும் ராமுவும் தான் அன்று புறப்பட்டோம். தலைவர் "கொமாண்டோ படம் பார்த்தீர்களா?" எனக் கேட்டார். நானும் ராமுவும் இல்லை என்றோம். "நேற்றுத்தான் நான் பார்த்தேன் தவறாமல் நீங்கள் பார்க்க வேண்டும். இன்று தான் கடைசி நாள் "எனக் கூறி ராமுவையும் என்னையும் அனுப்பிவிட்டு, நேசனுடனும் ராகவனுடனும் போனார். பாண்டிபஜாரில் முகுந்தனை (உமாமகேஸ்வரன்) கண்டார். "முகுந்தன் போலகிடக்கு" என்று தலைவர், ராகவனுக்குச் சொல்லி முடிக்க முன்னரே முகுந்தன் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தார் ராகவன்.சுடு என்று தலைவர் சொல்ல முன்னரே இவர் சுட்டு விட்டார்.தொடர்ந்து ஒரு பக்கம் முகுந்தனும், கண்ணனும். மறுபக்கம் தலைவ்ரும் இவரும் நின்று துப்பாக்கி சமரை நடத்தினர். இறுதியில் தலைவரும் இவரும் கண்ணனும் பிடிபட்டனர். மறுநாள் முகுந்தன் பிடிபட்டார் . எல்லாவற்றையும் இன்று மறந்தாயிற்று. எதோ ஒரு வகையில் "இயக்க மோதலுக்கு நான் காரணம் என்கிறாரோ?". எது எப்படியிருந்தாலும் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களும், இலட்சக்கணக்கரன மக்களும் பிரபாகரனையே நம்பினர். இதற்கு முன் வேறெந்தத் தலைவரும்இவ்வாறுதமிழர்மனதில்இடம்பெறவில்லை. தந்தை செல்வாவைப் போற்றினாலும் உயிரைக்கொடுத்துப் போராடக்கூடியவராகப் பிரபாகரனே தெரிந்தார் என்ற விடயம் இவருக்குப் புரியவில்லை.

இந்தச் சந்திப்பின் ஆரம்பத்தில் "நினைவேந்தல் நிகழ்வுகள் மற்றும் தலைவர் வளத்த செஞ்சோலைப் பிள்ளைகளின் (கே.பி.இடம் உள்ளவர்கள் அல்ல) நலன் தொடர்பான விடயங்களில் மட்டுமே எனது கவனம் உள்ளது. எந்தக்காலத்திலும் அரசியல் விடயங்களில் தலையிடமாட்டேன்" என ராகவனுக்குத் தெளிவாகச் சொல்லியிருந்தேன். ஆனால் என்னை வரதராசப்பெருமாளின்வரிசையில் வைத்து விட்டார் அவர். வரதராசப்பெருமாளின் தாயார் கூட தனது மகனின் பக்கம் நில்லாமல் பிரபாகரனின் பக்கமே நின்றவர். கிருஷ்ணானந்தன் (பிரபல பொருளியல் ஆசிரியர்), வணசிங்கா (இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர்) கனகரத்தினம் ஆசிரியர், கணபதிப்பிள்ளை ஆசிரியர் முதலான கல்வியலாளர்கள் கொன்ற குழுவில் அங்கம் வகித்த வரதராஜப்பெருமாள் போன்று நானும் கணிக்கப்பட்டுள்ளேன் ராகவனால். நான் நடந்தவற்றைத் தெரிவித்துள்ளேன் விடுதலையை உண்மையாக. நேசித்த மக்கள் பலர் ராகவனைச் சந்தித்தமை பற்றி என்னிடம் தங்களது கவலையை, கோபத்தை தெரிவித்தனர். எனது பிள்ளைகள், நான் நேசித்த தலைவன், கூடப் பழகிய போராளிகள், தலைவரை நம்பி முள்ளிவாய்க்கால் வரை பயணித்து இன்று ஆன்மாக்களாக உள்ளோர் அனைவரிடமும் எனது நிலையை மானசீகமாக தெரிவிக்கின்றேன். இது ஒரு விபத்து. இப்போது நான் 63 வயதைக் கடந்துவிட்டேன். இவ்வளவு வயதில் சமூகம், போராட்டம், சிறை போன்றவற்றிலிருந்து அநேக விடயங்களைக் கற்று விட்டேன் என எண்ணியிருந்தேன். "நீ படிக்கப் படிக்கப் படிப்பிப்போம்" என சிலர் புறப்பட்டுள்ளனர்.(திலீபன் நினைவிடத்தில் படமெடுத்தவர் மற்றும் ராகவன்) எதுவாக இருந்தாலும் தலைவரையும் போராட்டத்தையும் நேசித்த பல்லாயிரக்கணக்கான இதயங்கள் இந்தச் சந்திப்பால் நொந்துபோயுள்ளன என்பதை உணர்கிறேன்.இவர்கள் அனைவரிடமும் நான் மானசீகமாக மன்னிப்பு கோருகிறேன். அரசியல் கலப்பின்றி நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவோம் என்ற ஒற்றைவரிச் செய்திக்கு மதிப்பளித்த இந்த உறவுகள்தான் எமக்குத் தேவை. ராகவனும் ஒன்றைப் புரியவேண்டும். பிரபாகரன் நினைத்திருந்தால் ராகவனாகலாம் (எந்தக் காலத்திலும் எந்த விடயத்திலும் அவ்வாறு அவர் நடக்கமாட்டார் என்பது வேறு விடயம்) ராகவன் நினைத்தாலும் முயற்சித்தாலும் எக்காலத்திலும் பிரபாகரன் ஆக முடியாது.

■

# சிறப்பு முகாம்
## சித்திரவதை

18



தோழர் பாலன்

உடைமைகள் சூறையாடப் பட்டன. இவை யாவும் சிங்கள இராணுவத்தால் செய்யப்பட்டது. இதனைத் தடுத்து நிறுத்த என்னைத் தற்காத்துக் கொள்ள வேறு வழியின்றி நானும் ஆயுதமேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

காட்டு மிருகங்களால் ஆபத்து வரும் என்று தெரிந்தால் அவற்றை நாம் கொன்று தீர்க்கிறோம். இது சரிதான். இதை தவறு என்று யாரும் கூறுவதில்லை. அதே போல் ஒரு மனிதன் சக மனிதர்கள் மீது காட்டுமிருகத்தைப் போல் பாய்ந்து கடித்துத் தின்ன முயன்றால் அவனை நாம் மிருகத்தைக் கொல்வது போல் கொன்று தீர்க்கத்தான் வேண்டும். நாம் நுளம்பை எதற்காக அடித்துக் கொல்கிறோம்? நம்முடைய உடம்பில் இருந்து அது ஒரு துளி இரத்தத்தைக் குடித்து விட்டது என்பதற்காகத்தானே! எனவே எமது உயிரைக் குடிக்கும் மிருகத்தை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்? அழித்தொழிக்க வேண்டியது தானே!. இவ்வாறு எம்மை அழிக்க வந்த சிங்கள இன வெறி இராணுவத்தை தடுத்த போது சிங்கள இன வெறி அரசால் எமக்கு வழங்கப்பட்ட பெயர் வன்முறையாளர்கள், பயங்கரவாதிகள்.

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காகப் போராடுபவர்கள். ஆனால் யுத்தத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். இனவெறி அரசின் துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமாயின் நாமும் துப்பாக்கி ஏந்துவது அவசியம். நாம் மனித உயிரின் மாண்பினை உணர்ந்தவர்கள். ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை தமிழ் இனமும் அடைய வேண்டுமென்று கனவு காண்கிறோம். அக் கனவை நிறைவேற்ற ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதவாறு இருக்கின்றது.

"கோழையாக அஞ்சி வாழ்வதை விட கொடுமைக்கு எதிராக வாளேந்தி மடிவதே மேல்! ஆழ் கிணற்றுக்குள் அடங்கி வாழும் தவளையை விட தீப்பிழம்போடு போராடி மடியும் விட்டில் பூச்சியே சிறந்தது!!"

என்றார் லெபனான் நாட்டுக் கவிஞர் கலீஸ் ஜிப்ரான்.

இதுவே என் போன்ற இளைஞர்களுக்கு ஏற்பட்ட நிலையாகும். இந்நிலையில் எமது வீரர்கள் இரத்தம் சிந்தும் போது எமது இதயம் வருந்துகிறது. எனினும் நாங்கள் உறுதி தளர மாட்டோம். ஏனெனில் 'இரத்தம் சிந்தாமல் நாம் சுதந்திரம் பெற முடியாது' என்று தமிழ் இனத்தின் மாபெரும் தலைவர் பிரபாகரன் அறை கூவல் விடுத்தார். அவர் கரத்தை வலுப்படுத்துவது ஒவ்வொரு ஈழத் தமிழனினும் கடமையாக இருந்தது.

இலங்கை இனவெறி அரசு குறிப்பிட்டது போல் இன்று இந்திய அரசும் எம்மை வன்முறையாளர், பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறது. இவ் வழக்கிலும் என்னை மிகப் பெரிய பயங்கரவாதி என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதே போன்று அதிக பந்தோபஸ்து போட்டு கொடிய வன்முறையாளனை அழைத்துச் செல்வது போல் மக்கள் மனதில் சித்தரிக்க முயல்கின்றனர்.

தமிழ்நாட்டு மக்கள் மனதில் எமக்கு இருக்கும் ஆதரவை அழிப்பதற்காக இவர்கள் ஆடும் இந்நாடகம் ஒரு போதும் வெற்றி பெறப் போவதில்லை. அன்று எனக்கு பயிற்சி கொடுத்தது இந்திய அரசு. எனக்கு வெடிகுண்டுகள், துப்பாக்கி, ஆயுதங்கள் கொடுத்தது இந்திய அரசு, எனக்குப் பணம் கொடுத்தது இந்திய அரசு, இத்தனையும் செய்து கொடுத்து விட்டு இன்று என் மீது குற்றம் சுமத்துகிறது இந்திய அரசு. வேடிக்கையாக இருக்கிறது. அமைதிப்படை எனும் பெயரில் ஆக்கிரமிக்க முனைந்த போது அதற்கு இடங்கொடாமல் எதிர்த்ததாலும், இங்குள்ள சில தலைவர்களின் சுயநல அரசியலுக்கு ஒத்துழைக்க மறுத்ததாலும், ஈழப்போராளிகளை கொச்சைப் படுத்த வேண்டும் என்ற போக்கில் இவ்வாறு செய்யப்படுகிறது.

மேற்கண்ட விடயங்களுக்கு தக்க ஆதாரத்தை என்னால் விபரமாகக் கொடுக்க முடியும் ஆனால் அவை இவ்வழக்குக்கு சம்பந்தமில்லாதது என்று இம் மன்றத்தால் ஆட்சேபிக்கக் கூடும் என்பதால் அவற்றை இங்கு குறிப்பிடுவதைத் தவிர்க்கிறேன்.

அன்று எமது போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்ட இந்திய அரசு இன்று நாம் ஒரு போதும் ஈழப்பிரிவினையை ஆதரிக்கவில்லை எனக் கூறுகிறது.

அப்படியாயின் ஈழம் என்னும் தனி நாட்டுத் தீர்மானத்தை மாகாணசபையில் நிறைவேற்றிய வரதராஜப் பெருமாளை பலகோடி செலவழித்து பாதுகாப்பதேன்?

(சித்திரவதை தொடரும்)

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

இது மாற்றங்களை அளிக்கின்ற வாரம். பெண்களுக்கு இலாபம் உண்டு. இளைய பருவத்தினருக்கு வரன் பார்த்தல், நிச்சயம் போன்ற சுப விஷயங்கள் நடக்கும். உங்களின் நீண்டநாள் எதிர்பார்ப்புகள் இப்போது நிறைவேறும். பண வரவுக்குத் தடை ஏதும் இல்லை. பொருளாதார நிலைமை நன்றாகவே இருக்கும். தொழில், வேலை, வியாபாரம் போன்ற ஜீவன அமைப்புகளில் திருப்திகரமான நல்ல பலன்கள் உண்டு. இளைய பருவத்தினர் காதல் கொள்வீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

## கடகம்

இனி நீங்கள் தொட்டது துலங்கும். இதுவரை இருந்து வந்த பின்னடைவுகளை முன்னேற்றமாக மாற்றிக் கொள்ளும் வாரம் இது. மேன்மை அடைவீர்கள். ஆறாமிடத்தில் இருக்கும் சனி உங்கள் எதிரிகளின் தலையைத் தட்டி வைப்பார் என்பதால் எதிர்ப்புகள் இன்றி நீங்கள் நடைபோடும் வாரம் இது. எப்படிப்பட்ட எதிர்ப்புகளையும் ஜெயிப்பீர்கள்.இளைய பருவத்தினருக்கு இனிமேல் முக்கியமான திருப்பு முனைகள் இருக்கும். பெண்களுக்கு இது உற்சாகமான வாரம்.

## துலாம்

முன்னேற்றங்களைத் தரும் வாரம். எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். எதிரிகளை வெல்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்களும், வேலை, தொழில், வியாபாரம் போன்ற ஜீவன அமைப்புக்களில் முன்னேற்றம் இருக்கும். சிலர் உல்லாசப் பயணங்களுக்கு வீண்செலவு செய்வீர்கள்.

அனைத்து தடைகளும் நீங்கி மடை திறந்த வெள்ளம் போல் நன்மைகள் வருகின்ற வாரம். இது மற்ற கிரகங்களும் யோக நிலையில் இருப்பதால் தொட்டது துலங்கும். அரசு ஊழியருக்கு இது நல்ல வாரம்.

## மகரம்

புதிய முயற்சிகள் எதையும் இந்த நாட்களில் செய்ய வேண்டாம். யோகாதிபதிகள் சுக்கிரனும், புதனும் நல்ல நிலையில் இருப்பதால் நன்மைகள் நடக்கத் தடையில்லை. சிலருக்கு மட்டும் அலுவலகம், தொழிலில் எரிச்சலூட்டும் விஷயங்கள் நடக்கும். கும்பத்தினர் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம் இது. இளைய பருவத்தினர் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். தேவையற்ற வீண் சண்டைகள் வரும். எந்த ஒரு விஷயத்திலும் நிதானத்துடன் செயற்படுவது நன்மையைத் தரும்.

## இடபம்

எது நல்லது, எது கெட்டது. யார் நல்லவர். யார் கெட்டவர் என்று குழம்பித் தவிக்கின்ற வாரமாக இது இருக்கும். எதிலும் முடிவெடுக்க முடியாமல் ஆற்றில் ஒருகால், சேற்றில் ஒரு கால் என தெளிவில்லாமல் இருப்பீர்கள். முடிவுகளை ஒத்திப்போட வேண்டிய வாரம் இது. பிரயாணங்களும் அலைச்சல்களும் இப்போது உண்டு. சிலருக்கு கடல் தாண்டிப்போகும் வெளிநாட்டுப் பயணங்களும் இருக்கலாம். தொழில் இடங்களில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியம்.

## சிம்மம்

இதுவரை முயற்சி செய்தும் கிடைக்காமல் இருந்தவைகள் இந்த வாரம் அதிஷ்டத்தின் துணையுடன் கிடைக்கும். சிம்மத்தினர் சந்தோஷமாக இருக்கும் வாரம் இது. சூரியன் வலுவாக இருப்பதால் நிலுவையில் இருந்து வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். எதிர்பாராத இடத்தில் இருந்து பணம் கிடைக்கும். வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும். அரசியல்வாதிகளுக்கு அதிகாரத்தை காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் அமையும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்கு இருந்து வரும் பின்னடைவுகள் அனைத்தும் தீர ஆரம்பிக்கும். இனிமேல் வேதனைகள் இல்லை. தொழிலில் முட்டுக்கட்டைகள் விலகும். வேலையில் நிம்மதி கிடைக்கும். வியாபாரிகளுக்கு நன்மைகள் உண்டு. கணவன், மனைவிக்குள் இருந்து வந்த கருத்து வேறுபாடு விலகும். அந்தஸ்து கௌரவத்துக்கு குறைவு வராது. பண வரவு திருப்தியாக இருக்கும். பெண்களுக்கு அலுவலகங்களில் தொந்தரவுகள் குறையும்.

## கும்பம்

அனுகூலபலன் ஏற்படும். பேச்சில் உண்மையும் சத்தியமும் நிறைந்திருக்கும். விலகிய உறவினர்கள் சொந்தம் பாராட்டுவர். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதில் இதமான அனுகுமுறை வேண்டும். உடல் ஆரோக்கியம் சீராகும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். வெளியூர் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும். மாணவர்கள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## மிதுனம்

நம்பிக்கையையும், நல்லவைகளையும் மட்டுமே கொடுக்கும் வாரம் இது. முன்னேற்றத்தை அடைவீர்கள். மனைவி, சகோதரி, தாய், மகள் போன்ற பெண் உறவுகள் மூலம் சந்தோஷம் உண்டாகும். மனதில் எண்ணி இருந்த விஷயத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். தொழில் செய்பவர்களுக்கு இந்த வாரம் மிகவும் நன்மைகளைக் கொடுக்கும். சிலருக்கு தொழில் மற்றும் வாழ்க்கை அமைப்புகளில் மாற்றங்கள் இருக்கும்.

## கன்னி

இப்போது நீங்கள் ஆரம்பிக்கும் எந்த ஒரு நிகழ்வும், நற்பலன் தருவதாக அமையும் என்பதால், தள்ளி வைத்திருந்த விஷயங்களை இந்த வாரம் செய்து முடித்து வெற்றியடைலாம். உங்களில் சிலருக்கு பங்குச் சந்தை மூலம் வெற்றியும், வருமானமும் கிடைக்கும். இலாபத்தில் இருக்கும் ராகுவால் எதிரிகளையும், எதிர்ப்புகளையும் இப்போது நீங்கள் ஜெயிக்க முடியும்.கடன் தொல்லைகள் கட்டுக்குள் இருக்கும்.

## தனுசு

தனுசு ராசியினர் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் இருக்கிறீர்கள். எதிலும் விரக்தியும், சோம்பலும் வரும் நேரம் இது. இன்னும் ஒரு வருடத்துக்கு இது நீடிக்கும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் இருக்கும் என்பதால் பணம் கொடுக்கல், வாங்கல் மற்றும் வங்கியிலிருந்து பணம் எடுத்து வரும்போது எச்சரிக்கை தேவை. பிள்ளைகள் ஏதாவது வம்பிழுத்துக் கொண்டு வரலாம் என்பதால் குழந்தைகளின் மேல் அக்கறை வையுங்கள்.

## மீனம்

எந்த ஒரு விஷயத்திலும் இனி அதிஷ்டம் கை கொடுக்கும். வாரம் முழுவதுமே நல்ல பலன்கள் நடக்கும். பணவரவு திருப்தியாக இருக்கும். நீண்ட நாள் கனவு நனவாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் உறுதியாகும். தொழிலாளிகளுக்கு சம்பள உயர்வு இதர படிகள் போன்றவை எதிர்பார்த்தபடி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். வெளிநாட்டில் இருக்கும் மகன், மகளிடமிருந்து நல்ல செய்தி வரும்.

## மனிதியே வெளியே வா

# ஆதிக்கத்தை எதிர்த்த அக்கினி பெண்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மக்களுக்காக இவ்வளவு போராடிக் கடைசியில் தோற்றுப் போவதைக் கொடிவாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை . சாதாரண நிபந்தனையா? ஒரு பெண், அதுவும் பட்டப் பகலில் நிர்வாணமாக, நினைக்கும்போதே நெஞ்சே நடுங்கியது. கற்பனை செய்து பார்க்கவே மேனியெல்லாம் கூசியது. ஒரு முடிவுக்கு வந்தவளாய் "நீங்கள் சொன்னதை நான் செய்கின்றேன். வார்த்தை மாறாமல் வரியைக் குறைத்து மக்களை நிம்மதியாக வாழவிடுங்கள்" என்றாள் கொடிவா. நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு "பார்க்கலாம்" என்றான் லியோ ப்ரிக்.

பதினோராம் நூற்றாண்டின் நடுப்பகுதி. மன்னராட்சி நடக்கும் இங்கிலாந்தின் "கவண்ட்ரி" என்ற பகுதியை லியோ ப்ரிக் பிரபு நிர்வகித்து வந்தான். இப்பகுதி மக்களின் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு அவர்கள் மீது அநியாய வரிகள் திணிக்கப்பட்டன. மக்கள் சுதந்திரமின்றியும், வரிகளின் பாரத்தினாலும் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மன்னனை எதிர்த்தவர்களுக்கு சிறைவாசம், அடி, உதை, தூக்கு... இதைத் தட்டிக் கேட்க யாரும் முன்வராத நிலையில் லேடி கொடிவா மட்டுமே அவர்களைப் பற்றி சிந்திக்கலானாள். மக்களிடம் அவள் தன் கணவனின் நிபந்தனைகளைச் சொன்னபோது, அவர்கள் அதிர்ச்சியடைந்ததோடு அவளது தியாக மனப்பான்மையையும் பாராட்டினார்கள். லியோ ப்ரிக்கைத் திட்டித் தீர்த்தார்கள். அந்தச் சம்பவம் நடந்த அந்தத் தினத்தன்று மக்கள் அனைவரும் வெளியே வராது கதவு, யன்னல் அனைத்தையும் மூடி விட்டு வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தார்கள்.

கொடிவா தன் ஆடைகள், ஆபரணங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் கழற்றிவிட்டு முழுநிர்வாணமாக குதிரையின் மீது ஏறி அமர்ந்து கொண்டாள். முழங்கால் வரை வளர்ந்திருந்த தன் கூந்தலால் உடலை முடிந்தளவு மறைத்துக்கொண்டு குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுக்கவே, குதிரை மெதுவாக நடக்கத் தொடங்கியது.


அவமானமும், வெட்கமும், கூச்சமும் பிடுங்கித் தின்றாலும், "மக்களுக்கான தியாகம் இது " என்று குதிரையின் முதுகில் குறுக்கிக் கிடந்தாள் கொடிவா. கடைத் தெருவின் மறுமுனைக்குச் சென்ற குதிரை நின்றதும் கண்ணீரோடு இறங்கித் தன் ஆடைகளை அணிந்து கொண்டாள் . ஆனாலும் அந்தக் காட்சியைப் பீப்பிங் டொம் என்ற தையல்காரன் இரகசியமாகப் பார்த்து விட்ட செய்தி மக்களுக்குத் தெரிய வரவே , அவனைப் பிடித்த மக்கள் அவனின் கண்களைக் குருடாக்கினார்கள். மக்கள் நலனுக்காக நிர்வாணமாகக் குதிரையில் சவாரி செய்த ஒரே ஒரு பெண் கொடிவா மட்டுமே.

1586 இல் அடம் வேன் நூர்ட் எண்பவரால் வரையப்பட்ட நிர்வாணக் குதிரை ஓவியம் கவண்ட்ரி நகரின் ஹேபர்ட் ஆர்ட் கலரி மியூசியத்தில் இன்றும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் டெஸ்லாஸ் ஆர்ட் மியூசியத்தில் அவளுடைய மெழுகுச் சிலை தியாகத்தின் மொத்த உருவமாக இன்றும் உள்ளது. 1066ஆம் ஆண்டுக்கும் 1086 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவள் இறந்து போனாலும், உலகில் எவருமே நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிபந்தனையை தியாக உணர்வோடு செய்து காட்டிய கொடிவா, இங்கிலாந்து மக்களிடையே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். நியூயோக் பேஸ்ட் ரொக் இசைக் குழுவினரின் இரண்டு இசைத் தொகுப்பில் அவளைப் பற்றிய ஏராளமான பாடல்கள் இசைக்கப்பட்டன.

**கவிஞர் பிரேம்ராஜ் கொழும்பு**







# உங்கள் கைப்பை ஆரோக்கியமானதா?

அழகிய கைப்பை உங்கள் அடையாளங்களில் ஒன்று. அன்றாடத் தேவை என்றாலும், அவசரத் தேவையென்றாலும், நமது கைகள் முதலில் தேடுவது கைப்பையைத்தான். ஏனெனில் பணமாக இருக்கலாம் அல்லது அடையாள அட்டையாக, உணவுப் பொருளாக, மேக்கப் உபகரணங்களாக, இப்படி தேவையான எதுவாக இருந்தாலும், எல்லாம் கைப்பைக்குள் தான் அடைக்கலமாகி இருக்கும். நம்முடன் பிரிக்க முடியாத அங்கமாக மாறிவிட்ட கைப்பைகளில் நமது தேவைகள் மட்டுமல்லாது, ஆரோக்கியமும் ஒளிந்திருக்கிறது. நாம் கைப்பைகளை கவனமாக பாதுகாப்பதுடன், சுத்தமாகவும் பராமரிக்க வேண்டும். கைப்பைகளின் ஆரோக்கியத்துக்கும், சுத்தத்துக்கும் சில வழிகள்...

### எங்கே வைக்கிறோம்?

வேலைக்குச் சென்று சோர்வாக வீடு திரும்பியதும் நீங்கள் செய்யும் முதல் வேலை, அருகில் உள்ள மேசையில் அல்லது தரையில் உங்கள் கைப்பையை வைப்பீர்கள். ஆரோக்கியம் விரும்புபவர்கள் இனி அப்படிச் செய்ய வேண்டாம். உலகில் அதிகமான கிருமிகள் தங்குமிடமாக இருப்பது இந்த மேசை மற்றும் தரைப் பரப்பு தான்.

### சுத்தம் செய்கிறீர்களா?

நாம் துவைத்துப் பயன்படுத்தாத பொருட்களில் கைப்பையும் ஒன்றாக இருக்கலாம். பலவித கைப்பைகள் துவைத்துப் பயன்படுத்த முடியாத பொருட்களால் தயாரிக்கப்பட்டிருக்கலாம். முடிந்தவரை துவைத்துப் பயன்படுத்தும் வகையிலான பைகளை பயன்படுத்துவது ஆரோக்கியத்துக்கு நல்லது. எந்த வகைக் கைப்பையாக இருந்தாலும் பருத்தித் துணி கொண்டு துடைத்துப் பயன்படுத்தலாம்.

### எல்லா கைப்பைகளும் ஒன்றல்ல

ஒவ்வொரு கைப்பையின் தரமும், தன்மையும் மாறுபடும். தோல் பை, துணிப்பை, ரெக்சின் பை, சணல் பை என ஒவ்வொரு வகை பையும் வேறுபட்ட தன்மையும், தரமும் கொண்டிருக்கும். அவற்றின் தன்மைக்கேற்ப பராமரித்துப் பயன்படுத்த வேண்டும். ஆயுள் நீடிக்கும்.

### பாதுகாப்பு உறை

கைப்பையில் வைக்கும் அனைத்துப் பொருளுக்கும் பாதுகாப்பு உறை அவசியம். உதாரணமாக, ரசாயனங்கள், திரவங்கள் போன்ற பொருட்களை கைப்பையில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதை ஒரு பிளாஸ்டிக் உறை அல்லது காகித உறையில் சுற்றி உள்ளே பாதுகாப்பாக வைக்கலாம். மேக்கப் உபகரணங்களைக் கூட இப்படி ஒரு பாதுகாப்பு உறையுடன் கைப்பையில் வைத்தால் அது பையின் ஆயுளை அதிகமாக்கும்.



## ரௌத்திரம் பழகு

# வன்முறைக்கு எதிரான குரல்

காலம் காலமாக பெண்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளைப் புதைத்து வைத்திருக்கின்றோம். எதிர்த்துக் குரல் கொடுப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். வீட்டில் இருந்துதான் பலருக்கும் பாலியல் தொல்லை தொடங்கும். எனக்கும் அது என் அத்தையின் கணவன் மூலமே நடந்தது. கொழும்பில் இருக்கும் என்னுடைய அத்தை வீட்டுக்கு ஒரு திருமணத்துக்காகச் சென்றிருந்தேன். நான், அத்தை, மாமா அனைவரும் ஒரே அறையில் உறங்கினோம். அப்போது எனக்கு 15 வயது, அவருக்கு 30 வயதிருக்கும். அவர் கட்டிலிலும் நானும் என் அத்தையும் கீழே பாய் விரித்தும் படுத்திருந்தோம். விடியற்காலையிலேயே அத்தை சமையல் வேலைகளுக்காக எழுந்து சென்றுவிட்டார். உறங்கிக்கொண்டிருந்தபோது என் மீது திடீரென ஏதோ ஒரு பெரிய எடையை உணர்ந்தேன். கண் திறந்து பார்த்தால், அவன். அவனை மிகுந்த சிரமத்துடன் என்னிலிருந்து அகற்ற முயன்றேன். ஆனாலும், அவன் அதைத் தாண்டிய உடல் பலத்தோடு என்னை அழுத்தினான். அவனைப் பிடித்து தள்ளியபடியே இருக்கவே, அவன் எழுந்து அறையிலிருந்து வெளியே சென்றுவிட்டான். பிறகு காலை எதுவும் நடக்காததுபோல இருந்தான். ஆனால், அந்தச் சம்பவத்தில் இருந்து என்னால் இன்னும் வெளிவர முடியவில்லை. பெண் குழந்தைகளை எக்காரணம் கொண்டும் மற்றவர்களுடன் தங்க அனுமதிக்காதீர்கள் பெற்றோர்களே!

**எஸ். பவிக்கா, வவுனியா**

## பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல்சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

**'ரௌத்திரம் பழகு'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

## வாரம் ஓர் ஆசனம்


# உடல் வலுவுக்கு வீரபத்ராசனம்

வீரபத்ராசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் இடுப்பைச் சுற்றியுள்ள கொழுப்புக் குறையும். மேலும் கால்கள், தோள் பட்டைகள் வலுப்பெறும்.

**செய்முறை:**


விரிப்பில் நேராக நில்லுங்கள். மூச்சை உள்ளிழுத்தபடி கால்களை விரிக்க வேண்டும். மூன்றரை முதல் நான்கு அடி தூரம் வரை விரிக்கலாம். இடது கால் பாதத்தை 45 முதல் 60 பாகை வரை வலது புறம் திருப்புங்கள். வலது கால் பாதத்தை 90 பாகை வரை வலது புறம் திருப்புங்கள். வலது குதிக்காலும் இடது குதிக்காலும் ஒரே நேர்க்கோட்டில் இருக்க வேண்டும்.

இப்போது உடலை வலது புறம் திருப்ப வேண்டும். கைகளை மேலே கொண்டு சென்று இரு உள்ளங்கைகளையும் சேர்த்துக்கொள்ளுங்கள். வலது காலை மடக்குங்கள். வலது தொடை தரைக்கு இணையாக இருக்க வேண்டும். இடது கால் எந்த நெளிவும் இல்லாமல் நேராக இருக்க வேண்டும். உடல் சற்றே பின்னால் வளைய வேண்டும். தலை சற்றுப் பின்புறம் சாய வேண்டும். இந்த நிலையில் 10 முதல் 30 விநாடிகள் வரை இருக்கலாம்.



எதிரொலி
Ethiroli
17 - 23 ஒக்ரோபர் - 2018

# திட்டமிடல் வேணும் ராசா!



● நவீன சவாரித்தம்பர்

அண்டைக்கொருக்கா முல்லைத்தீவுக்கு பஸ்ஸில ஒரு அலுவலாப் போயிட்டுத் திரும்பிப் புதுக்குடியிருப்பாலை வந்து கொண்டிருந்தனான். வரேக்கை உதிலை இஞ்சாலை பக்கத்திலை கைவேலி எண்டதொரு இடத்தில, றைவர் சனங்களை ஏத்துறதுக்கு பஸ்ஸை ஓரமாக நிற்பாட்டினான். கோணர் சீற்றிலை இருந்த நான், யன்னலுக்கு வெளியாலை எட்டிப்பார்த்தன். பார்த்தவுடனை எனக்கு சும்மா பத்திக்கொண்டு வந்தது பாருங்கோ. என்ன பிரச்சினையெண்டால், சிமெந்தாலை கட்டப்பட்ட தண்ணி வழிஞ்சோடுகிற வாய்க்காலுக்குள்ளை குப்பை கூழங்கள் நிறைஞ்சு, மேற்கொண்டு தண்ணி ஓடிப்பாய இடமில்லாமல் கிடந்தது.

மழை வாறதுக்கு முன்னம் உதுகளளோடை சம்பந்தப்பட்ட துறை சார்ந்த உத்தியோக அதிகாரியள் என்ன செய்திருக்க வேணுமெண்டால், இப்ப ஐப்பசியில மழைபெய்யத் தொடங்கிறதுக்கு முன்னம், புரட்டாசி மாசமளவில தங்கட வாகனங்களில வந்து, இந்த றோட்டுகள், வாய்க்காலுகள் எப்படிக் கிடக்குதுகள்? என்னமாதிரிக் கிடக்குதுகள்? எண்டெல்லாம் ஆய்வு செய்ய வெளிக்கிட்டிருக்க வேணும்.

ஆனால், சில இடங்களிலை நடந்த மாதிரித் தெரியேல்லைப் பாருங்கோ.

அப்பிடி நடந்திருந்தால், கைவேலி தண்ணி வாய்க்காலுக்குள்ளை கஞ்சலுகள், குப்பை கூழங்கள் அடைஞ்சு நிறைஞ்சுபோய்க் கிடக்கவேண்டிய அவசியம் வந்திருக்காது.

இப்பிடி அடைஞ்சு குவிஞ்சுபோய்க் கிடக்கேக்கை மழை வெள்ளம் ஓடமுடியாமல், முட்டி மேவி காபற் றோட்டையும் அரிச்சுக் கொண்டு ஓடினாப்பிறகுதான், நித்திரையால கும்பகர்ணன் எழும்பினதெண்டு சொல்லுற மாதிரி எழும்பி வந்து பார்ப்பினம்.

எதுக்குமொரு திட்டமிடல் இருக்க வேணும் பாருங்கோ! நாளைக்காலையில ஒருதூரப்பயணம் போகிறதா இருந்தால், இண்டைக்கு இரவே படுக்கப் போகக்கு முன்னம் பயணத்துக்கான எல்லாத்தேவையளையும் ஒழுங்குபடுத்திப்போட்டு, நித்திரை கொள்ளப்போக வேணும். அப்பதான் நித்திரையும் சுகமாக இருக்கும், பயணமும் சுகமாக அமையும்.

கனக்கவேண்டாம் எங்கட வேளாண்மை செய்யிற கமக்காரர்மாரைப் பாருங்கோவன்!

இப்ப மழைக்காலம் தொடங்கியிட்டுது. இந்த மழைக்காலத்துக்கு முன்னம் ஒரு தூத்தல்மழை பெய்யும்.

உடன கமக்காரர் என்ன செய்வினமெண்டால், உடன தறையளை உழுது,வரம்புகளுக்கு மண் அணைச்சு, இப்ப பெய்யிற பெரிய மழைக்கு ஆயத்தமாக இருப்பினம். மழை பெய்யத் தொடங்க அவையள் விதைக்கத் தொடங்கியிடுவினம். இப்பிடி திட்டமில் வகுத்துத்தான் கமக்காரர் வேலை செய்யிறதாலை அறுவடைக் காலத்தில ஒழுங்காக மூடையளாக தங்கட பிரயாசத்தை வீட்டுக்குக் கொண்டுபோக முடியுது.

படிப்பு வாசனை குறைந்த கமக்காரர்களாலை ஒருதொழிலுக்குதிட்டமிடல்செய்து பலனைக்காண முடியுதெண்டால், 'மெத்தப்படிச்ச' (?) உந்த அரசாங்கவேலை பார்க்கிற ஆக்களாலை ஏன் திட்டமிடலைச் செய்து சனங்களுக்கு நன்மையளைச் செய்யேலாமல் கிடக்குது.

பஸ் வெளிக்கிட்டு, நான் இறங்க வேண்டிய இடம்வரைக்கும் எனக்கு இதே யோசனையாத்தான் இருந்தது பாருங்கோ. ■

# தனியன்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

'என்ன செல்லரில் மின்சாரம் இருந்ததே. பக்கத்து காணிகளிலும் மின் விளக்கு எரிகிறதே" - என்றவாறு வெளியே இருந்த ட்ரிப் சுவிச்சைப் பார்க்கப் போனான். பின்னே றிக்கோ ஓடி வந்தது. அது லாறா, செல்சியின் பத்தாவது பிறந்தநாளுக்கு வாங்கிக் கொடுத்த நாய்.

என்ன பிழை என்று தெரியாததால் அடுத்த நாள் அதிகாலையிலேயே எலக்ட்ரிசியனை வர சொன்னான்.

மேலே கூரையின் பரணுக்குள் ஏறிபார்த்த எலெக்ட்ரிசியன் தாறுமாறாக வெட்டப்பட்டுக் கிடந்த மின்சார வயர்களைப் பார்த்துவிட்டு இது பொஸம் ஒன்றின் வேலைதான் என்றான்.

பகலில் மரங்களிலும் பற்றைகளிலும் இரைக்கு அலைந்து விட்டு இரவில் நித்திரைக்காக வீட்டுக் கூரைகளை நாடிவரும் துடைப்ப வால் பொஸங்கள் அந்தப் பகுதியில் அதிகம். ஒரு வகை மர எலிகள் அவை. அரை மீற்றர் நீளமான உடம்பும் அதேயளவு நீளமான வாலும் கொண்டவை. ஒருபோதும் கூட்டமாக சேர்ந்திருக்காது ஒற்றையாக வாழும் தனியன்கள். இனப் பெருக்க காலத்தில் மட்டுமே பெண்ணைத் தேடிப் போகும்.

அயலில் ஒரு வீட்டுச் சமையலறை சிம்னிக்குள் பொஸமொன்று தவறுதலாக விழுந்து அகப்படுக்கொண்டதாகவும், இன்னொன்று சுருண்டு மூடும் கார் கராஜின் றோலர் கதவுக்குள் அதன் அச்சோடு அச்சாக நீண்ட காலம் எவருக்கும் தெரியாமல் ஒளித்திருந்ததாகவும் பொப் கேள்விப்பட்டிருந்தான்.

அந்தப் பொஸத்தைப் பிடித்துவிடுவது என்று முடிவெடுத்த பொப், அது கூரைக்குள் ஏறும் பொந்தினைக் கண்டுபிடிப்பதற்காக பின்னிரவு ஒன்றில் வீட்டருகே நின்ற ஒரு 'கம்' மரத்தை பார்த்து குறிவைத்தபடி சற்றுத் தூரத்தே ஒளித்திருந்தான். அந்த மரமொன்றுதான் வீட்டுக்கு மிக அண்மையில் நின்றதால் அதன் வழியாகத்தான் ஏறி கூரைக்குப் போயிருக்க வேண்டுமென ஊகித்திருந்தான்.

பதினொரு மணிக்கு திருட்டுப் பால் குடிக்க வரும் பூனையை போல மெல்ல வந்து மரத்திலேறிய பொஸம் ஒன்று பின் ஓட்டுக்குத் தாவி, கணப்பொழுதில் தலை கீழாக தாழ்வாரத்தினூடு ஏறி, கூரைக்குள் துவாரமொன்றினூடே போனதைக் கண்ட பொப் அவ்விடத்தை அவதானித்துக் கொண்டான்.

கம்பி வலையால் தயாரித்த சதுரக் கூடொன்றை ஒரு அதிகாலையில் ஏணி வைத்து ஏறி அந்த ஓட்டையின் வாசலோடு பொருத்திக் கட்டினான். பொழுது புலரும் நேரத்தில் அது இரைக்காக வெளியே வந்து கூட்டுக்குள் மாட்டிக்கொண்டது. அதைப் பிடித்து றிக்கோவின் பழைய மரக் கூடொன்றில் தற்காலிகமாக அடைத்தான். அன்றிலிறுந்தே றிக்கோவின் பரம எதிரி அந்தப் பொஸம்தான்.

சிவந்த கண்ணின் நடுவில் கருமணியும் றோஸ் நிற மூக்கும் கொண்ட துடைப்ப வால் பொஸம்தான் அது. அதன் வலக் கால் தீக்காயம் பட்டு எரிந்ததை போலிருந்ததால் அது நொண்டி நொண்டியே நடந்தது. அதற்கு 'போகோ' என்று பெயரிட்டிருந்தான். ஆனால் எல்லோரும் அதனை நொண்டிப் பொசம் என்றே கூப்பிட்டனர். போகோவுக்கு மூன்று நேரமும் பழங்களை வெட்டிக் கொடுத்தான். அப்பிள், பியர்ஸ், திராட்சை பழங்களை அது சாப்பிடும். ஐவனறி, வீட்டுக்குப் பத்து நிமிட தொலைவிலேயே இருந்ததால் மதியம் தோட்டத்திலிருந்து கொண்டு வரும் பழங்களையும் வைத்துவிட்டுப் போவான். சொந்தப் பிள்ளைகள் இல்லாத அவனுக்கு போகோ ஒரு தத்தெடுத்த பிள்ளையாகிவிட்டது.

அந்த வருடம் வரண்ட நீண்ட கோடை. ஆனால் அப்போது

தான் திராட்சை குலை பிடிக்கும் பருவம். தோட்ட வேலைகள் அதிகம் அவனுக்கு இருந்தன. ஒரு பிற்பகலில் வீட்டில் மறந்து விட்டு விட்டு வந்த எதையோ எடுக்க யூட்டை எடுத்துக் கொண்டு கிறவல் சாலை வழியாக வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தபோது, அவனது யூட்டை விலத்திக் கொண்டு ஒரு கார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு கடந்து சென்றது. திருப்பிப் பார்க்க பசஞ்சர் சீற்றில் செல்சியும், டிரைவர் சீற்றில் ஒரு பையனும் இருந்ததை கண்டான். மெதுவாகப் பின்தொடர்ந்து பார்க்க; அந்தக் கார் அவன் வீட்டுக்கு நூறு மீற்றருக்கு முன்னரே செல்சியை இறக்கி விட்டுப் போய் விட்டது.

பொப் தன் யூட்டை மறைவாக நிறுத்திவிட்டு ஒரு சிகரட்டை புகைக்கத் தொடங்கினான்.

வீட்டுக்கு வந்து செல்சியின் கதவைத் தட்ட உள்ளே எந்த சத்தமுமில்லை. இரு நிமிடங்களின் பின் கதவை அரைவாசி திறந்தபடி, என்ன என்பது போல புருவத்தை உயர்த்தினாள்.

'யார் அந்தப் பையன்"

பதிலேதும் சொல்லாமல் கதவைச் சாத்திக்கொண்ட செல்சி உள்ளிருந்து கதவுக்கு ஸ்ரொப்பர் ஒன்றையும் போட்டாள்.

செல்சிக்கு அப்போது வயது பதினேழு. பெண்கள் இந்த வயதில் தங்களை தனிமைப்படுத்தி அதிலும் குறிப்பாக பெற்றோர் அறியமுடியாத ஒரு இருட்டுலகில் சஞ்சரிக்க விரும்புவதுண்டு. அதை பொப் விடயத்தில் செல்சி இன்னும் அதிகமாகவே செய்தாள்.

லாறாவுக்குத் தெரியாமல் இதைக் கண்காணிக்க வேண்டுமென நினைத்துக் கொண்டவன் வேலைப்பழுவில் பிறகு அப்படியே அதை மறந்து போனான். பிறகொருமுறை நினைவுக்கு வந்தபோது இதெல்லாம் இளவயதின் சுவாரஸ்யங்கள் அல்லவா? என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

இதற்கிடையில் செல்சி லாறாவிடம் ஒரு பொய்யைச் சொன்னாள். பொய் என்பதை விட பொறி என்பதே சரி.

"பொப் என் கதவு வழியே எனக்குத் தெரியாமல் எட்டிப் பார்த்தான். அப்போது நான் ஆடை மாற்றிக் கொண்டிருந்தேன்"

அவள் ஒருபோதும் 'டாடி' என்று அழைத்தது கிடையாது. அதை ஒரு பிடிவாதமாகவே தனக்குள் வைத்திருந்தாள்.

லாறாவுக்கு இது திகிலூட்டியது. இப்படி பல கதைகளை அவள் அறிந்திருந்தாள் என்பதைவிட இதற்கான பொறுப்பு தன்னிலும் உள்ளதென்பதை வலிமையாக உணர்ந்தாள். பொப்புக்குத் தெரியாமல் அவனைக் கண்காணிக்க வேண்டுமென அவளும் நினைத்துக் கொண்டாள் ஆனாலும் பொப்பைப் போல அதை மறந்து விடவில்லை. அதை விட அவள் இன்னொரு திட்டத்தையும் தீட்டியிருந்தாள்.

ஆதர் அன்று காலையே வந்திருந்தார். அவருக்கு வேறு வேலைகள் நகரில் இருந்ததுடன் மகளையும் பார்த்துப் பேசிவிட்டுப் போக வந்திருந்தார்.

"செல்சி சொன்னது எதுவாயிருந்தாலென்ன, தோட்டத்தை உன் கைக்கு எடுப்பதற்கு இது உனக்கு கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பம்" - என்றுவிட்டு ஆதர் போய்விட்டார்.

அன்று தோட்டத்திலிருந்து இருட்டியபின் பிந்தி வந்த பொப்புக்கு லாறாவின் தகப்பன் ஆதர் வந்திருந்தது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஆதர் திரும்பிச் சென்று சில வாரங்கள் கழித்து ஒருநாள் மதியம் வீட்டுக்கு வந்தபோது குடும்ப சொத்துக்கான உயில் சாசனம் எழுதுவது தொடர்பாக லாறா தொடர்பு கொண்ட வழக்குரைஞர் ஒருவரின் கடிதம் வந்திருந்ததைக் கண்டு வியப்படைந்த பொப் அதை அவசரமாகப் பிரித்தான். அதில் எழுதப்பட்டிருந்த - "பொப் மாக்கினளின் உடல் நிலை திருப்திகரமான நிலையில் இல்லாததாலும்."

என்று தொடர்ந்த வசனத்தை வாசித்ததும் கோபம் தலைக்கேறியது. இருவரையும் வந்து தன்னைச் சந்திக்குமாறு வழக்குரைஞர் கடிதத்தில் இறுதியில் குறிப்பிட்டிருந்தார்.

அன்று மாலை வீட்டுக்கு வந்தபோது செல்சியை தனது காரில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு அப்போதுதான் வந்த லாறாவிடம் -

'யாரைக் கேட்டு இதெல்லாம் செய்கிறாய்" என்று கடிதத்

தைக் காட்டிக் கத்தினான்.

'எனக்கும் செல்ஸிக்கும் எதிர்கால பாதுகாப்புக்கு நீ என்ன உத்தரவாதம் தரப் போகிறாய்" - லாறா திருப்பிக் கேட்டாள்.

'பாதுகாப்பா? யாருக்கு? இப்போ அது தேவை"

'நீ செல்சியின் பக்கம் போகாதிருந்தாலே எல்லோருக்கும் நல்லது"

'என்ன சொன்னாய். அவளைப் பற்றியா. நீ சொல்ல வருகிறாய்"

ஒரு முறை கோபத்தில் கத்தினால் பிறகு பல நாட்களுக்கு அவன் பேச மாட்டான் என்பது லாறாவுக்குத் தெரியும். ஆனால் பதிலுக்கு இவளும் கத்தினால் விளைவுகள் பற்றி இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை. அதுதான் முதல் தடவை.

அன்றுதான் நீண்ட நாட்களுக்குப் பிறகு வைன் அருந்தியிருந்தான் பொப்.

இரவு வீட்டுக்கு வந்தபோது லாறா நித்திரையாயிருந்தாள்.

இந்த வாக்குவாதத்தினாலும் வைன் போதையினாலும் அன்று போகோவுக்கு மதியமும், இரவும் பழங்களை வைக்க மறந்துவிட்டத்தை சாமத்தில் திடீர் விழிப்பு வந்து எழுந்து கொண்டபோதே உணர்ந்து கொண்டான் பொப். உடனே டோர்ச் லைற்றையும், பழங்களையும் எடுத்துக்கொண்டு வெளியே போக, வழமையாக பின் கதவருகே படுத்து நித்திரையாயிருக்கும் றிக்கோ இன்னும் விழித்துக் கொண்டிருந்தது ஆச்சரியமாகவிருந்தது.

போகோவின் கூட்டுக்குப் போனபோது கூட்டில் அது இல்லை. பசி தாங்காமல் கூட்டின் அடிபாகத்தில் போட்டிருந்த மெல்லிய பலகையைக் கடித்து அதன் கீழேயிருந்த கம்பி வலையையும் வெட்டி அது தப்பிவிட்டது.

அவன் உடல் வியர்வையால் நனைத்திருந்தது. தலைக்கு மேலால் அபூர்வமாக அந்த நேரத்தில் குக்குபரோ ஒன்று அலறிக் கொண்டே பறந்து போனது. டோர்ச்சை அடித்துக்கொண்டே வளவின் எல்லையிலுள்ள கம்பி வேலி வரை போனான். அங்கே கம்பியில் சிக்குப்பட்டிருந்த

போகோ கழுத்தில் கடி காயமொன்றுடன் இறந்து கிடந்தது.

கூட்டிலிருந்து தப்பியோடிய போகோவைத் துரத்திப் பின் தொடர்ந்து கடித்துக் கொன்றிருந்தது றிக்கோ.

அப்போதுதான் அவனுக்கு இரண்டாவது தடவையாக இரத்தக் குழாயில் வீக்கம் ஏற்பட்டு வெடித்தது. காலை விடிந்த பிறகே போகோவுக்குப் பக்கத்தில் கிடந்த அவனுடலைக் கண்டெடுத்தனர்.

பெயரளவில் குடும்ப உறவில் இருந்தாலும் பொப் தனக்குள் ஒரு தனிமை கூண்டினுள்தான் வாழ்ந்திருந்தான். அந்தப் பொஸத்தைப் போல. அவன் விட்டுச் சென்ற சொத்து மட்டும் 10 மில்லியன்னுக்கு மேல் இருக்கும் என்று மதிப்பிட்டிருந்தார்கள்.

பொப்பின் மறைவுக்கு சில மாதங்களின் பின்னர் லாறாவுக்கு உண்மை தெரிய வந்து மனங்கசந்து அங்கிருக்கப் பிடிக்காமல் தோட்டத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு செல்சி யுடன் குயீன்ஸ்லாந்து சென்று விட்டாள். இப்போது அங்குள்ள மிருகங்களின் சரணாலயமொன்றில் வேலை செய்கிறாள்.

அவர்கள் வாழ்ந்த வீட்டையும் காணியையும் அவள் எவருக்கும் வாடகைக்கு கொடுக்கவில்லை. அதன் மரப் படலையில் ஒரு பெரிய பூட்டுப் போடப்பட்டிருக்கிறது.

அந்தக் காணியில் எல்லையில் இரு நினைவுக் கற்கள் இன்னும் இருக்கின்றன. ■




**கேள்வி** - ஏகப்பட்ட பட்டுப் புழுக்களைக் கொன்றுதான் ஒரு பட்டுப் புடவை தயாரிக்கிறார்களாமே, உண்மையா?

**எல்.ராஜா, மல்லாகம்**

**பதில்** - *அட போப்பா நீ வேற. என்னைக் கொன்றே பல பட்டுப் புடவை வாங்கிட்டாள் என் மனைவி.*

**கேள்வி** - கைப்புள்ள "சித்தி" பெற நான் என்ன செய்ய வேனும்?

**எம். குணாளன், கொழும்பு 13**

**பதில்** - *உங்க அப்பாவை இரண்டாவது கலியாணம் செஞ்சிக்க வைக்கணும்.*

**கேள்வி** - நீ இங்கிலீஸ் பேசுவியா கைப்புள்ள

**ஜி. கவிதா, நுவரெலியா**

**பதில்** - *ஓர் இங்கிலிஸ்காரர் :* what is this?
*நான் : திஸ் இஸ் தயிர்*
*இங்கிலிஸ்காரர் :* what is *தயிர்?*
*நான் :* Milk Sleep at Night and Morning Become Tight
*யார்கிட்ட நாங்களும் இங்கிலிஸ் பேசுவோம்ல*



**கேள்வி** - எனக்கு கல்யாணமாகி நாலு வருஷமாச்சு. வரதட்சணை பாக்கி இன்னும் தந்தபாடில்லை. என்ன செய்வது?

**எம். பிராசாந்த், யாழ்ப்பாணம்**

**பதில்** - *'வராத தட்சனை' என்று தள்ளுபடி பண்ணிட வேண்டியதுதான்.*

**கேள்வி** - நான் ஒரு தப்புப் பண்ணினேன். அதைக் கண்டுகொண்ட ஒருவர், "என் மகளைத் திருமணம் செய்துகொள். இல்லையேல் பொலிஸிடம் உன்னை மாட்டி விடுவேன்" என்று மிரட்டுகிறார். தப்பிக்க என்ன வழி? ஒரு ஐடியா தாருங்கள்.

**கே. ரூபன், மஸ்கெலியா**

**பதில்**- *மேடர் பண்ணினாக் கூட 20 வருடம்தான் சிறைத்தண்டனை. ஆனால், மெரி பண்ணினால் உனக்கு ஆயுள் தண்டனைதான். எந்த ஆணியைப் புடுங்கிறது எண்டு நீதான் முடிவெடுக்கவேணும்.*

**கேள்வி** - எங்களுக்கு எப்போது இந்தப் பசி இல்லாமல் போகும்?

**பி. மஞ்சுளா, கம்பளை**

**பதில்** - *"சாப்பிட்டு முடிங்க உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்" என்று மனைவி சொல்லும்போது புருஷனுக்குப் பசி இருக்கும் என்கிறீரா?*





டொக்டர்
எம்.கே. முருகானந்தன்
(குடும்ப மருத்துவர்)

## சொல்லுங்கோ டொக்டர்

# பச்சை குத்தினால் புற்றுநோய்?

கேள்வி–

பச்சை குத்தினால் தோல் புற்று நோய் ஏற்படும் என்கின்றார்களே. உண்மையா?

**எஸ் . வினோத் வவுனியா**



*பதில்:-*

*பச்சை குத்தினால் புற்றுநோய் வரும் என்பதற்கான தெளிவான திடமான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை. ஆனால் வரக் கூடும் என்ற சில சந்தேகங்கள் பரவலாக உள்ளன.*

*பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நிறக் கலவைகளில் பலவிதமான இரசாயனங்கள் கலந்துள்ளன. நிக்கல், குறோமியம், மங்கனீஸ், கோபாலட், டைடேனியம் ஒட்சைட் போன்றவை முக்கியமானவை.* (nickel, chromium, manganese, cobalt, or titanium dioxide). *இவற்றில் பல நச்சுத் தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.*

*அத்துடன் இந்த இரசாயனங்கள் பச்சை குத்தப்பட்ட இடத்தில் மட்டுப்பட்டு நிற்காமல் அருகில் உள்ள சருமத்துக்கும் நிணநீர்த் தொகுதி ஊடாக நிணநீர்க் கட்டிகளுக்கும் பரந்து சென்று அவற்றைச் சற்று வீக்கமடையச் செய்வதாக அண்மைய ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.*

*இவை நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பதற்கு அப்பால் நிக்கலும் குரோமியமும் புற்றுநோய்த் தூண்டியாக இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே பச்சை குத்துபவர்களுக்கு எதிர்காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனாலும் புற்றுநோய் ஏற்படுவதாக இதுவரை கண்டறியப்படவில்லை.*

*பச்சை குத்தப்பட்டவர்கள் எந்த வித ஆபத்தும் இன்றி சாதாரணமாக இருப்பதால் அவை பாதுகாப்பானவை என்ற எண்ணம் சாதாரண மக்களிடம் இருக்கிறது. ஆனால் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்பட நீண்ட பல வருடங்கள் எடுக்கும் என்பதால் அவை பற்றி பெரும்பாலும் தெரிய வருவதில்லை.*

*பச்சை குத்துவது என்பது சருமத்தில் சில அடையாளங்களை அல்லது கோலங்களை அல்லது எழுத்துக்களை வண்ணக் கலவைகளால் பதிப்பதாகும். சிறிய ஊசிகளால் நுண்ணிய அளவு வண்ணக் கலவைகளை மீண்டும் மீண்டும் சருமத்தின் மேற்பகுதியில் குத்துவதால் அவை உள்ளே செல்கின்றன.*

*இவை நிரந்தரமான அடையாளங்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். காலத்தால் அழியாதவை. எனவே அந்நியப் பொருளான அது உடலில் நிரந்தரமாகக் குடிகொள்ளப் போகிறது என்பது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். எந்த அந்நியப் பொருளானாலும் அதற்கு எதிராக உடல் எதிர் வினையாற்றக் கூடும்.*

*புற்றுநோய் வருமா இல்லையா என்ற பிரச்சினைக்கு அப்பால் வேறு பல பாதிப்புகள் ஏற்படுவதை மருத்துவர்களாகிய நாம் காண முடிகிறது.*

*ஒவ்வாமை சரும நோய்கள் மிக முக்கியமானவை. அந்த இடத்தில் சருமத்தில் அரிப்பு எடுப்பது, அழற்சி மற்றும் எக்ஸிமா போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. சிலருக்கு உடனடியாகவே அத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆனால் வேறு சிலருக்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே அவை தோன்றக் கூடும்.*

*பச்சை குத்திய இடங்களில் கிருமித் தொற்று ஏற்பட்டு புண்கள் தோன்றுவதை அதிகம் காண முடிகிறது. இதற்குக் காரணம் பச்சை குத்தும் பணியாளர்கள், தமது கைகளை கழுவுதல் குத்துவதற்கு உபயோகிக்கும் ஊசிகளை கிருமி நீக்கம் செய்யாமை போன்ற சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடிக்காமையே ஆகும். சருமத்தில் கிருமித் தொற்று மட்டுமின்றி பெரிய சீழ் கட்டிகள் வரை ஏற்படுவதுண்டு.*

*பச்சை குத்திய இடங்களில் தழும்புகள் தோன்றுவது மற்றுமொரு பிரச்சினை. அழகைத் தேடப் போய் அசிங்கத்தில் முடிவதாக இது அமையும். இது எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. உடலியல் ரீதியாகச் சிலருக்கு இவை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம். இருந்தபோதும் ஆழமான பெரிய புண்கள் ஏற்பட்டால் எவருக்கும் தழும்புகள் தோன்றலாம். தழும்புகள் சுலபமாகக் குணப்படுத்த முடியாதவை என்பதால் அவை வராமல் தடுப்பதே உசிதமானது.*

*சிறிய காய்கள், சரும அழற்சி போன்றவை உள்ள இடங்களில்பச்சை குத்துவது அறவே கூடாது. ஏனெனில் அவை பின்பு புற்றுநோயாக மாறக் கூடிய சாத்தியம் உள்ளது. பச்சை குத்துவதில் உபயோகிக்கும் நிறக் கலமிகள் அதற்கான சாத்தியத்தை அதிகரிக்கும். இவ்வாறாக பல வித பாதிப்புகள் ஏற்படுவதால் பச்சை குத்துவதைத் தவிர்ப்பதே நல்லது.* ■



## குண்டக்க மண்டக்க
### கைப்புள்ள பதில்கள்

வீட்டில் வெட்டியாக இருந்து எதிரொலியை வாசித்து விட்டு. முகட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இப்படி இருக்கும் போது உங்கள் மூளைக்குள் குறுகுறுவென்று ஏதேதோ கேள்விகளெல்லாம் எழுமே. எல்லாவற்றையும் உடனே எழுதி அனுப்புங்கள். எங்கள் கைப்பிள்ளை தன் பாணியில் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லி உங்களைக் கலகலப்பூட்டக் காத்திருக்கிறார். ம்ம்..! கேள்விகள் புறப்படட்டும்!!!

மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.



# இதயத்தால் உணரப்பட வேண்டியது!

● சுரேஷ் கண்ணன்

அழகி, ஆட்டோகிரா∴ப் போன்ற திரைப்படங்களின் வரிசையில் இன்னொரு பசுமையான நினைவுகளின் கொண்டாட்டம்தான் 96. பாலின பேதமின்றி பதின்ம வயதுகளின் விடலைப் பருவத்தில் இனக்கவர்ச்சி சார்ந்த காதலில் விழாத நபர்களே இருக்க முடியாது. புத்தகத்தில் ஒளித்து வைத்த மயிலிறகு போல அவ்வப்போது அந்த நினைவுகளை மனதுக்குள் தடவிப் பார்ப்பவர்கள் அநேகம் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களின் பழைய மனக்காயங்களுக்கு வடிகாலாகவும் மருந்தாகவும் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.



ஒரு நுண்ணிய இழையை எடுத்துக்கொண்டு கவிதையான தருணங்களாலும் இயல்பான நகைச்சுவையுடனும் அமைந்த காட்சிகளின் வழியாகவும் அதை வளர்த்தெடுத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் சி.பிரேம்குமார். ('நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' திரைப்படத்தின் ஒளிப்பதிவாளர்.

விஜய் சேதுபதி (கே.ராமச்சந்திரன் என்கிற ராம்) ஒரு புகைப்படப்பிடிப்பாளர். தொழில் சார்ந்து இந்தியா முழுக்கச் சுற்றுபவர். தஞ்சாவூர் பக்கம் செல்லும்போது இளமையில் தான் படித்த பள்ளியைக் காண்கிறார். பழைய நினைவுகள் கிளர்ந்தெழ, இளமைப் பருவ நண்பர்களை உடனே அழைக்கிறார். 96 ஆம் வருடத்தில் படித்த அனைவரும் கூடி சென்னையில் ஒரு நாள் சந்திப்பதென்று முடிவாகிறது. அந்தச் சந்திப்பில் ஒருவரின் பிரத்தியேக வருகைக்காக நெஞ்சு படபடப்புடனும், மூச்சுத் திணறலுடனும் காத்திருக்கிறார் விஜய் சேதுபதி. அது த்ரிஷாவுக்காக. (ஜானு என்கிற ஜானகி தேவி).



சம்பிரதாயச் சந்திப்புக் கூட்டம் முடிந்து ராமுவுக்கும் ஜானுவுக்கும் இடையில் பின்னிரவில் நீளும் உரையாடலும் அந்த அழ்கான இரவும்தான் இந்தத் திரைப்படம். இவர்களுடைய இளமைப்பருவத்தின் பள்ளிக்கூடக் காட்சிகள் சுவாரசியமாகவும் படத்துக்கு உறுதுணையாகவும் அமைந்திருக்கின்றன.

படத்துக்குப் படம் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டே போகிறார் விஜய் சேதுபதி. இவரை எந்த வகைமையில் அடைப்பது என்றே புரியவில்லை. தனது இயல்பான, அநாயசமான நடிப்பால் அசத்தியிருக்கிறார் ஏறத்தாழ நாற்பது வயதிலும் பதின்ம வயது இளைஞனின் முகபாவத்தையும் தோரணையையும் தருவது சிறப்பு. 22 வருடங்களுக்குப் பிறகு த்ரிஷாவைப் பார்க்கும் அந்தத் தருணத்தில் முகத்தைப் பார்க்க முடியாமல் நெஞ்சு படபடக்க, மூச்சுத் திணறி மயங்கிச் சாயும் காட்சி முதற்கொண்டு நினைவுப் பொருட்களால் நிரம்பியிருக்கும் பெட்டியை மூடும் இறுதிக் காட்சி வரை விஜய் சேதுபதியின் ராஜ்ஜியம்தான். சின்னச் சின்ன அழகான முகபாவங்களால், உடல் அசைவுகளால் ராமை நிரப்பியிருக்கிறார்.

விண்ணைத் தாண்டி வருவாயா ஜெஸ்ஸிக்குப் பிறகு ஓர் அருமையான பாத்திரம் த்ரிஷாவுக்கு. தன் வாழ்வையே புரட்டிப் போட்ட அந்த அபத்தமான பிழையை எண்ணிக் கதறும் காட்சி முதற்கொண்டு பல காட்சிகளில் பிரமிக்க வைத்திருக்கிறார். "சந்தோஷமா இருக்கேனான்னு தெரியல. நிம்மதியா இருக்கேன்" என்பது போன்ற வசனங்கள், பெரும்பாலான சராசரிப் பெண்களைப் பிரதிநிதிப்படுத்துவதாகவும் ரகசியப் பெருமூச்சுகளாகவும் பதிவாகியிருக்கின்றன. பழைய காதலின் ஈர்ப்புக்கும் சமகால நடைமுறைக்கும் இடையில் தத்தளிப்பதை அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார். கலாசாரக் காவலர்கள் பதற்றம் அடையாதவாறு, இந்த உறவைக் கண்ணியமான எல்லைக்குள் நின்று பயணம் செய்ய வைத்திருக்கிறார் இயக்குநர்.



ஜனகராஜை நீண்ட காலம் கழித்து திரையில் பார்க்க முடிகிறதே என்கிற ஆச்சரியமும் மகிழ்ச்சியும் இருந்தாலும், அவரின் பாத்திரம் சரியாகப் பயன்படுத்தப்படாத வகையில் சோகம் ஏற்படுகிறது. விஜய் சேதுபதியின் சமகால நண்பர்களாக பகவதி பெருமாள் (பக்ஸ்), தேவதர்ஷினி, ஆடுகளம் முருகதாஸ் போன்றவர்கள் சிறப்புறத் தங்களின் பங்கைச் செய்திருக்கின்றனர்.

இவர்களின் உருவத்தோற்றத்தை ஒத்திருக்கும் நபர்களையே இளமைப்பருவக் காட்சிகளுக்கு இயக்குநர் தேர்ந்தெடுத்திருப்பது சிறப்பு. இளமையான விஜய் சேதுபதியாக, எம்.எஸ்.பாஸ்கரின் மகன் ஆதித்யா பாஸ்கர் நன்றாக நடித்துள்ளார். ஜானுவாக நடித்திருக்கும் கௌரி கிருஷ்ணனின் பங்களிப்பும் அருமை. தேவதர்ஷினியின் இளமைப் பருவப் பாத்திரத்துக்கு அவருடைய மகளே நடித்திருப்பது சுவாரசியத்தையும் இயல்பையும் அளித்திருக்கிறது.



படத்தின் பெரும் பலங்களுள் ஒன்றாக இருக்கிறார் இசையமைப்பாளர் கோவிந்த் வசந்தா. குழலும் பியானோவும் தந்தி வாத்தியங்களும் படம் முழுவதிலும் மென்மையாக வருடிக்கொண்டே இருக்கின்றன. பாடல்கள் இனிமையாக இருந்தாலும் அவற்றில் சில பொருத்தமற்ற இடங்களில் வந்து பொறுமையைச் சோதிக்கின்றன. தொண்ணூறுகளின் காலக்கட்டம் என்பதால் தேவையான இடங்களில் இளையராஜாவின் இசை பொருத்தமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு காலக்கட்டத்திய தமிழ்ச் சமூகத்தின் ஆழ்மனதில் உறைந்திருக்கும் இசை என்பதால் அது மட்டுமே பல வெற்றிடங்களை நிரப்பிச் செல்கிறது. மின்தடை ஏற்படும் இருளில் ஆயர்பாடியில் கண்ணன் இல்லையோ, ஆசை வைப்பதோ அன்புத் தொல்லையோ என்று ஜானு பாடும் வரிகள்தான் இத்திரைப்படத்தின் மையம் என்று கூட சொல்லலாம். ராமுவின் நீண்ட வேண்டு கோளை அது வரை இரக்கமின்றி மறுத்து, பொருத்தமான இடத்தில் பாடுவதால் இந்தப் பாடலின் சுவை கூடுகிறது.



இணையாத காதல் காவியமாகும் என்பார்கள். அந்த வகையில் சில காவியத் தருணங்கள் இந்தத் திரைப்படத்தில் உள்ளன. இத்திரைப்படத்தைக் காண வேண்டிய சித்திரம் என்பதை விடவும் உணரப்பட வேண்டிய ஒரு நல்ல அனுபவம் என்றே சொல்லலாம். அநாவசியமான இடைச்செருகல்கள் இல்லாமல் தேவையான காட்சிகளோடு இயல்பாகப் பயணிக்கிறது. படத்தின் பிற்பகுதியில் மட்டும் இழுவையாக நீண்டிருக்கும் சில காட்சிகளை இறுக்கிப் பிடித்திருக்கலாம்.

சுஜாதாவின் சிறுகதை ஒன்று நினைவுக்கு வருகிறது. பணிக்காலத்தில் பார்த்த தன் ஆங்கிலோ இந்திய நண்பரை வைத்து அந்தச் சிறுகதையை எழுதியிருப்பார் சுஜாதா. ஒரு பெண்ணை உருகி உருகிக் காதலிப்பார் அந்த நண்பர். திருமணம் கைகூடாத நிலையில், காதலிக்குத் திருமணமாகி வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டாலும் அவளின் நினைவாகவே பல வருடங்கள் காத்திருப்பார். வருடா வருடம் கிறிஸ்மஸ் வாழ்த்து அனுப்புவார். காதலிக்கு நரை கூடி கிழப்பருவமெய்தி, கணவனை இழந்து பிள்ளைகளின் திருமணம் முடித்து திரும்பி வரும் அந்திமக் காலத்தில் இணையும் வரை இந்த பிரம்மச்சரியக் காத்திருப்பு நீளும். இந்தப் பாத்திரத்தைப் பற்றி உளவியல் மருத்துவரிடம் சுஜாதா விசாரிக்கும் போது 'He is not normal' என்றாராம் மருத்துவர்.

இனக்கவர்ச்சி, ஈஸ்ட்ரோஜென், ஹார்மோன்கள் என்று பல்வேறு விதமாக இளமைக் காதலை ஆராய்ச்சி செய்ய முடிந்தாலும் அது தரும் பிரத்தியேகமான இன்பமும் வலியும் அறிவால் அல்லாமல் இதயத்தால் உணரப்பட வேண்டியது. அந்த அனுபவத்தை மிகச்சிறப்பாகக் கடத்தியிருக்கிறது 96.



# கலங்கடிக்கும் 'மீ டூ'

● வெண்பா





கிட்டத்தட்ட பதின்மூன்று வருடங்களுக்கு முன் பாடலாசிரியர் வைரமுத்துவால் தனக்கு நிகழ்ந்த பாலியல் அத்துமீறலை சின்மயி இப்போது metoo வில் தெரிவித்துள்ளார். இது பார்ப்பன சதி என்றும் பிறகேன் அவர் பாடல்களைப் பாடி நன்றி தெரிவித்தாரென்றும் தன் திருமணத்துக்கு அழைத்து ஆசிர்வாதம் வாங்கியது ஏன் என்றும் சின்மயி மீது கேள்விகள் தொடுக்கப்படுகிறதே யொழிய வைரமுத்துவைக் கேள்வி கேட்க ஆளில்லை. வைரமுத்து தன்னுடைய கண்ணியத்தைக் காத்துக்கொள்வதாகக் கருதி முழுமையாகத் தன் தவறை மறுக்க இயலாமல் தொடர்ச்சியாகத் தான் அவமானப்படுத்தப்படுவதாகவும் உண்மையைக் காலம் சொல்லுமென்றும் ஒரு பதிலை எழுதிவிட்டு அமைதியாக இருக்கின்றார். உண்மையில் சின்மயி மட்டுமே வைரமுத்து மீது புகார் சொல்லவில்லை.

கடந்த வாரம் சந்தியா மேனன் என்கிற மூத்த இதழாளர் இரண்டு பெண்கள் வைரமுத்துவால் தமக்கு நிகழ்ந்த பாலியல் அத்துமீறல் அனுபவங்களைத் தனிச்செய்தியில் தெரிவிக்க அதை ஸ்க்ரீன் ஷொட்டுகளாக வெளியிட , சின்மயி அதை ரீட்வீட் செய்து தனக்கு வைரமுத்துவால் ஸ்விட்சர்லாந்தில் நிகழ்ந்த பாலியல் அத்துமீறலையும் நெருக்கடியையும் தெரிவித்தார். அதுமட்டுமில்லாமல் தனக்குத் தனிச்செய்திகளில் வந்த பல பெண்களின் புகார்களையும் அம்பலப்படுத்தத் துவங்கினார்.

வைரமுத்து மேல் உண்மையில் குற்றமில்லையெனில் அவருடன் பணியாற்றிய அல்லது நட்பு கொண்ட ஒரு பெண்ணாவது என்னிடம் அவர் அவ்வாறு நடக்கவில்லை என்று சொல்லியிருப்பார்கள். எனவே அவர்களது மௌனம் வைரமுத்து மீதான குற்றத்தை உறுதி செய்கிறது. மீ டூ (MeToo) இயக்கத்தில் அதிகார வர்க்கத்தில் ஆண்கள் தங்கள் பதவியையும் செல்வாக்கையும் கொண்டு நிகழ்த்தும் பாலியல் சுரண்டலை சுயவிவரமின்றி குற்றவாளியின் பெயரைக் குறிப்பிட்டு எழுதி சமூகத்துக்குத் தெரியப்படுத்தலாம் என்பது வசதியான முறையாகும்.

பாலியல்சார் சுரண்டல்கள் எல்லா பெண்களுக்கும் ஏதேனும் ஒருவகையில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதைப் பதிவு செய்வதே மீ டூ வின் முதன்மையான நோக்கமாகும்.

#MeToo இயக்கம் இன்னும் தீவிரமாகும் பட்சத்தில் பணியிடங்கள் மற்றும் பொதுவெளியில் பாலியல் சுரண்டல்கள் குறைய வாய்ப்புள்ளது. மேலும் நீதித்துறையானது அரசியலமைப்புச் சட்டத்தில் பாலியல் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கும் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். சைபர் குற்றப்பிரிவும் சரிவர இயங்கி புகார் தரும் முறைகளை எளிமையாக்கித் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினால் நாட்டில் பாலியல்சார் குற்றங்கள் பெருமளவில் குறையும். அதுவரை #MeToo நாட்டுக்குத் தேவையான ஹேஷ்டேக் (hashtag) ஆகும்.

பெண்களே, Me Too வில் போலியான புகார்களும் சொல்லப்படுகின்றன. தம்முடைய சுய பழிவாங்கலுக்காக எந்தவொரு பெண்ணும் me too வைத் தவறாக பயன்படுத்தாதீர்கள். உண்மையில் உங்கள் புகார் ஆண்களைப் பழிவாங்குவதில்லை. உங்களைப் போன்ற ஒரு பெண், மெய்யாகவே சிக்கலில் மாட்டியுள்ள பெண்ணைப் பழிவாங்குகிறது. அவளது புகாரையும் ஐயத்துக்குள்ளாக்குகிறது. எனவே சக பெண்களை மதித்துப் போலிப் புகார்களை அறவே தவிர்த்துவிடுங்கள். அதுவே நீங்கள் பெண்ணினத்துக்குச் செய்கிற பெரும் நன்மையாகும்.




ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)

# போர்த்துக்கேயரின் நிலக் கொள்கை

யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்து விட்டது. கலகக்காரர்களின் கலகம் ஆக்கிரமிப்பு என்பன முடிவடைந்து ஒரு மாதத்துக்கு மேலாகிறது. பிரச்சினை முடிந்து சமாதானம் யாழில் நிலை நாட்டப்பட்டு விட்டது. போர்த்துக்கேயர் நிலம் தொடர்பான அரசியல் வக்குரோத்து வேலைகளில் ஈடுபடவில்லை. உள்ளூர் வாசிகள் பெரியளவில் போர்த்துக்கேயருக்கு நிலங்களைக் கையளிக்க முன்வரவில்லை. போர்த்துக்கேயருக்கும் கோட்டையைப் போல் பெரியளவில் நிலம் தேவைப்படவில்லை. தெற்கைப்போல் மிளகு, பாக்கு என்பன பெரியளவில் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படவில்லை. போர்த்துக்கேயப் படை வீரர்கள் தங்குவதற்கு மட்டும் தான் இடம் தேவைப்பட்டது. முதல் பத்து ஆண்டுகள் கோட்டையில் ஏற்பட்ட அதே நிலைமை யாழ்ப்பாணத்திலும் போர்த்துக்கேயருக்கு ஏற்பட்டது. நில நெருக்கடி.


### போர்த்துக்கேயருக்கான நிலங்கள்

எவ்வாறாயினும் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கொஞ்சநிலம்போர்த்துக்கேயருக்குரியதாயிருந்தது. நாட்டைவிட்டு வெளியேறிய அரசகுடும்பத்தினரின் காணிகள், கலகம் விளைவித்தவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட காணிகள், வாரிசு இல்லாமல் இறந்ததால் முடிக்குரிய காணிகளாக மாற்றப்பட்ட காணிகள் என்பன போர்த்துக்கேயர்களுக்குரியதாயிருந்தன. இந்தக் காணிகள் பாதுகாப்புத் தேவைகளுக்காகவும் போர்த்துக்கேய இராணுவ கப்டன், மேஜர் போன்றவர்களின் நண்பர்களுக்காவும் ஒதுக்கப்பட்டன. சங்கிலியனுக்குச் சொந்தமான காரைதீவு (காரைநகர்) ஊர்காவற்றுறையில் பாதுகாப்புக் கருதி கோட்டையொன்று அமைக்கப்பட்டமை பாதுகாப்புக் காரணங்களுக்காக நிலம் ஒதுக்கப்பட்டதற்கு நல்ல உதாரணம். யாழ்ப்பாணத்து ஏழைப் பெண்களைத் திருமணம் செய்த போர்த்துக்கேயர்களுக்கும் காணிகள் ஒதுக்கப்பட்டன. இதைவிட ஒலிவேறா தனது அதிகாரத்தைப் பாவித்துத் தனது நண்பர்களுக்குச் சில காணிகளை ஒதுக்கீடு செய்தான். ஆனால், இந்த ஒதுக்கீடுகள் எவையுமே பெரியளவு நிலப்பரப்பைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு போர்த்துக்கேயர் கையப்படுத்திய நிலத்திலிருந்து வரும் வருமானத்தின் 1 2 வீதம் யாழ்ப்பாணத் திறைசேரிக்கு வாடகையாக வழங்கப்பட்டது. கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயர் உள்ளூர்வாசிகளுக்கு வழங்கிய வாடகைப் பணம் யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்ட வாடகைப் பணத்தை விடக் குறைவாயிருந்தது.

(சமர் தொடரும்)

தமிழில் :- புனிதா ராஜேந்திரன்
(ஆலோசகர்– மொழிபெயர்ப்பாளர்
மூலோபாய தொழில்முயற்சி
முகாமைத்துவ நிறுவனம் (SEMA)
ஜனாதிபதி செயலகம்)





# நஞ்சற்ற நாளைக்காக 10

அந்நிலங்களில் இலங்கையின் நிலங்களைப் போன்று உயிரியல் பன்மைத்துவம் இல்லை என்பதால், விளைச்சலைப் பெறுவதற்கான எந்தவொரு விதிமுறையையும் பயன்படுத்துவது அவர்களுக்குப் பொருத்தமானதாகும். எனினும் தொடர்ச்சியான மட்டத்தில் கொண்டு செல்லக் கூடியளவிலான உயிரியல் பன்மைத்துவமுள்ள, வருடத்தின் பன்னிரண்டு மாதங்களிலும் தாவரத்தின் வேர் மயிர்களின் செயற்பாடு காணப்படும். இலங்கையில் அது பற்றிக் கருத்திலெடுக்காது, உக்கிரமான நச்சு இரசாயனங்களைப் பிரயோகித்து அவற்றைக் கொன்று, ஒட்டுமொத்த உயிரியற்செயற்பாட்டையும் ஆபத்துக்குள்ளாக்கும் அறிவற்ற செயலாகின்ற அதே வேளை, ரைசோஸ்பியர் செயற்பாட்டின் வழியாக அவற்றைப் பாதுகாக்கலாம். நாம் சுற்றாடலுக்கும் மனிதருக்குமிடையேயும் சிதைந்து போயுள்ள அந் நிலைபேறானபிணைப்பை மீண்டும்கட்டியெழுப்பும் செயலையே செய்கிறோம்.

எம்மிடமிருந்து பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த விவசாயத் தொழில்நுட்பமாகிய அதிசயமே 1969 களில் புதைக்கப்பட்டது. அது புதைக்கப்பட்ட அறுபது ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்து போயுள்ள இத் தீர்மானமிக்க யுகத்தில் அதனை மீண்டும் இனங்கண்டு, மற்றும் பாவித்து மனிதனும் சுற்றாடலும் முகங்கொடுத்துள்ள இப் பயங்கர விவசாய இரசாயனங்களிலிருந்து மீள்வதே எமது பொறுப்பாகும். 1960 முதல் 2016 வரையான யுகமானது இலங்கையின் இயற்கை விவசாயத் தொழிலின் இருண்ட யுகம் என்பதை எமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். விவசாயத் துறையில் ஈடுபடுவோருக்கு இதனை விளக்கி இலங்கையின் இப் பயங்கர இரசாயன விவசாய யுகத்தை முடித்து இயற்கை விவசாயத் தொழிலை மீண்டும் வியாபிக்கச் செய்வதே எமக்கிருக்கின்ற சவாலும், வரலாற்று ரீதியான பொறுப்புமாக அமைகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிலைபேறான 17 இலக்குகள் அதற்கான சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இவ்விலக்குகள் மூலம் அன்று எமது மூதாதையர் காட்டிய அதே விடயங்களே விளக்கப்படுகின்றன. அக்காலத்தில் அவர்களை எள்ளி நகையாடிய மேற்கத்தேய விஞ்ஞானிகள், இப்போது அதே விடயங்களை சர்வதேச பேண்தகு கொள்கைகளாகத் தயாரித்து அவற்றை எம்மிடமே அனுப்புகிறார்கள். ஐரோப்பியாவுக்கு ஏற்பட்ட மோசமான சுற்றாடல் அழிவு ஏற்படாமல் மீண்டும் திரும்புவதற்கு இலங்கைக்கு இன்னும் சிறிது அவகாசம் எஞ்சியுள்ளது. எமது பாரம்பரிய ரீதியான விஞ்ஞான பூர்வமான அறிவைப் பயன்படுத்தி இதனை பூமியின் யதார்த்தமாக மாற்றிக் கொள்ள முடியும் என்பது இப்போது உச்ச நிலையில் உறுதியாகியுள்ளது.

### எமது வெற்றிகரமான பரிசோதனைகள்

எம்மால் 2016இல் பெரும் போகத்தின் போது தூய எண்ணத்துடன் உயர்வான எதிர்பார்ப்புகளுடன் இம்முறை பரிசோதனை செய்து பார்க்கப்பட்டாலும், மழை கிடைக்காத காரணத்தால், பெறுபேறுகள் சந்தேகத்துக்கிடமாக அமைந்தன. கமத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மகாவலி உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தவாறு, அப் போகத்தின் போது எமது ஆலோசனைகளுக்கு ஏற்ப, ஒரு ஏக்கர் இயற்கை விதிமுறைகளுக்கும் அமையவும், எஞ்சிய அரை ஏக்கர் இரசாயன விதிமுறைகளுக்கு அமையவும் பயிர்ச் செய்கை மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மழை குறைந்தமையால் பயிரிடப்பட்ட இரசாயன மற்றும் இயற்கை பயிர்ச் செய்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் குறைந்த நீர் வழங்களில் இயற்கை முறை வெற்றிகரமாகியுள்ளது இரசாயன் முறை தோல்வியடைந்துள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது.

யூரியாவினால் நீரின்றி எதுவும் செய்ய முடியாது. அதிலுள்ள அதிக செறிவு மற்றும் ஆவியாதல் காரணமாக நெற்பயிருக்கு நீர் இல்லாத போது அதன் வேர்மயிர்களிலுள்ள நீரும் யூரியாவை நோக்கி ஈர்த்தெடுக்கப்படுவதால், பயிருக்குத் தேவையான போசாக்கு கிடைக்காமல் போகிறது. எனினும், ரைசோஸ்பியர் செயற்பாடு இடம்பெறுகின்ற இயற்கை விவசாயத்தில், தாவரத்தின் வேர்த்தொகுதி நுண்ணுயிர் செயற்பாட்டின் ஊடாக வலிமையடைவதுடன், நீர் கிடைக்கும் வரை தமது வளர்ச்சியைப் படிப்படியாகத் தக்கவைத்துக் கொள்வதற்கு அத்தாவரத்தால் முடிந்தது. அதற்கேற்ப இலங்கையில் இயற்கை விவசாயம் வறட்சியைத் தாங்கிக் கொள்ளக் கூடியது என்பது உறுதியாகியது. இது வெப்பவலயம் அல்லாத நாட்டுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனினும் இதனை வெற்றிகரமான மாதிரியாக எடுத்துக் காட்டக்கூடிய நாடு இலங்கை என்பதற்கு எந்தவொரு சந்தேகமுமில்லை. அதனால் இலங்கை இதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது.

(தொடரும்)

# இவர்கள்தான் அவர்கள்





விளையாட்டுப் போட்டிகளில் குழுநிலை, தனி நபர் என்று இரு பிரிவுகள் உண்டு. இதில் தனிநபர் விளையாட்டில் வெற்றி ஒருவருக்கு மாத்திரமே உரித்தானதாக அமையும்.

ஆனால், குழு விளையாட்டைப் பொறுத்தவரையில் வெற்றி என்பது அந்த அணியில் இடம்பிடித்துள்ள அனைவருக்கும் உரியது. அதேவேளை அந்த அணியின் வெற்றிக்குப் பெரிதும் கைகொடுத்த ஒருவர் ஆட்டநாயகனாகத் தெரிவாவார்.

நமக்குப் பழகிப்போன விளையாட்டான கிரிக்கெட்டிலும் அப்படித்தான். இதில், வீரர் ஒருவர் சிறப்பான ஆட்டத்தைக் காட்டும்போது, அந்த அணியின் வெற்றி வாய்ப்பு அதிகமாகக் காணப்படும். சில வேளைகளில் ஏனைய வீரர்களின் ஒத்துழைப்புச் சிறிதேனும் கிடைக்காத பட்சத்தில் அது தோல்வியிலும் முடிவடையும்.

கிரிக்கெட்டில் துடுப்பாட்டம், பந்து வீச்சு என இரண்டும் கருத்தில் கொள்ளப்படும்.

ஒருநாள் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள்தான் பெரும்பாலான ஆட்டநாயகன் விருதுகளைப் பெற்றுள்ளனர். ஆனால், டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சமமாக பந்துவீச்சாளர்களும் அசத்தியுள்ளனர்.

ஒருநாள் போட்டிகளில் ஆட்டநாயகன் விருதை அதிக தடவைகள் பெற்றவராக, கிரிக்கெட்டின் பல சாதனைகளைத் தன் வசப்படுத்தி வைத்திருக்கும் சச்சின் டெண்டுல்கர் விளங்குகிறார். இரண்டாமிடத்தில் இலங்கை அணியின் முன்னாள் அதிரடி வீரரான சனத் ஜெயசூரிய விளங்குகிறார்.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரையில் தென்னாபிரிக்காவின் ஜக்கலிஸ் முதலிடத்திலும், இலங்கையின் சுழல் மன்னன் முரளிதரன் இரண்டாமிடத்திலும் உள்ளனர்.

இதேவேளை, இந்த இரு வகைப் போட்டிகளின் வரிசையில் முதல் 10 இடங்களில் நடப்பு வீரர்கள் எவரும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






## ஒருநாளில் அதிக ஆட்டநாயகன்

| விருதுகள் | வீரர் (நாடு) | போட்டிகள் | காலம் |
|---|---|---|---|
| 62 | சச்சின் (இந்தியா) | 463 | 1989-2012 |
| 48 | சனத்ஜயசூரிய (இலங்கை) | 445 | 1989-2011 |
| 32 | ஜக்கலிஸ் (தெ.ஆ.) | 328 | 1996-2014 |
| 32 | ரிக்கி பொண்டிங் (ஆஸி.) | 375 | 1995-2012 |
| 32 | சாஹித் அப்ரிடி (பாக்.) | 398 | 1996-2015 |
| 31 | விவியன் ரிச்சட்ஸ் (மே.இ.தீ) | 187 | 1975-1991 |
| 31 | சௌரவ் கங்குலி | 311 | 1992-2007 |
| 31 | குமார் சங்கக்கார (இலங்கை) | 404 | 2000-2015 |
| 30 | பிறைன் லாரா (மே.இ.தீ.) | 299 | 1990-2007 |
| 30 | அரவிந்த டி சில்வா (இலங்கை) | 308 | 1984-2003 |

## டெஸ்டில் அதிக ஆட்டநாயகன்

| விருதுகள் | வீரர் (நாடு) | போட்டிகள் | காலம் |
|---|---|---|---|
| 23 | ஜக்கலிஸ் (தெ.ஆ.) | 166 | 1995-2013 |
| 19 | முரளிதரன் (இலங்கை) | 133 | 1992-2010 |
| 17 | வாசிம் அக்ரம் (பாக்) | 104 | 1985-2002 |
| 17 | ஷேன் வோர்ண் (ஆஸி.) | 145 | 1992-2007 |
| 16 | குமார் சங்கக்கார (இலங்கை) | 134 | 2000-2015 |
| 16 | ரிக்கி பொண்டிங் (ஆஸி) | 168 | 1995-2012 |
| 14 | அம்புருஸ் (மே.இ.தீ.) | 98 | 1988-2000 |
| 14 | ஸ்ரீவ் வோக் (ஆஸி) | 168 | 1985-2004 |
| 14 | சச்சின் (இந்தியா) | 200 | 1989-2013 |
| 13 | மஹேல (இலங்கை) | 149 | 1997-2014 |


Your career, piece of cake



William Angliss Institute | Specialist centre for foods, tourism, hospitality & events

பூரணமான நிச்சயத் தன்மையுடன் வர்த்தக ரீதியான சமையல், சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவ உலகினுள் நுழையுங்கள்.

எங்களது நிகழ்ச்சித் திட்டங்கள் விசேடமாக மாணவர்கள் அவர்களின் திறமையை மேம்படுத்தவும் செயன்முறை பயிற்சிகளில் சிறப்பினைப் பெற்று துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக திகழ்வதற்கு என்றே வடிவமைக்கப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட அவுஸ்ரேலிய தகைமைகளுடனான பட்டதாரி விருதிற்கு உங்களை தயார்ப்படுத்தும் வகையில் அவுஸ்ரேலிய கல்வித் திட்டங்களுக்கு அமைய The william Angliss Institute CHAM இல் மூன்று வித எதிர்காலத்திற்கு வழிகோலும் நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டுள்ளது. இலங்கையில் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்கள் அவுஸ்ரேலியாவில் The william Angliss Institute இல் Bacholor's in Degree தொடரலாம்.

Advanced Diploma of Hospitality Management (SIT60316)

Certificate IV in Commercial Cookery (SIT40516)

Advanced Diploma of Event Management (SIT60216)

இப்போது செம்டெம்பர் 2018 பதிவுகள் ஆரம்பம்.

For more information:

+9477 926 4632 / +9477 800 0368

info@cahm.lk

http://www.cahm.lk

SLIIT

Australia


இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 17.10.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.